13 லட்சம் பரிசு வெல்லுங்கள்
விவரம் உள்ளே...!

# உதயன்

விலை ரூ.20
பக்கம் 36

சுடர் 30 | கதிர் 091 | வள்ளுவர் ஆண்டு 2046 | மாசி 13 புதன்கிழமை 25-02-2015

# ஐ.நா. இலங்கை வந்து விசாரணை நடத்த வேண்டும்

## வலியுறுத்தி நேற்று ஆயிரக்கணக்கான மக்கள் யாழ்ப்பாணத்தில் திரண்டனர்



யாழ்ப்பாணம், பெப்ரவரி 25
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினர் இலங்கைக்கு வந்து விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். சாட்சியம் வழங்குவோருக்கு போதிய பாதுகாப்புடன் சர்வதேச விசாரணையாளர்கள் விசாரணை செய்ய வேண்டும். அதன் மூலமான முறையான அறிக்கை ஒன்றைத் தயாரிக்கவும், ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பித்த பின்னர் சர்வதேச விசாரணைக்கு இட்டுச் செல்வதற்கும் அவசியமான நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று ஆயிரக் கணக்கான மக்கள் யாழ்ப்பாணத்தில் பேரணியாகத் திரண் டனர். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத் தால் நடத்தப்பட்ட விசாரணையின் அறிக்கையை உடன் வெளியிட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உள்ள பரமேஸ்வரன் ஆலயத்துக்கு முன்பாக இருந்து இந்தப் பேரணி ஆரம்பமானது. ஆசிரியர் சங்கத்தினர், மாணவர் ஒன்றியத்தினர், சமயப் பெரியோர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், சிவில் அமைப்பினர், அரசியல்வாதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். பக்கம் 23

### வாள்வெட்டுக்கு இலக்காகி குடும்பஸ்தர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப்.25
கிளிநொச்சி விசுவமடு நாதன் திட்டப் பகுதியில் வாள் வெட்டுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான பிரபு என்று அழைக்கப்படும் தர்மலிங்கம் தர்ம ஈஸ்வரன் (வயது 32) என்பவரே உயிரிழந்தவராவார். பக்.23

### மகேஸ்வரி நிதியத்துக்கு எதிராக ஊர்வலம்

யாழ்ப்பாணம்,பெப்.25
மணல் ஏற்றி இறக்குவதற்காக மகேஸ்வரி நிதியத்தில் அங்கத்துவப் பணம் செலுத்திய பாரவூர்தி உரிமையாளர்கள் அவற்றை மீளத் தருமாறு கோரி நாளை மறு தினம் யாழ்.நகரில் கண்டன ஊர்வலம் ஒன்றை நடத்தவுள்ளனர். பக்.24

## ஜனநாயக போராட்டத்தில் புலிகளும் இணையுங்கள்

### வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரி.லிங்கநாதன் அழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 25
தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து அரசியல் போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார் வடக்கு மாகாணசபையின் உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"அமைச்சர் டெனீஸ்வரன், தனது கிராம அபிவிருத்தி அமைச்சினூடாக இனத்தின் விடுதலைக்கான போரின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ முன்வந்திருக்கும் வாழ்வாதார பக்கம் 24

### சென்னையில் ஆர்ப்பாட்டம்



சென்னை, பெப்.25
யாழ்.பல்கலைக் கழக சமூகம் நடத்திய பேரணிக்கு ஆதரவாக சென்னையில் உள்ள ஐ.நா. அலுவலகம் முன்பாக நேற்று முற்றுகை ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அதையடுத்து நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். பக்கம் 24

### பேரணிக்காக சபை அமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 25
ஐக்கிய நாடுகள் சபையின் முடிவுக்குக் கண்டனம் தெரிவித்து, யாழ். பல்கலைக்கழக சமூகத்தால் நடத்தப்பட்ட கவனவீர்ப்புப் பேரணியில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் பங்கெடுப்பதற்காக, சபை நடவடிக்கைகள் நேற்றுக் காலை இரு மணி நேரம் ஒத்தி வைக்கப்பட்டன.

வடக்கு மாகாணசபையின் 25 ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்றுக் காலை ஆரம்பமானது.

அதன்போது, உறுப்பினர் து.ரவிகரன், யாழ். பல்கலைக்கழக சமூகத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட பேரணியில் கலந்து கொள்வதற்காக வடக்கு மாகாண பக்கம் 23

## விசாரணை செய்யுங்கள் அறிக்கையை தடுக்காதீர்



யாழ்ப்பாணம், பெப். 25
சர்வதேசத்தை நம்பியே நாம் விசாரணையைக் கேட்டோம். மைத்திரி அரசு தேவையெனில் உண்மையைக் கண்டறியட்டும். அதன் பின்னர் நீதியைச் செலுத்தலாம். ஆனால் ஐ.நா. விசாரணை அறிக்கை தாக்கல் செய்யப்படுவதை எதற்காகத் தடுக்க வேண்டும்? நம்பிக்கை இல்லை என்பதுதானே அதன் அர்த்தம். இதனை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. விசாரணை அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். - இவ்வாறு வலியுறுத்தினார் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை. பக்கம் 23

### நெற்குவியலுடன் மோதி ஆசிரியர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப்.25
மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆசிரியர் ஒருவர் வீதியில் காயவிடப்பட்டிருந்த நெற் குவியலுடன் மோதி விபத்துக்குள்ளாகி உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு பூநகரி வாடியடிச் சந்தியில் நடந்துள்ளது. செங்குந்தா இந்துக்கல்லூரியின் ஆசிரியரான குமாரசுவாமி ஜெகதீஸ்வரன் (வயது 53) என்பவரே உயிரிழந்தவராவார். பக்கம் 24

### பலமுனை சவால்களை எதிர்கொள்ளும் சிறிசேன அரசு

பக்கம் 16

## முள்ளிவாய்க்காலில் நினைவுத் தூபி

### வடக்கு மாகாண சபை விரைவில் நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப். 25
முள்ளிவாய்க்காலில் நினைவுத் தூபி ஒன்றை அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் வடக்கு மாகாணசபையால் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்துடன் பண்டார வன்னியனுக்கும் முல்லைத்தீவில் சிலை அமைப்பதற்கும் வடக்கு மாகாண சபை நேற்றுத் தீர்மானித்தது.

வடக்கு மாகாண சபையின் 25 ஆவது அமர்வு நேற்று நடைபெற்றது. பக்கம் 24



அல்வாய் வேவிலந்தை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
மஹா சத சண்டி யாகம் - 2015

அம்பிகை அடியார்களே!
நிகழும் மங்கலகர ஜய வருஷம் மாசித்திங்கள் சுக்கிலபக்ஷ மாசி மகத்தை முன்னிட்டு மாசித்திங்கள் 10 ஆம் நாள் முதல் 20ஆம் நாள் வரை (22.02.2015- 04.03.2015) அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பிகைக்கு 100 முறை சண்டி பாராயணமும், 10 முறை சண்டி ஹோமமும் செய்வதற்குத் திருவருள் கைகூடியுள்ளது. ஆகவே அனைத்து அடியார்களும் 11 தினங்களும் காலை, மாலை நடைபெறுகின்ற பூஜை, மகாயாகம் இலட்சார்ச்சனைகளுக்கு வருகைதந்து உபயமேற்க மஹாகாளி, மஹாலக்ஷ்மி, மஹாசரஸ்வதி மற்றும் மஹாமுத்துமாரி திருவருளுக்கு ஆளாகும் வகையிலும், இலங்கையில் எப்பகுதியிலும் நடைபெறாத மஹா சத சண்டி ஹோமம் நம் ஆலயத்தில் இரண்டாம் முறையாக செய்வதற்கு இந்தியாவிலிருந்து சிறந்த சிவாச்சார்யார்களும், இலங்கையில் பிரபல்யம் பெற்ற சிவாச்சார்யார்களும் இணைந்து நடத்துவதற்கும் அம்பிகையின் திருவருள் பாலித்துள்ளது.

இவ்வருடம் 04.03.2015 புதன்கிழமை பிற்பகல் மஹா மகத்தை முன்னிட்டு அம்பிகை இன்பர்சிட்டியில் சமுத்திர தீர்த்தமாடி மாலையில் ஆலயம் திரும்புவார்

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவதானம்.
தொ.பே.இல. 021 226 4263

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ஆலய பரிபாலன சபையினரும் மற்றும் அம்பிகை அடியார்களும்

# ஐ.நா. அறிக்கை கோரி யாழ்ப்பாணத்தில் நேற்று நடந்த பேரணி




# சுமந்திரன் கொடும்பாவியால் மாகாண சபையில் குழப்பம்

யாழ்ப்பாணம், பெப். 25

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனின் கொடும்பாவி, யாழ். நகரில் எரிக்கப்பட்டமை தொடர்பில் வடக்கு மாகாண சபையில் நேற்றுச் சர்ச்சை தோன்றியது.

'சுயலாப அரசியல் நோக்கத்துக்காக காணாமற்போனோரின் உறவுகளின் கண்ணீரைச் சிலர் பயன்படுத்த முனைகின்றனர்' என்று வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் தெரிவிக்க, மாகாணசபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன், 'மக்களின் உணர்வுகளின் வெளிப்பாடே கொடும்பாவி எரிக்கக் காரணம்' என்று பதில் குறிப்பிட்டார். இதனால் மாகாண சபை அமர்வில் சர்ச்சை ஏற்பட்டது.

வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று இடம்பெற்றது. இதில் அமர்வு முடிவடையும் நேரத்தில், வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா. டெனீஸ்வரன் கருத்து ஒன்றை முன்வைத்தார். 'யாழ்.நகரில் கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் கொடும்பாவி எரிக்கப்பட்டது கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று. அத்துடன் வெட்கப்பட வேண்டியதும் கூட. காணாமற்போனோரின் உறவுகளின் கண்ணீரை, தங்களது சுயலாப குறுகிய அரசியல் நோக்கத்துக்காக சிலர் பயன்படுத்த முனைகின்றனர். இது தவறான விடயமாகும். எதிர்காலத்தில் இவ்வாறு இடம்பெறக் கூடாது' என்று தெரிவித்தார்.

அமைச்சர் பேசி முடித்ததும், உடனே எழுந்த திருமதி அனந்தி சசிதரன், போராட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தமிழ் தலைமைகளை கண்டித்திருந்தார்கள். அத்துடன் கொடும்பாவி எரிக்கப்பட்டது. யார் எரித்தது என்று எனக்குத் தெரியாது. ஆனால் அது அந்த மக்களின் உணர்வு. அதிருப்தி காரணமாக மேற்கொண்டிருக்கலாம். அந்த இடத்தில் நின்ற பெண்கள், என்னையே மோசமாகப் பேசியிருந்தார்கள். அவர்கள் உணர்ச்சி மேலீட்டால் சிலவற்றைச் செய்யும் போது எம்மால் கட்டுப்படுத்த முடியாது. இது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டது அல்ல என்று குறிப்பிட்டார்.

இதன் பின்னர் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், இதனை யார் செய்திருந்தாலும் தவறு தவறுதான் என்று குறிப்பிட்டார். பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன் தெரிவிக்கையில், எமது மக்களுக்காக சர்வதேச சமூகத்திடம் பேசும் தலைவர் ஒருவரது கொடும்பாவி எரித்தது தவறுதான். இது மக்கள் உணர்ச்சி மேலீட்டால் செய்யவில்லை. திட்டமிட்டே செய்யப்பட்டது என்று குறிப்பிட்டார்.

(த-5)

# தந்தையை கைவிட்ட மகளுக்கு எதிராக மனு

சொத்துக் கொடுக்காத தந்தையை மகள் பொறுப்பேற்க மறுத்ததால் முதியவரின் சடலம் அரச செலவில் அடக்கம் செய்ய பருத்தித்துறைப் பொலிஸார் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

தந்தையைக் கைவிட்ட பிள்ளைகளுக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

ஆனைக்கோட்டை குருசு மதவடியைச் சேர்ந்த 80 வயதுடைய முதியவர் ஒருவர் செல்வச் சந்நிதி ஆலயத்தில் சுகவீன நிலையில் இருந்ததால் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அரவரது மகளுக்கு அறிவித்தபோது, தனக்கு தந்தை சீதனம் தரவில்லையெனக் கூறி சடலத்தைப் பொறுப்பேற்க அவர் மறுத்துள்ளார். இந்த முதியவருக்கு இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளதாகவும், ஒரு மகள் தான் விரும்பிய இடத்தில் திருமணம் செய்ததால் தந்தை – மகள் உறவு அறுந்ததாகவும் கூறப்பட்டது.

இந்த வயோதிபரைப் பராமரிக்க மற்ற மகள் விரும்பாததால் இவரது பேரன் அண்மையில் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் அவரைக் கைவிட்டுச் சென்றுள்ளார். அங்கு அநாதரவாகக் காணப்பட்ட முதியவரை கைதடி முதியோர் இல்லத்தில் இணைப்பதற்கான ஏற்பாடுகளை அப்பகுதி கிராம அலுவலர் மேற்கொண்டுள்ளார். இந்த நிலையில் முதியவர் சுகவீனமடையவே மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கு உயிரிழந்தார்.

சடலத்தைப் பொறுப்பேற்க பிள்ளைகள் முன்வராததால் அரச செலவில் அடக்கம் செய்ய பொலிஸார் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதுடன் தந்தையைக் கைவிட்ட பிள்ளைகளுக்கு எதிராக நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(த-9)

# எரிந்த நிலையில் பெண்ணின் சடலம்

மன்னார், பெப் 25

மன்னார் எழில் நகர் கிராமத்தில் கைவிடப்பட்ட நிலையில் உள்ள வீடு ஒன்றிலிருந்து எரியுண்ட நிலையில் பெண் ஒருவருடைய சடலத்தை நேற்றுச் செவ்வாய்க்கிழமை மீட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பெண் மன்னார் சின்னக் கடைப் பகுதியை வதிவிடமாகக் கொண்ட செபஸ்தியான் திரேசா (வயது–65) என அவருடைய உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

இவர் எழில் நகர் பகுதியில் தமது உறவினர்களுடன் வசித்து வந்த நிலையில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை வீட்டில் இருந்து வெளியில் சென்றுள்ளார். இவருக்கு ஒரு கால் இயலாத நிலையில் கம்பு ஊன்றியே சென்றுள்ளார். வெளியில் சென்ற குறித்த பெண் வீடு திரும்பாமை குறித்து உறவினர்கள் தேடியுள்ளனர்.

இதன்போது மன்னார் எழில் நகர் கிராமத்தில் கைவிடப்பட்ட நிலையில் உள்ள வீடு ஒன்றிலிருந்து எரியுண்ட நிலையில் குறித்த பெண் சடலமாக மீட்கப்பட்டார். அருகில் மண்ணெண்ணையுடன் போத்தலும் காணப்பட்டது.

மன்னார் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

(த-56)

CIVIL ENGINEERING | 0777 692318
JAFFNA





13 லட்சங்கள் WOW! கிரிக்கெட் கொண்டாட்டம்
கூப்பன்களை இன்றே நிரப்பி அனுப்புங்கள், பணத்தை அள்ளுங்கள்

## துளித்துளியாய்

★ நெருக்கடியான தருணங்களிலும் பதற்றமடையாமல் அமைதியாக இருந்தது, இழந்த திறனை மீட்க உதவியதாக இந்திய அணியின் தொடக்க வீரர் ஷிகர் தவான் கூறியுள்ளார்.

★ நட்சத்திர ரென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர், உலகக் கிண்ணத்தில்

பக்கம் 04

# ருத்ர தாண்டவம்



அடி என்றால் இப்டியொரு மரண அடியைப் பார்த்திருக்க முடியாது. தூங்கிக் கிடந்த சிங்கத்தை சீண்டி எழுப்பி விட்டது சிம்பாப்வே. அதிரடிகளின் மறுநாமமாக இருந்த கெய்ல், இந்தத் தொடரில் கொஞ்சம் அடக்கி வாசித்திருந்தார். சிம்பாப்வே நேற்று போட்டுக் கொடுத்து, சும்மா இருந்தவனை 'போர்மில்' கொண்டு வந்து விட்டது.

ஆனாலும் சிம்பாப்வே, மேற்கிந்தியத்தீவுகளுக்கு சற்று நெருக்கடி கொடுத்து ஓட்டங்களைக் குவித்தது. தீவுகள் என்னதான் முழங்கியிருந்தாலும், சிம்பாப்வே பதிலுக்கு விரட்டி – இறுதியில் 73 ஓட்டங்களால் தோற்றது.

அயர்லாந்தே வென்று விட்டதாம் நாமும் ஒரு தடவை அசைத்துத்தான் பார்ப்போமே என்ற எண்ணத்தில் களமிறங்கியது சிம்பாப்வே. பாகிஸ்தானை ஆட்டிப் படைத்த தீவுகளுக்கு சிம்பாப்வே எம்மாத்திரம்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்றது மே.இ.தீவுகள். மறுபேச்சின்றி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானம். வந்தார்கள் களத்துக்கு. கெய்ல் – ஸ்மித் இணை. இரண்டாவது பந்தில் ஸ்மிதின் இலக்கு தகர்க்கப்பட்டது. வீழ்த்திய சந்தோசத்தில் பன்ஜங்காரா கொஞ்சம் ஓவராகத்தான் ஆடினார்.

இந்தக் கணத்தில், அயர்லாந்துடனான ஆட்டம் தீவுகளின் வீரர்களுக்கு வந்து சென்றிருக்கும். வந்தார் சாமுவேல்ஸ் இணைந்தார் கெய்லுடன். ஆரம்பம் முதலே நிதானம். கெய்ல் இந்தத் தொடர் முழுவதும் காட்டிய அதே நிதானம்.

இலக்கு வீழ்த்தப்படவில்லை. ஆனால் ஓட்ட வேகமும் இல்லை. 141 பந்துகளிலேயே அணி நூறு ஓட்டங்களைக் கடந்தது. நிதானமாக நகர்ந்தது. கெய்ல் பக்கம் காற்று வீசியது. நிதானத்தின் பயனாக 105 பந்துகளில் சதம் கடந்தார். சதம் கடந்ததும் வழக்கமான தாண்ட வம் ஆரம்பமானது. கெய்லின் பக்கம் 04

## அட என்ன ஒரு பொருத்தம்

உலகக் கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் முதலாவது இரட்டைச் சதத்தை கிறிஸ் கெய்ல் நேற்றுப் பெற்றுக் கொண்டார். சரியாக இதே நாள் – 5 வருடங்களுக்கு முன்னர், அதாவது 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி, ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் முதலாவது இரட்டைச் சதம் சச்சின் டெண்டுல்கரினால் பெற்றுக் கொள்ளப்பட்டது. இரண்டும் ஒரே மாதம் ஒரே நாளில் நிகழ்ந்துள்ளது.

கடந்த 2010 ஆம் பக்கம் 04

## அடித்து நொருக்க காத்திருக்கின்றேன்

இன்று நான் ஆடிய ஆட்டத்தைக் கைவிட விரும்பவில்லை. இந்தியா, தென்னாபிரிக்க அணிகளுடனான ஆட்டத்தில் இதே போன்று விளையாடுவதற்காக காத்திருக்கின்றேன். இவ்வாறு இரட்டைச் சதம் அடித்த கெய்ல் நேற்றுத் தெரிவித்தார்.

முதல் இரட்டைச் சதம் எடுத்தது பற்றி எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது. ரோஹித் சர்மா எப்போது ஒருநாள் கிரிக்கெட்டில் இரண்டு, இரட்டைச் சதங்களை எடுத்தாரோ அப்போது முதல் நாமும் ஒரு இரட்டைச் சதத்தை எடுக்க வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது.

எனக்கு நானே கேட்டுக் கொண்டேன், 'ஏன் சீரியசாக பக்கம் 04

## ஓய்வு இப்போது இல்லை



சர்வதேச ஒருநாள் மற்றும் ரி–20 ஆட்டங்களில் இன்னும் 2 அல்லது 3 வருடங்கள் என்னால் விளை யாட முடியும் என்று திலகரட்ன டில்ஷான் தெரிவித்துள்ளார்.

நடப்பு உலகக் கிண்ணத் தொடரோடு இலங்கை அணியின் மூத்த வீரர்களான குமார் சங்ககார மற்றும் மஹேல ஜெயவர்த்தன ஆகியோர் சர்வதேச ஒருநாள் தொடரில் இருந்து ஓய்வுபெறவுள்ளனர். மேலும் மற்றொரு அனுபவ வீரரான திலகரட்ன டில்ஷானும் தனது ஓய்வை அறிவிப்பார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில் தற்போது தனக்கு ஓய்வு பெறும் எண்ணம் இல்லை என்று ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டில்ஷான் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில், ஒரு நாள் மற்றும் ரி–20 ஆட்டங்களில் தொடர்ந்து விளையாடும் எண்ணம் எனக்கிருக்கிறது.

உலகக் கிண்ணத் தொடர் முடிந்த பின்னர் இது குறித்து, இலங்கை அணித் தலைவர் மற்றும் அணி நிர்வாகத்திடம் நான் கலந்துரையாடவுள்ளேன். அனுபவ வீரர்களான ஜெயவர்த்தன மற்றும் சங்ககார பக்கம் 04

## இன்னும் அதிகமாக எதிர்பார்க்கின்றோம்



நடப்பு உலகக் கிண்ணத் தொடரில், இந்திய அணி தனது முதல் 2 லீக் ஆட்டங்களிலும் பலம் வாய்ந்த பாகிஸ்தான் மற்றும் தென்னாபிரிக்க அணிகளை வீழ்த்தியது மகிழ்ச்சி அளித்தாலும், இன்னும் திருப்தி ஏற்படவில்லை. டோனி தலைமையிலான இந்திய அணியிடம் இருந்து இன்னும் அதிகமாக எதிர்பார்க்கிறேன், என்று நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளார்.

இது குறித்து மெல்போர்ணில் அவர் கூறியதாவது, உலகக் கிண்ணத்தில் இந்திய அணியின் இது வரை யிலான ஆட்டம் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது. இந்த வெற்றிகளால் மகிழ்ச்சி அடைந்தாலும், இன்னும் நான் திருப்தி அடையவில்லை. இந்திய அணியிடம் இருந்து இன் னும் அதிகமாக எதிர்பார்க்கிறேன். இந்திய வீரர்கள் இந்த வெற்றியை தொடர வேண்டும்.

அவர்களால் இன்னும் சிறப்பாக ஓட்டங்களைக் குவிக்க முடியும். ஏனெனில், அவர்களின் உண்மையா திறமை பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். தென்னாபிரிக் காவுக்கு எதிரான ஆட்டத்தில் பக்கம் 04

## சீறிப் பாயும் அயர்லாந்து

2019 உலகக் கிண்ணத் தொடருக்கு முதல் பத்து அணிகள் மட்டுமே விளையாடும், ஐ.சி.சி திட்டத்தின் மீது பரவலான விமர்சனங்கள் எழுந்து வருகின்றன.

இந்த நிலையில் அயர்லாந்து அணித் தலைவர் போர்ட்டர்பீல்ட், ஐ.சி.சி. பக்கம் 04



கெய்ல் ஸ்கோர் போட்டுடன்

## எத்தனை சாதனைகள் ?

சிம்பாப்வே அணிக்கு எதிரான உலகக் கிண்ண லீக் ஆட்டத்தில், மேற்கிந்திய தீவுகள் அணியின் கிறிஸ் கெய்ல் இரட்டைச் சதம் விளாசி உலக சாதனை படைத்தார்.

இதன் மூலம் உலகக் கிண்ண தொடரில் முதல் இரட்டைச் சதம் அடித்த வீரர் என்ற சாதனையை கெய்ல் எட்டினார்.

மேலும் அதிவேகமாக அடிக்கப்பட்ட முதல் இரட்டை சதம் என்ற சாதனையையும் கெய்ல் படைத்தார்.

கெய்ல் – சாமுவேல்ஸ் இணைந்து 372 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகக் குவித்தனர். ஒருநாள் ஆட்டங்களில் அதிகபட்ச இணைப்பாட்டம் இதுவாகும்.

ஒருநாள் ஆட்டத்தில் 16 சிக்ஸர்கள் என்ற ரோஹித் சர்மா மற்றும் ஏபி டிவில்லியர்ஸின் சாதனையை கெய்ல் சமன் செய்தார். (5–ரி)

## இப்படியெல்லாம் வீரரா?

உலகக் கிண்ணத் தொடரின் போது தனது மனைவியை கழிப்பறைக்குள் ஒளித்து வைத்திருந்ததாக, பாகிஸ்தானின் அணியின் முன்னாள் வீரர் சக்லைன் முஷ்டாக் தெரிவித்துள்ளார்.

கடந்த 1999 ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்றது. இந்த தொடரின் போது பாகிஸ்தான் அணி வீரர்கள், தங்களது மனைவிகளை உடன் அழைத்து சென்றிருந்தனர்.

இந்த நிலையில் பாகிஸ்தான் சிறப்பாக விளையாடியதால், சூப்பர் சுற்றுக்கு முன்னேறியது. எனவே அணி நிர்வாகம் வீரர்கள், அவர்களது மனைவியரை நாட்டிற்கு திருப்பி அனுப்ப உத்தர விட்டது.

உடனே அனைத்து வீரர்களும் மனைவிகளை திருப்பி அனுப்ப, அந்த அணியின் சுழற்பந்து வீச்சாளர் சக்லைன் முஷ்டாக் மட்டும் அவரது மனைவி சனாவை பாகிஸ்தானுக்கு திருப்பி அனுப்பாமல் தனது அறைக்குள்ளேயே வைத்திருந்தார்.

மேலும் அணியின் மேலாளரோ அல் லது பயிற்சியாளரோ திடீரென வந் தால், பீரோ அல்லது கழிப்பறைக்குள் ஒளிந்து கொள்ளுமாறு கூறியிருக் கிறார். இந்த விடயம் மற்ற வீரர்களுக்கும் தெரியும் என்று சக்லைன் தெரிவித்துள்ளார். (5–ரி)

## ஆஸிக்குத்தான் கிண்ணமாம்

உலகக் கிண்ணத்தை எந்த அணி வெல்லும் என்பது தொடர்பாக நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் ஆஸ்திரேலியா முதலிடத்தில் உள்ளது.

2015 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை வெல்லப் போவது யார் என்பது குறித்து ஆஸ்திரேலிய செய்தி நாளிதழான சிட்னி மோர்னிங் ஹெரால்ட் ரசிகர்களிடம் கருத்துக் கணிப்பொன்றை நடத்தியது.

இணையதளம் மூலம் நடத்தப்பட்ட இந்தக் கருத்துக் கணிப்பில், 50 ஆயிரம் பேர் கலந்து கொண்டனர். வாக்களித்தவர்களில் 37 சதவீதம் பேர் ஆஸ்திரேலியா வெற்றி பெறும் என்றும், 22 சதவீதம் பக்கம் 04

| குழு A | வெ | தோ | ச.நி | புள்ளி |
|---|---|---|---|---|
| நியூஸிலாந்து | 3 | 0 | 0 | 6 |
| ஆஸ்திரேலியா | 1 | 0 | 1 | 3 |
| பங்களாதேஷ் | 1 | 0 | 1 | 3 |
| இலங்கை | 1 | 1 | 0 | 2 |
| இங்கிலாந்து | 1 | 2 | 0 | 2 |
| ஆப்கானிஸ்தான் | 0 | 2 | 0 | 0 |
| ஸ்கொட்லாந்து | 0 | 2 | 0 | 0 |

| குழு B | வெ | தோ | ச.நி | புள்ளி |
|---|---|---|---|---|
| இந்தியா | 2 | 0 | 0 | 4 |
| மே.இ.தீவுகள் | 2 | 0 | 0 | 4 |
| அயர்லாந்து | 1 | 0 | 0 | 2 |
| சிம்பாப்வே | 1 | 2 | 0 | 2 |
| தென்னாபிரிக்கா | 1 | 1 | 0 | 2 |
| ஐ.அ.இராச்சியம் | 0 | 1 | 0 | 0 |
| பாகிஸ்தான் | 0 | 2 | 0 | 0 |

### அதிகூடிய ஓட்டங்கள்

| | | |
|---|---|---|
| 255 | கெயில் (மே.இ.தீவுகள்) | 3 ஆட்டங்கள் |
| 210 | தவான் (இந்தியா) | 2ஆட்டங்கள் |
| 192 | சாமுவேல்ஸ் (மே.இ.தீவுகள்) | 3 ஆட்டங்கள் |
| 160 | மில்லர் (தென்னாபிரிக்கா) | 2 ஆட்டங்கள் |
| 160 | வில்லியம்ஸ் (சிம்பாப்வே) | 3ஆட்டங்கள் |



### அதிகூடிய இலக்குகள்

| | | |
|---|---|---|
| 11 | சவுத்தி (நியூஸிலாந்து) | 3 ஆட்டங்கள் |
| 9 | ரெயிலர் (மே.இ.தீவுகள்) | 3 ஆட்டங்கள் |
| 8 | பின் (இங்கிலாந்து) | 3 ஆட்டங்கள் |
| 7 | டேவி (ஸ்கொட்லாந்து) | 2 ஆட்டங்கள் |
| 6 | சமி (இந்தியா) | 2 ஆட்டங்கள் |



# ஓய்வு இப்போது இல்லை

ஆகியோர் ஒருநாள் தொடரில் இருந்து ஓய்வு பெறப் போகிறார்கள். எனவே, எனது அனுபவம் இலங்கையணிக்கு கைகொடுக்கும் என நான் நம்புகின்றேன்.

தற்போதைய எனது உடல் நிலை மற்றும் தகுதியை வைத்துக் கொண்டு, என்னால் இன்னும் இரண்டு, மூன்று வருடங்கள் விளையாட முடியும். எனக்கு உடற் தகுதி காணப்படாத பட்சத்தில் ஓய்வு பெற்று விடுவேன் என்று குறிப்பிட்டுள்ளார். (5-ரி)

# இன்னும் அதிகமாக எதிர்பார்க்கின்றோம்

துடுப் பாட்டம் மிக அருமையாக அமைந்திருந்தது. கடைசி கட்ட பந்துப் பரிமாற்றங்களில் இன்னும் கொஞ்சம் ஓட்டங்கள் சேர்த்திருக்கலாம். ஆட்டத்தின் எந்தக் கட்டத்திலும் தென்னாபிரிக்க அணியால் ஆதிக்கம் செலுத்தமுடியவில்லை.

ஷிகர் தவான் மிகச் சிறப்பான ஆரம்பத்தைக் கொடுத்துள்ளார். இந்த திறனை அவர் தொடர வேண்டும் என்று விரும்புகிறேன். இந்த இன்னிங்ஸ்களால் அவரது தன்னம் பிக்கை வெகுவாக அதிகரித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆட்டத்தில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவர் அவர் என்று நான் ஏற்கனவே கணித்திருந்தது உண் மையாகிவிட்டது.

இந்திய அணி துடுப்பாட்டத்தில் மிகவும் விசேடமான விடயம் என்ன வென்றால், நான்காவது வீரராக வந்து அமர்க்களப்படுத்திய ரஹானே தான். கொஞ்சம் கூட தடுமாறாமல் சந்தித்த முதல் பந்தில் இருந்தே இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஓட்ட வேகம் அதிகரிக்க உதவினார். ஸ்ரெயின் பந்துவீச்சில் அவர் அடித்த ஷொட் அற்புதமாக இருந்தது.

உலகக் கிண்ணம் என்பது பெரிய தொடர். அதில் சிறப்பாக தொடங்கி யிருப்பது என்பது அரைக் கிணறு தாண்டியது போலதான். இன்னும் போக வேண்டிய தூரம் அதிகம். வெற்றியை தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் இலக்கை அடைய முடியும்.

தொடர்ந்து தன்னம்பிக்கையுடன் விளையாடினால் வெற்றி என்பது ஒரு பழக்கமாகவே மாறிவிடும். நெருக்கடியான கட்டத்திலும் பதற்றம் அடையாமல் விளையாட அது வெகுவாக உதவும் – என்றார் சச்சின். (5-ரி)

## சீறிப் பாயும் அயர்லாந்து

நிர்வாகிகளின் மனநிலை பற்றி மிகுந்த வருத்தம் தெரிவித்துள்ளார். தங்களைப் போன்ற அணிகளுக்கான வாய்ப்புகள் ஏற்கனவே குறைக்கப்பட்டு வரும் நிலையில் உலகக் கிண்ண ஆட்டங்களில் மட்டுமே அந்த அணிகள் ஆடி வருகின்றன.

தற்போது அதிலிருந்தும் இந்த வளரும் அணிகளை கழற்றி விடும் முடிவு குறித்து போர்ட்டர்பீல்ட் கூறும்போது, வெறும் முதல் பத்து அணிகளுக்கு மட்டுமே நடத்தப்பட்டால் அதனை உலகக் கிண்ணம் என்று அழைக்க முடியாது.

நாங்கள் போட்டித் தொடர்களுக்கு வரும் போதெல்லாம் அணிகளின் எண்ணிக்கையை குறைப்பது பற்றி பேச்சு எழுவது வெறுப்பைக் கிளப்புகிறது. விளையாட்டு உலகில் கிரிக்கெட் மட்டுமே இப்படி நடத்தப்படுகிறது. ஐ.சி.சி. இவ்வாறு தான் விடயங்களை அணுகுகிறது என்பது எங்களுக்கு ஏமாற்றத்தையும் வெறுப்பையும் அளிக்கிறது. கடந்த 4 ஆண்டுகளில் முதன்மை நிலையில் உள்ள 8 அணிகளுக்கு எதிராக 9 ஒரு நாள் சர்வதேச ஆட்டங்களில் மட்டுமே விளையாடியுள்ளோம். முதன்மை அணிகளுடன் ஆண்டுக்கு 2 ஆட்டங்கள் என்பது எப்படி போதுமானதாக இருக்கும் ? இது தான் கிரிக்கெட்டை வளர்க்கும் முறையா? ஆட்டத் தைக் குறுக்கிக் கொண்டே போவதில் என்ன பயன்? கிரிக்கெட்டை விரிவுபடுத்துவதுதான் அவசியம் – என்றார். (5-ரி)

## ஆஸிக்குத்தான் கிண்ணமாம்

பேர் நியூஸிலாந்து வெற்றி பெறும் என்றும், 21 சதவீதம் பேர் இந்தியா வெற்றி பெறும் என்றும் கூறியுள்ளனர்.

சிறிய அணிகளான ஆப்கானிஸ்தான், ஸ்கொட்லாந்து, அயர்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளில் ஒன்று என்று 9 சதவிகிதம் பேர் வாக்களித்துள்ளனர்.

மிகப் பெரிய கனவுடன் இருந்த தென்னாபிரிக்க அணி 8 சதவீத வாக்குகள் மட்டுமே பெற்று ஐந்தாம் இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. இதற்கு அடுத்த படியாக பாகிஸ்தான், இலங்கை, இங்கிலாந்து அணிகள் உள்ளன. (5-ரி)

## அட என்ன ஒரு பொருத்தம்

ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி, தென்னாபிரிக்காவுக்கு எதிராக இந்தியாவில் நடந்த ஒரு நாள் ஆட்டத்தில் சச்சின் டெண்டுல்கர் இரட்டைச் சதம் விளாசினார். இதுவே ஒரு நாள் கிரிக்கெட்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட முதலாவது இரட்டைச் சதமாகும்.

இந்த நிலையில், நேற்று (பெப்ரவரி 24) உலகக் கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் முதலாவது இரட்டைச் சதம், சிம்பாப்வே அணிக்கு எதிராக கிறிஸ் கெய்ல் பெற்றுக் கொண்டார்.

இரண்டு ஒரே நாளில் நடந்துள்ளமை அதிசயமான ஒரு பொருத்தம்தான். (5-ரி)

## துளித்துளியாய்

இந்திய அணிக்கு ஆதரவாக இருப்பது போல வெளியான ஒளிப் படம் சர்ச்சையை கிளப்பியது. இதற்காக தனது ரசிகர்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்வதாக அவர் அறிவித்துள்ளார்.

★ அணியின் நலனுக்காக துடுப்பாட்ட வரிசையில் எந்த இடத்திலும் களமிறங்க தயா ராக இருப்பதே ரஹானேயின் முக்கியமான பலமாக விளங்குகிறது. அண்மைக் காலமாக அவரது ஆட்டம் வெகுவாக முன்னேறி உள்ளது, என்று அணித் தலைவர் டோனி பாராட்டி உள்ளார். (5-ரி)

## அடித்து நொருக்க காத்திருக்கின்றேன்

ஆட முடியாதா?' என்று. இந்த இரட்டை சதத்திற்காக கடவுளுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். நான் ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என்று ஏகப்பட்ட ரசிகர்கள் விரும்பினர். என் செல்பேசி மற்றும் ருவிட்டர் கணக்குகளில் எனக்கு குறுஞ்செய்திகள் வந்தவண்ணம் இருந்தன.

இப்படிப்பட்ட நெருக்கடியை நான் இதுவரை என் வாழ்நாளில் கண்டதில்லை. கடைசியில் அவர்கள் பேசுவதற்கு ஒரு இன்னிங்ஸை ஆடிக் கொடுத்து விட்டேன். தொடக்கத்தில் கொஞ்சம் மந்தமாக இருந்தது. பிட்சில் பந்துகள் கொஞ்சம் தாழ்வாக வந்தன. நான் சவால் என்ற காளையின் கொம்புகளைப் பிடித்துப் போராடினேன். அதன் பிறகு பந்து வீச்சாளரை 'பிக்' செய்து அடிக்கத் தொடங்கினேன்.

நான் பல சமயங்களில் காயத்தினால் அவதியுற்று வந்துள்ளேன் என்பது நிறைய பேருக்குத் தெரியாது. நானும் இனி இளம் வயதினன் அல்ல. வயது என்னுடன் சேர்ந்தே அதிகமாகி வருகிறது. ஆனாலும், இன்று ஆடிய ஆட்டத்தின் உத்வேகத்தை நான் தவற விட விரும்பவில்லை. எஞ்சிய ஆட்டங்களில் மோதுவதற்கு காத்திருக்கின்றேன் – என்றார். (5-ரி)




எங்ககிட்டையும் பட் இருக்கு. நாங்களும் பட்ஸ்மன் தான். நாங்களும் இறங்கி டபுள் செஞ்சரி அடிப்பம்.

# ருத்ர தாண்டவம்

2015 உலகக் கிண்ணம்

மேற்கிந்தியகத் தீவுகள் எதிர் சிம்பாவே
73 ஓட்டங்களால் மே.இ.தீவுகள் வெற்றி

நாணயச் சுழற்சி: மே.இ.தீவுகள்

மேற்கிந்தியத் தீவுகள்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| சிமித் | B பனியன்கரா | 0 | 02 | 0 | 0 |
| கெயில் | C சிக்கும்புரா B மஷகட்சா | 215 | 147 | 10 | 17 |
| சாமுவேல்ஸ் | ஆட்டமிழப்பில்லை | 133 | 156 | 11 | 03 |
| உதிரிகள் | | 24 | | | |

TOTAL: 372/2 (50)

1-0 (சிமித்), 2-372 (கெயில்)

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| பனியன்கரா | 09 | 82 | 01 | 0 |
| சரறா | 9.4 | 74 | 0 | 0 |
| வில்லியம்ஸ் | 05 | 48 | 0 | 0 |
| சிக்கும்புரா | 07 | 44 | 0 | 0 |
| ரஸா | 10 | 45 | 0 | 01 |
| காமுன்கோஸி | 03 | 37 | 0 | 0 |
| மஷகட்சா | 6.2 | 39 | 01 | 0 |

சிம்பாவே

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ரஸா | C சிம்மொன்ஸ் B ஹோல்டர் | 26 | 20 | 05 | 0 |
| ஷக்கபவ | LBW B ஹோல்டர் | 02 | 05 | 0 | 0 |
| மஷகட்சா | LBW B ரெயிலர் | 05 | 14 | 0 | 0 |
| ரெயிலர் | C ரம்டின் B சாமுவேல்ஸ் | 37 | 48 | 02 | 01 |
| வில்லியம்ஸ் | C சிமித் B ஹோல்டர் | 76 | 61 | 09 | 0 |
| எர்வின் | B கெயில் | 52 | 41 | 07 | 01 |
| மட்சிஹென்றி | LBW B கெயில் | 19 | 23 | 02 | 0 |
| சிக்கும்புரா | C கெயில் B ரெயிலர் | 21 | 20 | 01 | 01 |
| பனியன்கரா | C ரம்டின் B ரெயிலர் | 04 | 08 | 0 | 0 |
| சரறா | B மில்லர் | 16 | 20 | 01 | 0 |
| காமுன்கோசி | ஆட்டமிழப்பில்லை | 06 | 09 | 01 | 0 |
| உதிரிகள் | | 25 | | | |

TOTAL: 289 (50)

1-11 (சக்கபவா), 2-25 (மசகட்சா), 3-46 (ரசா), 4-126 (ரெயிலர்), 5-177 (வில்லியம்ஸ்), 6-226 (எர்வின்), 7-239 (மட்சிஹென்றி), 8-254 (பனியன்கரா), 9-266 (சிக்கும்புரா), 10-289 (சரறா)

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ரெயிலர் | 10 | 38 | 03 | 0 |
| ஹோல்டர் | 07 | 48 | 03 | 0 |
| மில்லர் | 6.3 | 48 | 01 | 0 |
| சாமுவேல்ஸ் | 09 | 59 | 01 | 0 |
| ரசல் | 05 | 44 | 0 | 0 |
| சமி | 01 | 08 | 0 | 0 |
| கெய்ல் | 06 | 35 | 02 | 0 |

ஆட்ட நாயகன்: கெய்ல்

உண்மையான முகம் மீண்டும் ஒருதடவை சிம்பாப்வேயின் கண்முன்னால் அரங்கேறியது. மைதானத்தின் நாலாபுறமும் ஆறுகள், நான்குகள் எகிறிப்பாய்ந்தன. கெய்லுக்கு இணையாக சாமுவேல்சும் தனது பங்கிற்கு வேடிக்கையை காட்டிக்கொண்டிருந்தார். அணியின் ஓட்டங்கள் கிடுகிடுவென பறந்து கொண்டிருந்தது. எல்லை வெளியே பந்துகள் விழுவது வாடிக்கையாகிப் போனது. சதம் கடந்த பின்னர் அடுத்த 33 பந்துகளில் இரட்டைச்சதம் விளாசினார்; கெய்ல்.

மறுமுனையில் நிதானமாக ஆடி கெய்லுக்கு வாய்ப்புக்களை வழங்கிக் கொண்டிருந்த சாமுவேல்ஸ் சதம் கடந்தார். சிம்பாப்வே பந்து வீச்சாளர்களால் எதனையும் செய்துவிட முடியவில்லை. இணைப்பாட்டத்தை பிரிக்க மேற்கொள்ளப்பட்ட எல்லா வியூகங்களும் சிதறடிக்கப்பட்டன. வட்மோர் பாவம். கெய்லின் சாதனைக்கு கைதட்டுவதைத் தவிர வேறு எதுவும் செய்யமுடியவில்லை.

இறுதிப் பத்து பந்துப் பரிமாற்றங்களில் 150 ஓட்டங்கள் எகிறியிருந்தது. 215 ஓட்டங்களை பெற்றிருந்த கெய்ல் இறுதிப்பந்தில் ஆட்டமிழந்ததன் மூலம் இணைப்பாட்டம் 372 ஓட்டங்களுடன் பிரிக்கப்பட்டது.

தோல்வி உறுதி. ஆனாலும் சற்று போராடிப் பார்க்கலாம் என்ற நிலையில் களமிறங்கிய சிம்பாப்வே அணிக்கு, முன்னிலை வீரர்களான சக்கபாவ, மசகட்சா, ரசா ஏமாற்றி பவிலியன் திரும்பினர். சிம்பாப்வே அணி 3 இலக்குகள் இழப்புக்கு 46 ஓட்டங்களை பெற்று கௌரவமான தோல்விக்காக போராடிக் கொண்டிருந்தது.

தொடர்ந்து வந்த ரெய்லர் வில்லியம்சுடன் இணைந்து தாக்குப்பிடிக்க சிம்பாப்வே அணி சற்று வலுவான நிலையை நோக்கி நடைபோட ஆரம்பித்தது. இவர்கள் கெய்லுக்கு நிகராக அதிரடி இல்லை. ஆனாலும் அனல் பறக்கும் ஆட்டத்தை ஆடிக்காட்டினர். அதிரடியாக செயற்பட்ட வில்லியம்ஸ் 39 பந்துகளில் அரைச்சதம் கடந்து அசத்தினார். 76 ஓட்டங்களுடன் வில்லியம்ஸ் வெளியேறினார். மறுமுனையில் எர்வின் சிறப்பான ஆட்டம். ஒருவர் போனால் மற்றவர் வருவார் என்ற அனுபவ அணிகளுக்கு நிகரான ஆட்டம். அதிரடி தொடர்ந்தது. எர்வின் அரைச் சதம் கடந்ததும் வெளியேற்றம். பின்வரிசை வீரர்கள் கடமைக்கு வந்து செல்ல சிம்பாவே அணி 289 ஓட்டங்களுக்குள் சுருண்டு 73 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

(5-ரி)

# இரட்டிப்பு மகிழ்ச்சி



முதல் உலகக் கிண்ணத் தொடரில் சதம் அடித்தது மகிழ்ச்சி. இருப்பினும், தென்னாபிரிக்க அணியை உலகக் கிண்ணத் தொடரில் முதன் முறையாக வீழ்த்தியது, அதை விட பெரிய உற்சாகம் தருகிறது', என்று ஷிகர் தவான் தெரிவித்தார்.

மோசமான திறன் காரணமாக ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான, கடைசி டெஸ்ட் ஆட்டத்துக்கான இந்திய அணியில் இருந்து நீக்கப்பட்டார் ஷிகர் தவான். பின்னர் நடந்த முத்தரப்பு ஒருநாள் தொடரிலும் ஏமாற்றினார். ஆஸ்திரேலிய மண்ணில் டெஸ்ட் (25, 9, 24, 81, 28, 0), முத்தரப்பு தொடர் (2, 1, 8, 38) என்று, ஷிகர் தவான் கடைசியாக களமிறங்கிய 10 இன்னிங்சில் மொத்தமே 216 ஓட்டங்கள் தான் எடுத்தார்.

உலகக் கிண்ணத் தொடர் தொடங்கியதும் அப்படியே எல்லாம் தலைகீழாகி விட்டது. முதல் இரு ஆட்டங்களில் மட்டும் (73, 137) 210 ஓட்டங்கள் எடுத்து, இதுவரை நடந்த நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்கள் வரிசையில் இரண்டாவது பிடித்தார்.

இதுகுறித்து ஷிகர் தவான் கூறியதாவது:-

முதல் உலகக் கிண்ணத் தொடரில் சதம் அடித்தது மகிழ்ச்சியாக உள்ளது. ஆனாலும், இதை விட பெரும் மகிழ்ச்சி, உலகக் கிண்ணத் தொடரில் முதன் முறையாக தென்னாபிரிக்க அணியை வீழ்த்தியது. உலகின் சிறந்த அணிகளில் ஒன்றான இதை, உலகக் கிண்ணத் தொடரில் சாய்த்தது, பெரும் திருப்தியை தந்தது.

நீண்ட நாள்களாகச் சொதப்பிக் கொண்டிருந்த போதும், என்னால் முடிந்தளவு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முயற்சித்தேன். சரியான முறையில் ஓட்டங்கள் எடுக்க முடியாத போதெல்லாம், ஒருபோதும் பயப்படட்டதில்லை. கடினமான காலத்துக்குப் பின், மீண்டும் வசந்தம் தேடி வரும் என்று எப்போதும் நம்பிக் கொண்டிருந்தேன். இந்த நாள்களில் மனதளவில் அமைதியாக இருக்க வேண்டியதும் முக்கியம் என்ற நிலை இருந்தது.

அமைதியான இந்த குணம் தான், கடைசியில் எனது துடுப்பாட்டத்தில் பிரதிபலித்து, அணியின் வெற்றிக்கு தேவையான ஓட்டங்களை எடுக்க உதவியது. தற்போது ஒருவழியாக திறனிற்கு திரும்பியுள்ளேன். இதற்காகத் தான் கடந்த மூன்று மாதங்களாகக் காத்திருந்தேன்.

கடந்த சில மாதங்களில் சரியாக விளையாடாத நாள்களில் ஒருபோதும் வருந்தியது கிடையாது. சராசரியாக ஓட்டங்கள் எடுத்தேன். இப்போது, அவற்றை பெரியளவு ஓட்டங்களாக மாற்றத் தொடங்கியுள்ளேன். உலகக் கிண்ணம் போன்ற பெரிய தொடரில், இப்படி சிறப்பாக ஆடத் தொடங்கியது பெரும் உற்சாகம் தருகிறது. தென்னாபிரிக்க அணியின் வேகப்பந்து வீச்சு எவ்வளவு அனுபவம் வாய்ந்தது என, எல்லோருக்கும் தெரியும். தொடக் கத்தில் இலக்குகளை இழக்காமல் இருந்தால், பிறகு அதிக ஓட்டங்கள் எடுக்கலாம் என, திட்டமிட்டு பொறுமையாக செயல்பட்டோம். இதற்கேற்ப, ஹோக்லி, ரஹானே இருவரும் நன்கு கைகொடுக்க, எல்லாம் சிறப்பாக முடிந்தது – என்றார். (5–ரி)

## அடிக்கு மேல் அடி



உலகக் கிண்ண ஆட்டத்தில் இந்தியாவுடன் தோற்ற தென்னாபிரிக்க அணிக்கு அடிக்கு மேல் அடி விழுந்திருக்கின்றது. குறித்த ஆட்டத்தில் தாமதமாக பந்து வீசிய குற்றத்துக்காக அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்கா – இந்தியா இடையிலான ஆட்டத்தில், முதலில் பந்துவீசிய தென்னாபிரிக்க அணி ஒரு பந்துப் பரிமாற்றம் தாமதமாக வீசியது.

ஐ.சி.சி., விதிமுறைப்படி ஆட்டத்தில் தாமதமாக பந்துவீசுவது குற்றமாகும். இதனையடுத்து ஐ.சி.சி., ஆட்ட மத்தியஸ்தர் ஜெப் குரோவ், தென்னாபிரிக்க அணித் தலைவர் டீ வில்லியஸ்ஸுக்கு சம்பளத்தில் இருந்து 20 சதவீதம், மற்ற வீரர்களுக்கு 10 சதவீதம் அபராதம் விதித்தார்.

உலகக் கிண்ண தொடர் இறுதிக்கு முன், மீண்டும் ஒரு முறை தென்னாபிரிக்க அணி தாமதமாக பந்துவீசும் பட்சத்தில், அணித் தலைவர் டீ வில்லியர்ஸுக்கு ஒரு ஆட்டத்தில் விளையாட தடை விதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (5–ரி)

### தினம் ஒரு பரிசுப் போட்டி 13

தென்னாபிரிக்கா – மே.இ.தீவுகள் அணிகளுக்கு இடையில் நாளை மறுதினம் (27.02.2015) நடைபெறவுள்ள ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

..........................................................

பெயர் : ..........................................

தே.அ.இல. : ..........................................

முகவரி : ..........................................

..........................................

தொலைபேசி இல.: ..........................................

இந்தக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (26.02.2015) மாலை 6 மணிக்கு முன், 'தினமொரு பரிசு', உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலிலோ, உதயன் அலுவலகத்திலோ அல்லது எம்மால் அனுமதியளிக்கப்பட்ட இடங்களில் வைக்கப்பட்டுள்ள இதற்கான பெட்டியிலோ சேர்க்கலாம்.

தினமும் 2,500/= இருவருக்கு

### பரிசுப் போட்டி

நடப்பு உலகக் கிண்ணத்தின் தொடர் நாயகன் யார்?

.......................

நடப்பு உலகக் கிண்ணத்தின் இறுதி ஆட்டத்தின் ஆட்ட நாயகன் யார்?

.......................

பெயர்: .......................

தே.அ.அ.இல. .......................

முகவரி. .......................

தொலைபேசி .......................

போட்டி முடிவுத் திகதி 26.03.2015

தலா 10,000/= 45 பேருக்கு

### போட்டி விதிகள்

- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா.
- தே.அ.அட்டை பெறும் வயதுக்கு குறைந்தவர்கள், பெற்றோரின் தே.அ.அட்டை இலக்கத்தை குறிப்பிட முடியும்.

### அரையிறுதி பரிசுப் போட்டி

அரையிறுதிக்கு தகுதி பெறும் அணிகள் எவை?

1)....................... 2).......................

3)....................... 4).......................

பெயர்: .......................

தே.அ.அ.இல. .......................

முகவரி. .......................

தொலைபேசி .......................

போட்டி முடிவுத் திகதி 17.03.2015

தலா 5,000/= 20 பேருக்கு

### மாபெரும் இறுதிப் பரிசுப் போட்டி

நடப்பு உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

.......................

பெயர்: .......................

தே.அ.அ.இல. .......................

முகவரி. .......................

.......................

தொலைபேசி

.......................

போட்டி முடிவுத் திகதி 23.03.2015

1 ஆம் பரிசு 2 1/2 லட்சம் பணப்பரிசு

2 ஆம் பரிசு 1 1/2 லட்சம் பணப்பரிசு

3 ஆம் பரிசு 1 லட்சம் பணப்பரிசு

தலா 5,000/= 10 பேருக்கு

MJ நியூ மைதிலி ஜுவலர்ஸ்
தொ.பே: 021 221 7878/ 021 221 7878
E-mail: newmaithily@gmail.com
இல. 38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
யாழ் மண்ணில் தன்னிகரில்லா தலைமை நிறுவனம்

**லக்கி பான்சி கவுஸ்**
இருபாலைச்சந்தி, கோப்பாய்.
**மொடோன்**
பஸ்நிலையம் வீதி, நெல்லியடி.
**கவிதா**
350ஏ பிரதான வீதி, பருத்தித்துறை.
**கனன் போட்டோ**
165 பிரதான வீதி. பருத்தித்துறை.
**சூரியா பாமசி**
புதிய சந்தை, அச்சுவேலி.
**நகுலன்**
85 பருத்தித்துறை வீதி நல்லூர்.
**தாட்சாயினி ஸ்ரோர்ஸ்**
3ஆம் சந்தி கெருடாவில்.
**தர்மலிங்கம்**
கோவில் ஒழுங்கை உடுப்பிட்டி.
**கலைச்சோலை**
இல 3 நவீன சந்தை வல்வெட்டித்துறை
**அஞ்சலோ புக் சொப்**
ஆஸ்பத்திரி வீதி ஊர்காவற்றுறை.
**மாவடி ஸ்ரீ முருகன்**
மூளாய் வீதி வட்டுக்கோட்டை.
**தயாளன் ஸ்ரோர்ஸ்**
பலாலி, வீதி, கோண்டாவில்.
**சிவசக்தி ஸ்ரோஸ்**
உரும்பிராய் மேற்கு, சிவகுலவீதி,
**சிவன் ஸ்ரோர்ஸ்**
பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.
**தாஸ் ஸ்ரோர்ஸ்**
திருநெல்வேலி.
**ஓம் கணேசா**
இல1, புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு.
**பேரின்பநாதன்**
103, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
41. வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**திருநீலகண்டன் ஸ்ரோர்ஸ்**
14. விதானையார் வீதி சுண்டுக்குளி.
**சுரேஸ் ஸ்ரோர்ஸ்**
இல. 376 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
**அன்ரனீஸ் ஸ்ரோர்ஸ்** 19 புதுமை மாதா கோவில் கிழக்கு.
**சிவானந்தா கபே**
செட்டி தெரு நல்லூர்.
**ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்**
சித்தங்கேணி வீதி, பண்டத்தரிப்பு.
**புஸ்பநாதன்**
பிரதான வீதி, சங்கானை
**சுசிலா தேவி அச்சகம்**
சித்தங்கேணிச்சந்தி, சித்தங்கேணி
**வானம்பாடி புத்தக நிலையம்**
பிரதான வீதி சுழிபுரம்.
**குலம் ஸ்ரோர்ஸ்**
சந்தையடி மானிப்பாய்.
**துர்க்கா புத்தகசாலை**
பஸ் நிலையம் சுன்னாகம்.
**கிருபா போட்டோ**
கே.கே.எஸ் .வீதி மல்லாகம்.
**பாக்கியா** கொக்குவில்.
**சிறிராம்** கைதடி சந்தி.
**பரம்ஸ்**
நவீன சந்தை சாவகச்சேரி.
**மணியம்**
ஏ–9 வீதி சாவகச்சேரி.
**அருள்நாயகி**
ஏ –9 வீதி கொடிகாமம்.
**கஜானன்**
அல்லாரை வீதி, மீசாலை சந்தி.
**அன்பரசன் புத்தகசாலை**
வித்தியாபுரம் ஒட்டுசுட்டான்.
**உயர்ச்சி புத்தகசாலை**
மல்லாவி.
**கோமதி நெற்கபே**
வெற்றிலைக்கேணி.
**கே.பி.கே.புத்தகசாலை**
24, பஸ் நிலையம் வவுனியா.
**வன்னி பேபி நீட்ஸ்** 55 ஏ மன்னார் வீதி குருமன்காடு வவுனியா.
**சோமசுந்தரம்**
ஏ – 9 வீதி மாங்குளம்.
**மோகன்** பளை.
**நகுலேந்திரன்**
31ஆம் கட்டை முழங்காவில்.
**ஜோதி புக்சொப்**
பெரிய கடை மன்னார்.
**சிவசாந்தி உணவகம்**
தாழ்வுப்பாடு வீதி மன்னார்.
**நிரஞ்சனா** தலைமன்னார்.
**பூநகரி(எம்பிசிஎஸ்)** பூநகரி.
**டிலசிகா**
124 கட்சன் வீதி வட்டக்கச்சி.
**மகிழன் களஞ்சியம்** தர்மபுரம்.
**பொதிகை புக்சொப்** 2 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு.
**தாயன்பு** உடையார் கட்டு.
**சஜி புக் சொப்**
விசுவமடு.
**வரணா புக்சொப்**
755 கனகராசா வீதி திருநகர் கிளிநொச்சி.
**வவிசனா புக் சொப்**
குமரபுரம் பரந்தன்.
**ராஜா தேநீரகம்** உருத்திரபுரம்
**அபி புத்தகசாலை**
பிரதான வீதி முல்லைத்தீவு.
**ஸ்ரீ கருணா மல்ரி சொப்**
வரணி.
**விநாயகர் களஞ்சியம்**
அளவெட்டி.
**சிவலிங்கம் ஸ்ரோர்ஸ்**
வியாபாரி மூலை.
**குகன் ஸ்ரோர்ஸ்,**
நவாலி.
**நாகமுத்து ஸ்ரோர்ஸ்**
காரைநகர்.

பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில்

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** சீரான பலனை எதிர்பார்க்கலாம். உங்கள் முயற்சிக்கு தகுந்த பலன்கள் வந்தே தீரும். வழக்கு விவகாரங்கள் மேலும் தள்ளிப் போகும். எல்லாம் நல்லதே நடக்கும்.

**இடபம்:** வீண் கலகமும் அலைச்சலும் இருக்கும், இருப்பினும் குருவின் பார்வை பாக்கியஸ்தான ராசியில் விழுவதால் காரிய அனுகூலமும் நற்சுகமும் பொருளாதார மேம்பாடும் உண்டாகும். நன்மைகள் கிடைக்கும்.

**மிதுனம்:** மதிப்பு மரியாதை கூடி செல்வாக்கு அதிகரிக்கும். முயற்சிகளில் சிறுசிறு தடைகள் வரலாம். உங்களைப் பற்றி உங்கள் குடும்பத்தார் புரிந்து கொண்டு அனுசரணையாக நடந்து கொள்வர்.

**கடகம்:** குடும்பத்தில் இருந்து வந்த எதிர்ப்புகள் அகலும். எல்லா நலன்களும் உண்டாகும். விரும்பியது கிடைக்க கூடுதல் முயற்சி தேவை. பயணம் மூலம் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள்.

**சிங்கம்:** புதிய நபர்களின் நட்பு உண்டாகும். பல விதத்திலும் புகழ் கூடும். மற்றவர்கள் பிரச்சினைகளில் வாதாடி வெற்றி பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும்.

**கன்னி:** உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நிலுவையில் இருந்த பணம் வந்து சேரும். மேல் அதிகாரிகள் உதவி கிடைக்கும். சக ஊழியர் மத்தியில் இருந்து எதிர்ப்புகள் விலகும்.

**துலாம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உறவினர்கள் வருகை இருக்கும். திருமணம் போன்ற சுப காரியம் நடக்கும். நிலம், வீடு மூலம் லாபம் கிடைக்கும். மனோ பலம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** புதிய நபர்கள் அறிமுகமும் அவர்களால் உதவியும் கிடைக்கும். எதிலும் எச்சரிக்கை தேவை. பயணம் செல்ல வேண்டி இருக்கும். மாணவர்களுக்கு போட்டிகள் விலகும். சக மாணவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு:** தடைகளை முறியடித்து காரிய வெற்றி காணலாம். ஏதேனும் ஒரு காரணத்தால் குடும்பத்தைவிட்டு பிரிந்து சென்றவர்கள் ஒன்று சேருவார்கள். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் இனிதே நடக்கும்.

**மகரம்:** உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். கோரிக்கைகள், ஒப்பந்தங்கள் நிறைவேறும். எதிர்பார்த்த உதவியும் கிடைக்கும். வீண் பகைகள் ஏற்பட்டு விலகும்.

**கும்பம்:** எவ்வளவு திறமையாகச் செயற்பட்டாலும் பாராட்டுக்கு பதில் விமர்சனம் கிடைக்கும். பிடிவாதத்தைத் தவிர்ப்பது நன்மை தரும். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் மெத்தனப் போக்கு காணப் படும்.

**மீனம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். சக ஊழியர்களுடன் கடுமையாக பேசாமல் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. பேச்சில் கவனம் தேவை.

## மாறும் விளம்பரங்கள்

நிறுவனங்கள் தங்கள் பொருள்களை விற்கவும் பிரபலப்படுத்தவும் சமூக வலைதளங்களை பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது.

கடந்த 2013 ஆம் ஆண்டில் 78 சதவீத நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகள் குறித்து சமூக வலைதளங்கள் மூலம் விளம்பரம் செய்துள்ளன. தற்போது 90 சதவீத நிறுவனங்கள் வலைதள விளம்பரங்களில் கவனம் செலுத்துகின்றன. இது மேலும் அதிகரிக்கும் என்று ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.

இதன்படி 2015 நிதியாண்டில் நிறுவனங்கள் விளம்பரத்துக்கு என செலவு செய்யும் தொகையில் 15 சதவீதம் சமூக வலைதளங்கள் மூலம் விளம்பரம் செய்ய ஒதுக்கீடு செய்யப்படும் என்று ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

இந்த விளம்பரங்கள் நுகர்வோரை எளிதில் சென்றடைவதோடு, தயாரிப்பு பற்றிய விமர்சனங்கள் நிறைகுறைகள் கண்டறியவும் நுகர்வோர் எண்ண ஓட்டத்தையும் அறியவும் உதவியாக இருப்பதாகக் கருதப்படுகிறது.





யாருக்கிட்ட.....?

## மீண்டும் பிரியங்கா

பொலிவூட் நடிகை தீபிகா படுகோனேவை பின்னுக்கு தள்ளி, பிரியங்கா சோப்ரா மீண்டும் செக்ஸியான பெண் விருதை தட்டிச் சென்றுள்ளார். பன்முகத் திறமைகளைக் கொண்ட பிரியங்கா சோப்ராவை, ஒரு வரியில் விவரித்து விட முடியாது.

உலகின் செக்ஸியான ஆசிய பெண் என்ற விருதை வென்ற பிரியங்கா சோப்ரா, தற்போது, உலகின் செக்ஸியான பெண் என்ற விருதையும் வென்றுள்ளார். இந்த விருதுக்கான போட்டியில், பிரியங்கா 53 சதவீத வாக்குகளையும், தீபிகா படுகோனே 35 சதவீத வாக்குகளையும் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.



## 10 பில்லியன் டொலர்

உலகின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான பேஸ்புக் அதனது வரலாற்றில் முதன் முறையாக 10 பில்லியன் டொலருக்கும் அதிகமான ஆண்டு வருமானத்தை ஈட்டியுள்ளது.

தொலைபேசிகளில் கொடுக்கப்படும் விளம்பரங்களுக்கு வரும் வருமானத்தால் அதிக இலாபம் கிடைத்ததாகவும், உடனடியாக பணம் சம்பாதிப்பதை விட எதிர்கால தொழில் நுட்பங்களுக்காக அதிக முதலீடு செய்ய உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.கடந்த ஆண்டின் இறுதி மூன்று மாதங்களில் மட்டும் 3.85 பில்லியன் டொலர் வருமானத்தை ஈட்டிய பேஸ்புக், அதன்மூலம் 696 மில்லியன் டொலரை இலாபமாக பெற்றது.

இந்நிலையில் கடந்த ஆண்டு முழுவதுமான பேஸ்புக்கின் வருமானம் 58 சதவீதம் உயர்ந்து 12.8 பில்லியன் டொலராக உயர்ந்துள்ளது. இதனால் அதன் இலாபம் 2.9 பில்லியன் டொலர் என்ற அளவிற்கு இரு மடங்காக உயர்ந்துள்ளது.




## ரிலாக்ஸா வாசியுங்க...

சட்டத்தரணி: உங்களுக்கு என்ன பிரச்சினை?

நபர்: என் நண்பன் கேட்கிறானேன்னு ஐம்பதாயிரம் கொடுத்தேன். இப்போது திருப்பிக் கேட்டா இல்லை என்று சொல்லி இழுத்தடிக்கிறான். ஏதாவது செய்ய முடியுமா?

சட்டத்தரணி: பணம் கொடுத்ததுக்கு ஏதாவது ஆதாரம் இருக்கா?

நபர்: இல்லை.

சட்டத்தரணி: அப்ப ஒன்று செய்யுங்க. 'என்கிட்ட வாங்கின ஒரு லட்சத்தை திருப்பிக்கொடு' என்று ஒரு கடிதம் அனுப்புங்க.

நபர்: நான் கொடுத்தது ஐம்பதாயிரம்தான்.

சட்டத்தரணி: உங்களிடம் கடன் வாங்கினவரும் இதையேதான் சொல்லி பதில் எழுதுவார். அதையே ஆதாரமா எடுத்துக்கலாம்.

அடேங்கப்பா?

நம்மிடம் என்ன இருக்கிறது என்பதைவிட என்ன இல்லை என்று ஆராய்ந்து கேலி பேசுவதில் தான் இந்த உலகம் அதிக அக்கறை கொள்கிறது!



## கூட்டம் நாளை

தென்மராட்சி, பெப்.25
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்ட கூட்டம் நாளை வியாழக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு வலயக் கல்வி அலுவலக கேட்போர்கூடத்தில் இடம்பெறும் என்று வலயக்கல்விப் பணிப்பாளர் சுகிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (வ–9)

## ஆய்வுகூடக் கட்டடம் திறப்பு

தென்மராட்சி, பெப்.25
சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 3 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் ஆய்வுகூடக் கட்டடம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.
நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்து வைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ–9)

# நுரைச்சோலையில் நெற்செய்கையை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்

## நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை

அம்பாறை, பெப்.25
அம்பாறை, அக்கரைப்பற்று நுரைச்சோலை விவசாயக் கண்டத்தில் 1250 ஏக்கர் காணியில் பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் நெற்செய்கையைத் தொடர்ந்தும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் அக்கரைப்பற்று கிளையால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இது தொடர்பாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
நுரைச்சோலை பிரதேசத்தில், சுமார் 500 விவசாயக் குடும்பங்கள் 1250 ஏக்கர் காணியில் பல வருடங்களாக நெற் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர். அந்தக் காணியில் சீனிக் கூட்டுத் தாபனத்தால் கரும்புச் செய்கையை மேற்கொள்ளுமாறு வற்புறுத்தப்பட்டுள்ளது.
இந்த விவசாயிகள் அனைவரும் தொடர்ந்தும் அந்தக் காணிகளில் விவசாயம் (நெற்செய்கை) மேற்கொள்ளவே விரும்புகின்றனர்.
எனவே ஜனாதிபதியான நீங்கள் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி, ஏழை விவசாயக் குடும்பங்களினது நன்மை கருதி அந்தக்காணியில் நெற்செய்கை மேற்கொள்ள உதவுமாறு கோருகிறோம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
அகில இலங்கை முஸ்லிம் லீக் அக்கரைப்பற்று கிளையின் தலைவரும் ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் செயலாளருமான எம்.ஐ.உதுமாலெவ்வையால் ஒப்பமிடப்பட்ட அந்த மனுவின் பிரதி, அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளரும், உயர்கல்வி அமைச்சருமான கபீர் ஹாஸிமுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
கடந்த அரசின் ஆட்சியின் போது முன்னாள் ஜனாதிபதி மற்றும் பிரதேச முஸ்லிம் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இது தொடர்பிலான மனு அனுப்பி வைக்கப்பட்டும் இதுகால வரை அது குறித்து எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# ஒலுவில் மருத்துவமனையின் குறைகள் நிவர்த்தி செய்யப்படும்

## சுகாதார இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



ஒலுவில், பெப்.25
ஒலுவில் பிரதேச மருத்துவமனையில் நீண்ட காலமாக நிலவிவரும் பௌதிக வளப் பற்றாக்குறைகளை, அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தில் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார இராஜாங்க அமைச்சர் எம்.ரி. ஹஸன் அலி தெரிவித்தார்.
மருத்துவமனை அபிவிருத்தி தொடர்பான கூட்டம், மாவட்ட மருத்துவ அதிகாரி ஏ.எல். அமாமுதீன் தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மருத்துவமனையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அங்கு அவர் தனதுரையில் மேலும் தெரிவிக்கையில்:
"கடந்த அரசால் அபிவிருத்தியில் புறக்கணிக்கப்பட்ட பின் தங்கிய கிராமங்களை நல்லாட்சிக்கான இந்த அரசால் துரிதமாக அபிவிருத்தி செய் வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கேட்டுக்கொண்டுள்ளார்.
அதற்கிணங்க நான், அம்பாறை மாவட்டத்திலுள்ள மருத்துவமனைகளுக்கு, நேரடியாகப் பயணம் செய்து அங்குள்ள குறைபாடுகளைக் கண்டறிந்து அதற்கான நடவடிக்கைகளை 100 நாள் அபிவிருத்தி திட்டத்தில் மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளேன்.
ஒலுவில் பிரதேச மருத்துவமனையில் உடனடியாக ஆண் நோயாளர் விடுதி, அவசர சிகிச்சைப் பிரிவு என்பவற்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளேன். அத்துடன் அங்கு நிலவும் அத்தியாவசிய தேவைகளை நிறைவு செய்வதற்கும் ஆவன செய்வேன்" என்றார்.
இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் கே.முருகானந்தம், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஏ.எல்.அலாவுதீன் உட்பட அமைச்சின் உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர். (வ)

# வாகனத்தில் முதிரை மரக்குற்றிகள்; இருவருக்கு ரூ 10 ஆயிரம் அபராதம்

அம்பாறை, பெப்.25
அம்பாறை, நாவிதன்வெளி பிரதேசத்தில் முதிரை மரக் குற்றிகளை சட்டவிரோதமாக வாகனத்தில் ஏற்றிச் சென்ற இருவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும், முதிரை மரக்குற்றிகளை பறிமுதல் செய்யுமாறும் கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிவான் நேற்று முன்தினம் திங்கட்கிழமை உத்தரவிட்டார்.
சவளக்கடை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து சவளக்கடை பிரதான வீதியில் கடந்த மாதம் வீதிச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது 96 முதிரை மரக்குற்றிகளை கன்ரர் ரக வாகனத்தில் சட்டவிரோதமாக ஏற்றிவந்த இருவரைக் கைது செய்ததுடன் வாகனத்தையும் பொலிஸார் கைப்பற்றினர். அவர்கள் நீதிமன்றத்தில் முன்னலைப்படுத்தப்பட்டதன் பின்னர் பிணையில் வெளி வந்தனர்.
இவ்வாறு கைது செய்யப்பட்ட மருதமுனை மற்றும் நாவிதன் வெளி 11ஆம் கொலனியைச் சேர்ந்த இருவரும் நேற்று முன்தினம் கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது இருவரையும் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் 10 ஆயிரம் ரூபாவை தண்டப்பணமாக செலுத்து மாறும்–
கைப்பற்றப்பட்ட ஒரு இலட்சத்து 8 ஆயிரம் ரூபா பெறுமதி யான முதிரை மரக்குற்றிகளை அரசுடைமையாக்குமாறும் நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (வ)

# பாடசாலைகளுக்கு வேள்ட்விஷனால் உபகரணங்கள்

தென்மராட்சி, பெப்.25
வேள்ட் விஷன் நிறுவனத்தினரின் சுகாதார சேவைகள் திட்டத்தின் கீழ் தென்மராட்சி கல்வி வலயத்தில் உள்ள இரு பாடசாலைகளில் சுகாதாரமேம்பாட்டு அறைகளை அமைத்து அதற்கான உபகரணங்களை நேற்று முன்தினம் வழங்கினர்.
வரணி மத்திய கல்லூரி, கைதடி முத்துக்குமார சுவாமி மகா வித்தியாலயம் ஆகியவற்றுக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.
தென்மராட்சி கல்வி வலயத்தில் உள்ள ஐந்து பாடசாலைகளுக்கு ஏற்கனவே சுகாதார மேம்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (வ–9)

# சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ஆய்வு நிலையம் கிளிநொச்சியில்

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பிரதேச ஆய்வுப் பயிற்சி மற்றும் துறைசார் கற்கைக்கான நிலையமொன்று கிளிநொச்சியில் திறந்து வைக்கப்படவுள்ளது.
சமூக சேவைகள் நலன்புரி மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சர் பி.ஹரிசனின் தலைமையில் கிளிநொச்சி பழைய மாவட்டச் செயலகத்தில் எதிர்வரும் மார்ச் மாதம் 2ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு இந்த நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது.
நிகழ்வில் குறித்த அமைச்சின் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, அமைச்சின் செயலாளர் திருமதி டி.கே.ஆர். எக்கநாயக்க மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஞ)


**விற்பனைக்கு** YA-xxxx
தொடர் இலக்கமுடைய ஓட்டோ விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 205 4677/077 313 1973
(57265)(4.3.7)

**விற்பனைக்கு** யாழ்ப்பாணம், அரியாலை, ஆனந்தன் வடலி வீதியில் 392/15, 392/16 வரி மதிப்பு இலக்க குடியிருப்பு /வயல்/தென்னங் காணிகள் விற்பனைக்குள்ளன. தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 085 8804 (சி/19923)(4.3.7)

**ஊர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு**
கிளிநொச்சி நகரில் 2 வார வளர்ச்சியுடைய ஊர்க்கோழிக் குஞ்சுகள், வான்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 077 933 7287 (51366)(45.3)

**இடமாற்றம்**
**நாகபூசணி திருமண சேவை**
15/11, சங்கிலியன் வீதி, நல்லூரில் இயங்கி வந்த நாகபூஷணி திருமணசேவை தற்போது 383/14B, கோயில் வீதி, நல்லூருக்கு (கோயில் வடக்குப் பக்கம்) இடமாற்றப்பட்டுள்ளது. டாக்டர், எஞ்சினியர், அரச உத்தியோகத்தர், தனியார் துறை மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் எம்மிடம் நிறைய உள்ளன. நீங்கள் விரும்பிய மணமக்களை மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்து தரப்படும்.
383/14B, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P:- 077 138 7596, 075 554 6000, 071 894 5692
e mail:- nakapoosanywedding@gmail.com
(57042)(4.3.7)

**கேள்வி அறிவித்தல்**
கரவெட்டி தச்சன்தோப்பு சிந்தாமணிப்பிள்ளையார் ஆலயத்தில் கீழ்வரும் வேலைகளுக்கு கேள்வி விலை மனுக்கள் கோரப்படுகின்றன
1. இரண்டு கைலாச வாகனங்கள் திருத்தம்
2. மேற்படி வாகனங்களுக்கு வர்ணப்பூச்சுப் பூசுதல்
மேற்படி வேலைகளுக்கான விலை மனுக் கோரல்களை எதிர்வரும் 28.02.2015 - 01.03.2015 ஆம் திகதிக்கு முன் நேரடியாகப் பார்வையிட்டு கீழ்க்குறிப்பிட்ட தானிசரிடம் 06. 03.2015 ஆம திகதிக்கு முன்னர் ஒப்படைக்கவும்
தொ.பே : 0777 046 178
ஏ.கதிரவேலு, சண்டில் வீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி.
(54213)(3.8)

**குறைந்த விலையில் உன்னதமான பயணம்**





உலகில் எந்தப்பகுதிக்கும் சென்றுவர விமான பயணச் சீட்டுக்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
*Conditions apply

| | |
|---|---|
| COLOMBO/CHENNAI/COLOMBO | Rs. 23,100 |
| COLOMBO/BANGALORE/COLOMBO | Rs. 32,200 |
| COLOMBO/MUMBAI/COLOMBO | Rs. 28,300 |
| COLOMBO/MALE/COLOMBO | Rs. 22,900 |
| COLOMBO/BANGKOK/COLOMBO | Rs. 26,150 |
| COLOMBO/SINGAPORE/COLOMBO | Rs. 27,500 |
| COLOMBO/KUALALAMPUR/COLOMBO | Rs. 25,600 |
| COLOMBO/MELBOURNE/COLOMBO | Rs. 99,500 |
| COLOMBO/LONDON | Rs. 41,200 |
| COLOMBO/DUBAI | Rs. 23,800 |
| COLOMBO/DOHA | Rs. 25,500 |

London, Perth, New York, Auckland, Doha, Thiruchi, Delhi, Bangkok, Honk Kong, Guangzhou, Narita, Melbourne, Toronto, Sydney, Madurai, Bombay, Singapore, Malaysia, Rome, Dubai

ஹேலீஸ் டிராவல்ஸ் & டூர்ஸ்
உங்கள் உல்லாச பயணத்திற்கு ஒரே தெரிவு!
யாழ்ப்பாணக்கிளை 275, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 1878 மனோ : 077 773 0818

**மணமகன் தேவை**
யாழ். கௌரவகுடும்பம் 38 வயது U.K PR உடைய (Cima,MBA,BSC) திருமணமாகி ஒருசில தினங்களில் விவாகரத்துப் பெற்ற மணமகளுக்கு பட்டதாரி மணமகன் தேவை. (லக்கின பாவம் - 40)
நல்லூர் மணியம் மயிலூரான் அரங்கம், 590, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
TP : 077 651 0434, 077 056 7344

20% off
Nation popular travels & tours
0773083820 அதிரடி விலைகளில்
லண்டன் 65100/= o/w 43300/= o/w
பிரான்ஸ் 67100/= o/w 43400/= o/w
Jaffna: 0214 920 920, Colombo: 0114 378 117, Vavuniya : 0244 930 838

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

கடந்த 26.01.2015 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது சபை ஊழியர் பத்மநாதன் அவர்களின் தந்தையாரான அமரர் வைரவிப்பிள்ளை கந்தசாமி அவர்களுக்கு எமது இதய பூர்வமான அஞ்சலிகளைச் செலுத்துவதோடு, இன்று (25.02.2015) புதன்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வட பிராந்திய ஊழியர் தொழிற்சங்கம்
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, யாழ்ப்பாணம்.
(57251)(4.3.7)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

கடந்த 26.01.2015 சிவபதமடைந்த எமது சபையின் கணக்குப்பகுதி ஊழியர் க.பத்மநாதன் அவர்களின் அன்புத் தந்தை அமரர் வை.கந்தசாமி அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள்,
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, யாழ்ப்பாணம்.
(57259)(4.3.7)

## 31ஆம் நாள் நன்றி செலுத்தும் ஆராதனை



அமரர்
இரஞ்சித கமலபாக்கியம் விக்டர் கனகசுந்தரம்

தோற்றம் 29 - 05 - 1925
மறைவு 26 - 05 - 2015

என் ஜீவனுள்ள நாளெல்லாம்
நன்மையும் கிருபையும்
என்னைத் தொடரும்
நான் கர்த்தருடைய வீட்டிலே
நீடித்த நாள்களாய்
நிலைத்திருப்பேன்.
சங்கீதம் 23: 6

ஏழாலை வடக்கு, ஏழாலை.
திரு திருமதி சுகிர்தம் தயானந்தன்
(57264)(3.8)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

அமரர் நடராஜா அற்புதராஜா



தோற்றம் 08.10.1957
மறைவு 08.03.2014

திதி : ஸப்தமி

பாசத்தின் உறைவிடமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து வழிகாட்டிய எங்கள் தெய்வமே!
உங்கள் நினைவுகளுடன் நாம் வாழ்கின்றோம்.

இன்று (25.02.2015) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

தோப்பு, அச்சுவேலி.
உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி இந்திராணி தாமோதரம்பிள்ளை
ஓய்வுநிலை ஆசிரியை - காரைநகர்

தோற்றம் 28.01.1940
மறைவு 07.03.2014

திதி :- பூர்வபக்க ஸப்தமி
[2015.02.25]

அன்பான முகமும் பாசமான மொழிகளும், உறவுகளை அரவணைத்த பரிவும் தொடர்ந்து வந்த தொலைபேசி அழைப்புக்களும் அத்தனையும் மறைந்து போய் ஆண்டு ஒன்று ஆனதுவே! மறக்க முடியவில்லை. உங்கள் ஆத்மா மாணாக்கை சித்திர கூட சித்திவிநாயகர் பாதாரவிந்தங்களில் சாந்திபெறப் பிரார்த்திக்கும்.

குடும்பத்தினர்.

நா.குகனேசன்
(57244)(4.3)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் வேலுப்பிள்ளை வாரித்தம்பி

தோற்றம் 21.05.1951
மறைவு 24.01.2015

(சுன்னாகம் வரியப்புலத்தைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்டவர்)

ஆசைக்கு ஒரு மாமாவே!
எங்கள் ஆசை மாமாவே!
ஏனோ மாமியையும், சகோதரியையும், மருமக்களையும், தவிக்கவிட்டுச் சென்றாயோ மாமா!
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
தாய்மாமன் உறவுக்கு ஈடாகுமா மாமா
மற்றவர் மனம் நோகாமல் வாழ்ந்தாயே மாமா!
ஆனால் கடவுள் நோய் தந்து நோகடித்தாரே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் காளியம்பாளை வேண்டுகின்றோம்.

கடந்த 24.01.2015 சிவபதமடைந்த எமது மாமா அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (25.02.2015) கந்தரோடையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

மனைவி: புஸ்பவதி, சகோதரி -இராசமலர்,
மருமக்கள்: ஐங்கரன் (இத்தாலி)
புஸ்பவதனி (இத்தாலி), சஞ்சி (சுவிஸ்),
பாஸ்கரன் (இத்தாலி), நந்தினி (இத்தாலி), சிவசக்தி (இலங்கை),
பேரப்பிள்ளைகள் : துவாரி (இத்தாலி), தர்மிகன் (இத்தாலி)
(58882)(4.3.7) சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர் (விவசாயம்)
குமாரசாமி ஜெகதீஸ்வரன்
அவர்கள் 23.02.2015 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நல்லுறவு மன்றம்,
யாழ்.செங்குந்தா இந்துக் கல்லூரி.
(57258) (4.3.7)

## கண்ணீர் அஞ்சலி




எமது சங்க பொதுமுகாமையாளர்
திருமதி யோகராசா சத்தியலீலா
அவர்களின் அன்புக் கணவர்
கணபதிப்பிள்ளை யோகராசா
22.02.2015 அன்று அகால மரணமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம், பளை.
(சி/19288) (4.3.7)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் கந்தையா குருபரஞ்சோதிநாதன்



தோற்றம் 09 ★ 12 ★ 1958
மறைவு 07 ★ 03 ★ 2014

திதி: ஸப்தமி

அப்பா எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் பசுமையான பாச - நினைவுகள்
எங்கள் உள்ளத்தில் நிலைத்து நிற்கும்.

அராலி மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சுவிற்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குருபரஞ்சோதிநாதன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி இன்று (2015.02.25) புதன்கிழமை அன்னாரது வட்டுக்கோட்டை இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அராலி மேற்கு, வட்டுக்கோட்டை.
(57262)(6.4.3)
குடும்பத்தினர்.

## கூட்டம்

தென்மராட்சி, பெப்.25

பசிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தென்மராட்சி கிளையின் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப.2 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

கிளைத் தலைவர் ச.ஞானலிங்கம் தலைமையில் நடைபெறும் கூட்டத்துக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், சிறப்பு விருந்தினராக பிரதேச செயலக கணக்காளர் திருமதி வசந்தமாலா மனோகரன், கௌரவ விருந்தினர்களாக பசிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய உப தலைவர் வி.ஸ்ரீசக்திவேல், சனச அபிவிருத்தி வங்கியின் யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர் எஸ். சபேஸ் ஆகியோர் கலந்து கொள்வர்.

பொதுக் கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு இடம்பெறவுள்ளதால் பிரதேச ஓய்வூதியர்கள் அனைவரையும் வருகை தருமாறு செயலாளர் செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (வ-9)

## கலைமகள் வித்தியின் மெய்வன்மை போட்டி

மானிப்பாய், பெப்.25

பண்டத்தரிப்பு, பிரான்பற்று கலைமகள் வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலை முதல்வர் கி.கிருஷ்ணானந்தா தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

தமிழரசுக்கட்சியின் தலைவரும் – நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராசா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றியதுடன், போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான வெற்றிக்கிண்ணங்களையும் விருதுகளையும் சான்றிதழ்களையும் வழங்கிக் கௌரவித்தார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட நடராஜா சுரேஷ் பிரேமச்சந்திரன் தனது தாய் தந்தையர் ஞாபகார்த்தமாக விளையாட்டு மைதானத்தில் குடிதண்ணீர் திட்டத்தை வழங்கி உதவ பிரதம விருந்தினர் மாவை சோ.சேனாதிராசா நாடாவை வெட்டித் திரைநீக்கம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வலி.தென் மேற்கு பிரதேச சபை தவிசாளர் சி.சி.மகேந்திரன்,சண்டிலிப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி ச.சிவானந்தராஜா, ஆசிரியை திருமதி சுரேஷ் இந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர். (வ-50)

## மட்டக்களப்பில் மழை

மட்டக்களப்பு,பெப்.25

மட்டக்களப்பு மாவட்டத்தின் பாசிக்குடாவில் கடந்த 24 மணித்தியாலங்களில் 74.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக மாவட்ட வானிலை அவதான நிலையப் பொறுப்பதிகாரி எம்.சூரிய குமார் தெரிவித்தார்.

கடந்த 24 மணித்தியாலங்களில் நவகிரியில் 8.2 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் தும்பங் கேணியில் 6.2 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் வாகனேரியில் 12.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் கட்டுமுறிவுக் குளத்தில் 37 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் உன்னிச்சையில் 42 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், மயிலம்பா வெளியில் 29.4 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாகவும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் இடைக்கிடையே மழை பெய்து வருகின்றது. மேலும், பெரும்போக அறுவடை நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இறுதிநேரத்தில் இவ்வாறு மழை பெய்வதால் விவசாயிகளுக்கும் சிரமம் ஏற்பட்டுள்ளது. (வ)

## வெற்றிலைக்கேணி றோ.க.த.க. நடத்திய மெய்வன்மைப்போட்டி



யாழ்ப்பாணம், பெப்.25

வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்கதமிழ்க்கலவன்பாடசாலையின் இல்ல மெய் வன்மைப் போட்டி நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் கிருபநாதன் தலைமையில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

போட்டிகளில் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுக்கு பரிசில்களையும், வெற்றியீட்டிய இல்லத்துக்கு கேடயங்களையும் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வழங்கினார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன், மருதங் கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.திரவியராசா மற்றும் தாளையடி பங்குத் தந்தை யேசுரட்ணம் ஆகியோர்கலந்துகொண்டனர். (வ)

## பஸ்தரிப்பிடம் இன்றி சிரமப்படும் பயணிகள்

கொழும்புத்துறை,பெப்.25

யாழ்–கொழும்புத்துறை வழித்தட பஸ்சேவையின் முடி விடமான மணியம் தோட்டம் 8ஆம் குறுக்குச் சந்திப் பகுதியில் பயணிகள் பஸ் தரிப்பிடத் துக்கான கட்டடம் இன்மையால் மக்கள் பல சிமரங்களை எதிர் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மணியம்தோட்டம் 8ஆம் குறுக் குச் சந்திக்கு அப்பால் உள்ள வர்களும் உயதபுரத்தில் வசிப்பவர்களும் தமது போக்குவரத் தின்போது 8ஆம் குறுக்குச் சந்தியில் இருந்தே தமது பயணத்தை ஆரம்பிக்கின்றனர்.

எந்தவித நிழல் வசதிகளும் இல்லாத அந்தப்பகுதியில் அடுத்த பஸ் வரும் வரை காத்திருக்கும் வேளைவெயிலாலும் மழையாலும் பாதிப் புக்கு உள்ளாவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (வ–135)

# சம்பூரில் தனியார் காணியில் பெருமளவு ஆயுதங்கள் மீட்பு



திருகோணமலை, பெப்.25

திருகோணமலை, சம்பூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அம்மன் நகர் கிராமத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பெருமளவான ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக சம்பூர் பொலிஸார் தெரிவித் தனர்.

சம்பூர் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப் பதிகாரி சிசிர ஜெயந்த தலை மையிலான பொலிஸ் குழுவினரே குறித்த ஆயுதங்களை மீட்டதாக பொலிஸார் தெரி வித்தனர். அவை தனியார் காணி ஒன்றிலுள்ள நிலக் கடலை தோட்டத்திலிருந்தே மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட ஆயுதங்களில் மிதி வெடி –19, ரீ 56 ரக மெகஸின்–13, எஸ்.ஜீ.ரவுண்டஸ்–07, கிரனைட்–02, கிளைமோர்–01, டெட் நைட்டர்– 02, ஆட்லரி சாச்சர் கூர்–2, டொம்பா ரவுண்ஸ்–05, கிளைமோர் ரிமோட்–01, மோட்டார்கன் பியுஸ்–04, ரீ56 துப்பாக்கி ரவைகள் 1069 என்பவை மீட்டகப்பட்டுள்ளதாகசம்பூர்பொலிஸார்தெரிவித்தனர்.

அத்துடன் புலிக்கொடி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சம்பூர் பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர்.

### விசாரணை ஆரம்பம்

இதேவேளை சம்பூர் பகுதியிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலியினரால் கடந்த காலத்தில் இவை புதைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதாகவும், இந்த ஆயுதங்களை புதைத்தவர்கள் தொடர்பிலும் அத்தோடு ஆயு தங்கள், காணி உரிமையாளரின் அனுமதியுடன் புதைக்கப் பட்டனவா என்பது தொடர் பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கைப்பற்றப்பட்ட வெடி பொருள்கள் தொடர்பான ஆய்வுகளுக்கு விசேட நிபுணர்களின் ஒத்துழைப்பு பெறப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (வ)

## பொது இடத்தில் மதுபானம் அருந்திய நால்வருக்கு அபராதம்

பொது இடத்தில் இருந்து மதுபானம் அருந்தி, போக்கு வரத்துக்கு இடையூறு விளை வித்த குற்றச்சாட்டில் கைதான சந்தேக நபர்கள் 4 பேருக்கு தலா 3ஆயிரம் ரூபா வீதம் 12ஆயிரம் ரூபாவை அபராதமாக செலுத்துமாறு மல்லாகம் நீதிவான் சி.சதீஸ்தரன் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

பொது இடத்தில் மதுபானம் அருந்திய குற்றச்சாட்டில் வெவ் வேறு தினங்களில் கைதான சந்தேக நபர்கள் நால்வருக்கும் எதிராக மானிப்பாய் பொலி ஸார், தாக்கல் செய்த வழக்கு மீதான விசாரணை நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சந்தேக நபர்கள் தமது குற்றங் களை ஒப்புக்கொண்டதை அடுத்து நீதிவான் மேற்படி ஒவ்வொருவருக்கும்தலா 3ஆயிரம்ரூபா செலுத்த உத்தரவிட்டார். (வ–101)


# இலவச பயிற்சியுடன் வேலை வாய்ப்பு

Rotary



Rotary Club of Marbella அனுசரணையுடன், Rotary Club of Jaffna வழங்கும் ஹோட்டல் பராமரிப்புப் பயிற்சி நெறியில் இணைந்து, 6 மாத காலப் பயிற்சியின் பின்னர் உள்நாட்டிலும், வெளி நாடுகளிலும் பணிபுரிவதற்கான அரிய சந்தர்ப்பம்

**நீங்கள் :**

18 வயதுக்கு மேற்பட்ட ஒருவராகவும்,
தொழில் தேடும் யுவதியாகவும்,
6 மாத காலம் விடுதியில் தங்கியிருந்து கற்கக் கூடிய ஒருவராகவும் இருந்தால் உடனடியாக விண்ணப்பிக்கலாம்.

பயிற்சிகள் Telewatta, Hikkaduwa பகுதியில் உள்ள Manacare Foundation Centre நிறுவனத்தில் நடைபெறும். பயிற்சிக் காலத்தில் உணவு, தங்குமிட வசதிகள் றோட்டறிக் கழகத்தினால் இலவசமாக வழங்கப்படுவதுடன். வாராந்தம் / மாதாந்தம் விடுமுறைக்காக யாழ். வருவதற்கான பயண ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படும்

(சி.19294) (45.3)

Rotary
RI District 3220

**யாழ்ப்பாண றோட்டறிக் கழகம்.**
றோட்டறிச் செயலகம்,
359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
www.rotaryjaffna.org

மேலதிக விவரங்களுக்கு :
Rtn. S.அனுராஜ் - தலைவர் - 0777769751
Rtn. M.அருள் - செயலாளர் - 0770078887
Rtn. R.B.பிரஷாந் - செயற்றிட்ட இயக்குநர் - 0772222559

## தொடர்பு கொள்ளவும்

சண்டுக்குளி கோவிற்பற்று சிவியா தெரு "செம்மணி வெளி" பகுதியில் அமைந்துள்ள எமது நெற்பரப்புக் காணியை விற்பனை செய்யும் நோக்குடன் அதனை எல்லைப்படுத்த உத்தேசித்துள்ளோம். இக்காணியின் எல்லைக்காரர்களான கிழக்கு : செ.ஜயாத்துரை, மேற்கு: வீ. ஆறுமுகம் மகள் பரமேஸ்வரம்மா, தெற்கு : நமசிவாயம் கைம்பெண் செல்லாச்சிப்பிள்ளை ஆகியோர் அல்லது அவர்களின் ஆதனத்தில் உரித்துடையோர் தயவு செய்து கீழே குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் உடனடியாகத் தொடர்பு கொண்டு தங்களுடைய ஆதனத்தை அடையாளப்படுத்திக் காட்டுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
செ.சென் பீற்றர் 077 302 4234

(37631)(5.3.7)



## அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் உபயகாரர், தொண்டர்சபையினர், வழிபடுவோருக்கான கூட்டம்

**இடம்** : கும்பழாவளைப் பிள்ளையார் கோயில் மண்டபம்
**காலம்** : 01.03.2015 ஞாயிற்றுக்கிழமை
**நேரம்** : முற்பகல் 10.00மணி
**தலைவர்** : தர்மகர்த்தாக்கள் சபைத்தலைவர்
**ஆசியுரை** : ஆலய சிவாச்சாரியார்
**விடயம்** : 2015 மகாகும்பாபிஷேகம் பற்றிய முக்கிய முடிவுகள் எடுத்தல்

தலைவர்:
தர்மகர்த்தாக்கள் சபை.

(சி.19259) (46.3)



## பகுதிநேர வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு, **காப்புறுதி ஆலோசகராக**, யாழ். மண்ணில் 50 வருடங்களாகச் சேவையாற்றிவரும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்ற வாய்ப்பு.

- 2வாரப் பயிற்சிக் காலத்தையுடையது.
- பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரசஅங்கீகாரம்பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
- பணி நிலையங்கள்:
  யாழ்ப்பாணம், நெல்லியடி, சங்கானை, கிளிநொச்சி, முல்லைத்தீவு.

**அடிப்படைத் தகைமைகள்:**

- G.C.E. (O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி.
- 18 - 55 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை 15.03.2015 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல. 5048,
C/O உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



**May 9th யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்.**



IELTS
English for International Opportunity

Speciality of our course

- Special attention to Advanced Grammar Vocabulary
- 12 Practice tests with explanation
- Unlimited hours for listening practice
- Speaking practice

**British Council IELTS Provincial Partner of the Year - 2014**



**வகுப்புக்கள் 28.02.2015ல் ஆரம்பம்**



Course Schedule

| | Saturday&Sunday | Mon,Tues,Wed,Thur |
|---|---|---|
| Duaration | 10Week | 10Week |
| Time | 8.00 -11.00 | 8.30-10.30, 5.00 - 700 |

**BRITISH COLLEGE OF ENGLISH**
No. 192, NAVALAR ROAD, JAFFNA. (பெருமாள் கோயிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384 , 077 880 3887


# கலைஞர் இரத்தினத்துக்கு நவபுரத்தில் திருவுருவச் சிலை



தென்மராட்சி, பெப்.25

கைதடி, நவபுரத்தைச் சேர்ந்த கட்டடக் கலைஞர் சி.இரத்தினத்தின் திருவுருவச் சிலை கடந்த ஞாயிற்றுக் கிழமை நவபுரத்தில் திறந்து வைக்கப்பட்டது.

இ.கந்தசாமி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்து கொண்டார்.

திருவுருவச் சிலையை முன்னாள் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் ப.நடராஜா நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். சிலையை உருவாக்கிய கட்டடக்கலைஞர்களுக்கு நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (வ-9)

# குடும்பஸ்தர் வெட்டிக்கொலை; சந்தேகநபருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், பெப்.25

ஊர்காவற்றுறை, அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்தில் கடந்த ஞாயிற்றுகிழமை, மாலை இடம்பெற்ற வாள் வெட்டில் அல்லைப்பிட்டி ஏழாம் வட்டாரத்தைச் சேர்ந்த பொன்னையா சிவலிங்கம் (வயது-55) என்பவர் உயிரிழந்த சம்பவத்தில், யாழ். பொலிஸ் நிலையத்தில், சரணடைந்த சந்தேகநபரை மார்ச் 9 ஆம் திகதிவரை விளக்கமறியலில்வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் செல்வநாயகம் லெனின் குமார் உத்தரவிட்டார்.

வாள்வெட்டைமேற்கொண்டசந்தேகநபரும், உயிரிழந்த நபரும், சந்தேகநபரின் வீட்டில் இருந்து மதுபானம் அருந்தியுள்ளனர். பின்னர் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கத்தை அடுத்து, சந்தேகநபர் குறித்த குடும்பஸ்தரை கத்தியால் வெட்டியுள்ளதுடன், அருகில் கிடந்த அலவாங்காலும் தாக்கியுள்ளார்.

அதனையடுத்து, சம்பவ இடத்தில் இருந்து தப்பிய சந்தேகநபர் ஞாயிறு மாலை யாழ். பொலிஸ் நிலையத்தில் சரணடைந்திருந்தார். (வ-101)


## விசேட பல் வைத்திய நிபுணர்கள் வருகை



★ பல் முக சீராக்கல்
(Consultant orthodontist)

★ முக சத்திர சிகிச்சை
(Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- ★ மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ★ ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- ★ நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges,Implants)
- ★ வேர்முறை சிகிச்சை(Root canal Filling)
- ★ நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- ★ பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 654 4731 (தர்ஷினி)


# இளைஞரின் விளையாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கருத்து

அச்சுவேலி, பெப்.25

விளையாட்டு மூலம் வெற்றி தோல்வியைச் சமமாக மதிக்கின்ற பண்பும் உடல், உள வளர்ச்சியும் ஏற்படுகின்றன. இளைஞர்கள் தேவையற்ற விதத்தில் நேரத்தை வீணாக்காமல் மாலை நேரத்தில் விளையாட்டில் ஈடுபடுவது வரவேற் கத்தக்கது. இளைஞர்களில் விளையாட்டு செயற்பாடுகளுக்கு சமூகம் இடையூறு விளைவிக்காமல் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்"

இவ்வாறு கூறினார் அச்சுவேலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் ஜெயசிங்க.

அச்சுவேலி வடக்கு அமரர் சந்திரலிங்கம் ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப்போட்டி அச்சு வேலி மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடை பெற்றது.

இறுதிப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

"இளைஞர்கள் வீதியோரங்களிலும் பொது இடங்களிலும் நின்று வீண்பொழுது போக்குவதை, சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது. பிற்பகல் வேளைகளில் நிச்சயம் விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடவேண்டும். இளைஞர்களின் விளையாட்டு முயற்சிக்கு பொலிஸார் தங்களால் இயன்றவரை ஒத்துழைப்புவழங்கி உற்சாகப் படுத்துவார்.

இளைஞர்கள் விளையாட்டு முயற்சியில் ஈடுபடுவதை வீண் பொழுது போக்கு என சமூகம் ஒதுக்கி விடாமல், ஒத்துழைப்பு வழங்கி உற்சாகப்படுத்த வேண்டும். விளையாட்டு மூலம் வெற்றியையும் தோல்வியையும் சமமாக மதிக்கின்ற பண்பு விருத்திஅடைகின்றது. அத்துடன் உடல், உள, வளர்ச்சி கிட்டுகிறது. சமநிலை, ஆளுமை மேல்நிலை பெறுகின்றது– என்றார். (வ-11)


## பிரதேச சபைத் தேர்தல் - 2015

**புதுக்குடியிருப்பு பிரதேச சபை**



2

**செல்வன் கனகசபை டிலஸ்யந்தன் (டிசி)**
(சுகாதார உத்தியோகத்தர் கிளிநொச்சி)

**இலங்கை தமிழரசுக் கட்சி**
(தமிழ் தேசியக் கூட்டமைப்பு)

வலி தந்தோரைத் தோற்கடிப்போம்!
எம் விதி வெல்ல வாக்களிப்போம்



(51365) (3.8)


# சட்டவிரோத மின்சாரம் பெற்ற நபர்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், பெப்.25

சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்று, மின்சார சபைக்கு நட்டத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கைதான சந்தேக நபர்கள் இருவருக்கு 10ஆயிரம் ரூபாவை அபராதமாக செலுத் துமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டதுடன், மின்சார சபைக்கு நட்டம் ஏற்படுத் தியதற்காக, மின்சார சபை விதிக்கும் தண்டப்பணத்தையும் செலுத்துமாறு உத்தரவிடப்பட் டது.

அச்சுவேலி, பத்தமேனி பகுதியைச் சேர்ந்த இருவரை சட்டவிரோத மின்சாரம் பெற்ற மைக்காக இலங்கை மின்சார சபையின் புலனாய்வு அதிகாரிகள் கைது செய்திருந்தனர்.

குறித்த சந்தேக நபர்கள் இருவருக்கு எதிராக அச்சுவேலி பொலிஸார் நேற்று முன்தினம் வழக்குத் தாக்கல் செய்திருந் தனர். வழக்கு விசாரணையின் போது நீதிவான் சந்தேகநபர்களுக்கு மேற்படி உத்தரவை பிறப்பித்தார். (வ-101)


## அதிநவீன இலத்திரனியல் ஸ்கூட்டர்

கொகொரோ (Gogoro) என்ற இலத்திரனியல் ஸ்கூட்டர் ஒன்று CES (Consumer Electronics Show) நிகழ்வில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

முற்றிலும் மின்கலத்தின் உதவியுடன் இயங்கும் இந்த ஸ்கூட்டர், மணிக்கு 95 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கக்கூடியதாக இருப்பதுடன், 4.2 செக்கன்களில் 50வது/h என்ற வேகத்தை அடையக்கூடியதாகவும் இருக்கின்றது.

எனினும் இதன் விலை வெளியிடப்படாத நிலையில் இது இந்த வருடம் விற்பனைக்கு வரவுள்ளதாக அந்த நிறுவனத்தின் பேச்சாளர் Megan Zaroda தெரிவித்துள்ளார்.





## பேப்பரில் எழுதினால் போன் திரையில் தெரியும் ஸ்மார்ட் பேனா

ஐ போனில் இயங்கும் ஸ்மார்ட் பேனா என்ற புதிய தொழில்நுட்பம் விரைவில் சந்தைப்படுத்தப்பட உள்ளது.

இந்த ஸ்மார்ட் பேனா, ஐபோன் மூலம் இணைக்கப்பட்டு பேப்பரிலோ அல்லது ஏதாவது ஒரு பொருளின் மீதோ எழுதினால் அது அப்படியே ஐ போன் திரையில் பிரதிபலிக்கும்.

இதற்கான அப்ளிகேசனை ஐபோனில் நிறுவும் போது பேனாவின் அசைவை உள்வாங்கி ஐபோன் அந்த எழுத்துக்களை அப்படியே காட்சிபடுத்தும். இந்தப் புதிய தொழிநுட்பம் சந்தைக்கு விரைவில் வரவிருக்கிறது.

மேலும் விரைவில் அப்பிள் நிறுவனம் இந்த தொழிநுட்பத்தை தனது தயாரிப்புகளில் அறிமுகப் படுத்தும் என்று தெரிய வருகிறது.

## ஸ்மார்ட் கைபேசியை அறிமுகப்படுத்தியது ஏசஸ்



(ASUS)

Asus நிறுவனம் ZenFone 2 என்ற புத்தம் புதிய ஸ்மார்ட் கைபேசியை CES நிகழ்வில் அறிமுகம் செய்துள்ளது.

5.5 அங்குல அளவு, 1920 x 1080 Pixel Resolution உடைய தொடுதிரையைக் கொண்ட இந்தக் கைபேசி 2.3GHz வேகத்தில் செயல்படக்கூடிய 64 bit Processor, பிரதான நினைவகமாக 4GB RAM என்பனவற்றுடன் 16GB, 32GB, 64GB ஆகிய கொள்ளளவுகளை உடையதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவை தவிர 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 5 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமெரா என்பவற்றையும் 150Mbps வேகத்தில் தரவுப்பரிமாற்றத்தை மேற்கொள்ளக்கூடிய 4G LTE தொழில்நுட்பத்தையும் கொண்டுள்ளது.

இதன் விலை 199 அமெரிக்க டொலர்கள் ஆகும்.




## உதயனின் 30ஆவது ஆண்டில் மாபெரும் கலை, இலக்கிய போட்டிகளும் ஊக்குவிப்பு பரிசுகளும்!

### மாகாண மட்டத்தில் நீங்கள் பெறப்போகும் பரிசில்கள்

| போட்டிகள் | பிரிவு | தரம் | 1ஆம் பரிசு | 2ஆம் பரிசு | 3ஆம் பரிசு |
|---|---|---|---|---|---|
| சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் | A | 10,11,12,13 | ரூ.10000 | ரூ.7000 | ரூ.5000 |
| கட்டுரை, ஓவியம் மட்டும் | B | 6, 7, 8, 9 | ரூ.7000 | ரூ.5000 | ரூ.4000 |
| ஓவியம் மட்டும் | C | 3, 4, 5 | ரூ.5000 | ரூ.4000 | ரூ.3000 |

மூன்று பிரிவுகளாக நடைபெறும் இந்தப் போட்டியில், வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் முதல் 10 இடங்கள் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களும், மாவட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.3000, ரூ.2000, ரூ. 1000 பரிசும் வழங்கப்படும். மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 10 ஆக்கங்கள் மாகாண மட்டப் போட்டித் தேர்வில் உள்ளடக்கப்படும்.

### கவிதைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று.
கவிதைகள் 40 வரிகளுக்குக் குறையாமலும் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். மரபுக் கவிதையாகவோ, புதுக் கவிதையாகவோ அமையலாம்.

1. ஒழுக்கமே கல்விக்கு உன்னதமாம்.
2. கற்றதன் வழி உயர்வு காண்போம்.

### கட்டுரைப் போட்டி

பிரிவு A பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 600 - 750 சொற்கள்.

1. பூகோளமயமாதல்: தமிழர் எதிர்கொள்ளும் சவால்கள்.
2. மாகாணத்திற்கான நிலைபேண்தகு அபிவிருத்தி நடவடிக்கைகள்
3. எமது சடங்குகளில் புலம் பெயர்வினால் ஏற்பட்ட தாக்கங்கள்
4. எமது பண்பாடும் நாம் படும்பாடும்
5. நமது நவீன வாழ்க்கை முறைமையும், விவசாய விளை நிலங்களும்.

பிரிவு B பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது ஒன்று. 400- 550 சொற்கள்

1. எதிரகாலச் சந்ததியினருக்கான உலகு
2. கிராமியம் எம் உயிர் மூச்சு
3. சுற்றாடல் பேணுவோம்
4. தமிழர் வாழ்வும் வளமும்

### ஓவியப்போட்டி

| | |
|---|---|
| பிரிவு A தரம் 10,11,12,13 | தமிழர் பாரம்பரிய விளையாட்டில் ஈடுபடுவோர் |
| பிரிவு B தரம் 6, 7, 8, 9 | பனை வளமும் நாமும் |
| பிரிவு C தரம் 3, 4, 5 | பண்டிகை நிகழ்வு |

உங்கள் ஓவிய ஆக்கங்கள் 35 செமீ x 45 செமீ (14 x18) அளவுடைய வெள்ளை பிறிஸ்டல் போட் அல்லது வெள்ளை நிற கென்ற் (kent) தாளில், நீர் வர்ணம், பேஸ்டல் கலர் சோக் என்பன பயன்படுத்தி வரையலாம்.

### மக்கள் வங்கி அனுசரணையுடன் மாபெரும் சிறுகதைப் போட்டி

பிரிவு A தரம் 10,11,12,13 மாணவர்களுக்கானது. சிறுகதையானது, மாணவர் பிரச்சினையையோ சமூகப் பிரச்சினையையோ மையமாகக் கொண்டு அமையலாம். சிறுகதைகள் ஏ-4 தாளில் இரண்டரைப் பக்கம் தொடக்கம் நான்கு பக்கங்களுள் அடங்கியிருத்தல் வேண்டும். கையால் எழுதியோ, கணினியில் தட்டச்சுச் செய்தோ அனுப்பலாம்.

ஆக்கங்கள் அனைத்தும் உரிய விண்ணப்பப்படிவத்தில், பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு 28.02.2015 ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டிய முகவரி:

30 ஆவது அகவையில் உதயன்,
மாணவர் இலக்கியத் தேர்வுகள்
ஆசிரியர்,
உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### உதயன் 30ஆவது ஆண்டு ஆக்க இலக்கியத் தேர்வுகள்

பங்குகொள்ளும் ஆக்கம்: சிறுகதை/ கவிதை/ கட்டுரை/ ஓவியம்
(பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறி வெட்டிவிடவும்)
பங்குகொள்ளும் பிரிவு:
தரம் 10, 11, 12, 13 A-பிரிவு / தரம் 6,7,8,9, B-பிரிவு / தரம் 3, 4, 5 C-பிரிவு (பொருத்தமானதைத் தவிர்த்து ஏனையவற்றைக் கீறிவிடவும்)

பங்குபற்றும் மாணவர் பெயர்:-
செல்வன்/செல்வி ..................
சிறுகதை/கவிதை/கட்டுரை/ஓவியத் தலைப்பு
..................
கற்கும் பாடசாலை: ..................
தரம்: ..................
பாடசாலை அமைந்துள்ள மாவட்டம்: ..................
வழிப்படுத்திய ஆசிரியர் பெயர்: ..................
ஆசிரியரின் பாடத்துறை: ..................

அதிபர் பரிந்துரை:
மேற்படி ஆக்கம் எமது பாடசாலையில் தரம் .........இல் கல்வி கற்கும் செல்வன்/செல்வி .................. அவர்களது சுய ஆக்கம் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

அதிபரின் ஒப்பமும்
பதவி முத்திரையும்

உதயன்

ஆக்கம் தொடர்பான பணிமனைப் பாவனைக்கு

30 அகவையில் உதயன்

## மலையேறுபவர்களை பாதுகாக்க பாகிஸ்தானில் விசேட பொலிஸ்

இஸ்லாமாபாத், பெப்.25
உலகிலேயே இரண்டாவது மிகப் பெரிய மலைச்சிகரமான கொலை மலை பாகிஸ்தானில் உள்ளது. மலையேறுபவர்களை கவர்ந்த் இடமாக அது விளங்கியது. ஆனால் தொடர்ந்து நடைபெற்ற அசம்பாவித சம்பவங்களினால் தற்போது பாகிஸ்தானில் மலையேறுபவர்களின் வருகை வெகுவாக குறைந்துள்ளது. மீண்டும் மலையேறுபவர்களின் வருகையை அதிகரிப்பதற்காக, அச்சத்தை விலக்கி அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க சிறப்பு பொலிஸ் படையொன்றை பாகிஸ்தான் அரசு. நிறுவியுள்ளது. 50 சிறந்த பயிற்சி பெற்ற இராணுவ கமாண்டோக்கள் அடங்கிய காவல் படையை மலைச்சிகரங்களில் ஆங்காங்கே நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக,




அதிக பதற்றம் நிறைந்த பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியான சீன எல்லைக்கு அருகிலுள்ள கில்கித்–பால்திஸ்தான் மலைப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்படுகிறது.

## சிரியாவில் 56 கிறிஸ்தவர்கள் கடத்தல்

### தொடர்கிறது ஐ.எஸ்ஸின் அராஜகம்

டமாஸ்கஸ், பெப்.25
தெற்கு சிரியாவின் அருகில் உள்ள அல்கசாகா நகரில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த 56 சிரிய கிறிஸ்தவர்களை பணயக் கைதிகளாக ஐ.எஸ். தீவிரவாதிகள் கடத்தி சென்றுள்ளதாக அந்தநாட்டு மனித உரிமை அமைப்பொன்று தெரிவித்துள்ளது. கடத்தப்பட்டவர்களில் 10க்கும் மேற்பட்டவர்கள் தல் குர்மாஸ் நகரிலிருந்தும் மற்றவர்கள் தல் ஷமிராம் நகரிலிருந்தும் கடத்தப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது. அண்மையில் ஐ.எஸ். தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட 20 கிறிஸ்தவர்கள் தலை துண்டித்துக் கொல்லப்பட்ட நிலையில், தற்போது கடத்திச் செல்லப்பட்ட 56 கிறிஸ்தவர்களின் நிலை என்னவாகும் என்பது குறித்து உலகம் முழுவதும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.





## பிரபல திரைப்பட இயக்குநர் ஆர்.சி. சக்தி காலமானார்

சென்னை,பெப்.25
பிரபல திரைப்பட இயக்குநர் ஆர்.சி சக்தி நேற்றுமுன்தினம் சென்னையில் உடல் நலக்குறைவுக்கு உட்பட்டிருந்த நிலையில் காலமானார். இயக்குநர் ஆர்.சி சக்தி, கடந்த 4 நாள்களாக உடல்நலக் குறைவு காரணமாகக் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.
இந்தநிலையில் மாத்திரையை உட்கொண்ட போது திடீரென ஏற்பட்ட மூச்சுத் திணறலால், சென்னையில் மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டநிலையில் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.
ஆர்.சி சக்தியின் மறைவு குறித்து தமிழ் திரையுலகைச் சேர்ந்த பலர் இரங்கல் வெளியிட்டுள்ளனர்.

## அமெ.,நட்பு நாடுகள் குண்டு வீச்சு; இதுவரை 1600 தீவிரவாதிகள் சாவு

பெய்ரூட், பெப் . 25
ஈராக் மற்றும் சிரியாவில் ஆதிக்கம் செலுத்தும் ஐ.எஸ்.தீவிரவாதிகளை ஒழிக்க அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தி வருகின்றன.
இதுவரை நடந்த தாக்குதல்களில் 1600 தீவிரவாதிகள் சாவடைந்துள்ளனர். அவர்களில் ஐ.எஸ்.தீவிரவாதிகள், அல்குவைதா மற்றும் அல் நுஸ்ரா முன்னணியைச் சேர்ந்தவர்கள் அடங்குகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செய்தியாளர் மரியா கோல்வினாவின் உடல் கண்டெடுப்பு

இஸ்லாமாபாத்,பெப்.25
ரொய்ட்டர்ஸ் நிறுவனத்தின் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் நாடுகளுக்கான முதன்மைச் செய்தியாளர் மரியா கோல்வினாவின் உடல் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக இஸ்லாமாபாத் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மரியா கோல்வினா அவரது அலுவலகத்தில் மயங்கிய நிலையில் இருந்ததாகவும், அவரை மருத்துவமனையில் அனுமதித்தப் போது அவர் இறந்ததை பிம்ஸ் மருத்துவமனை உறுதி செய்ததாகவும் இஸ்லாமாபாத்தின் எப்–8 பொலிஸார் தெரிவித்துள்ளனர். மரியா கோல்வினாவின் சாவுக்கான காரணம் தெரியவரவில்லை. பிம்ஸ் மருத்துவமனை மருத்துவர்களால் மரியாவின் உடல் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் ரஷ்ய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நடு வீதியில் தரதரவென இழுத்துச் செல்லப்படும் மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி முகமெட் நசீட்.

## ஆஸ்திரேலிய குடியுரிமைச் சட்டத்தில் கட்டுப்பாடு



கன்பெரா,பெப்.25
நாட்டில் வெறுப்புணர்வை தூண்டும் தீவிரவாதிகளை இலக்கு வைத்து ஆஸ்திரேலியா தனது குடியுரிமைச் சட்டத்தைக் கடினப்படுத்துவதாக அறிவித்துள்ளது.
தீவிரவாதத்துடன் தொடர்புபட்ட இரட்டை பிரஜாவுரிமை பெற்றவர்களின் குடியுரிமை இடை நிறுத்தப்படும் அல்லது அகற்றப்படும் என்று ஆஸ்திரேலிய பிரதமர் டோனி அபோட் எச்சரிக்கை விடுத்துள்ளார்.
ஆஸ்திரேலியாவில் பிறந்தவர்களும் தீவிரவாத தடுப்பு சட்டங்களை மீறினால் சில சலுகைகளை இழக்க வேண்டி நேரிடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.
கடும்போக்கு இஸ்லாமியவாதிகளால் நாட்டின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருப்பதாக அவர் எச்சரித்துள்ளார்.
ஆஸ்திரேலியர்கள்பலர் ஐ.எஸ்.தீவிரவாத குழுவுக்காக ஈராக் மற்றும் சிரியாவில் போராடி வருவதாக நம்பப்படுகிறது. அவ்வாறானவர்கள் நாடு திரும்புவது குறித்து நிபுணர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

## வரவு செலவுத்திட்ட கூட்டத் தொடர் ஆரம்பம்

### நாடாளுமன்றில் ஜனாதிபதி முகர்ஜி உரை

புதுடில்லி, பெப்.25
இந்தியாவில் 3 மாத காலம் நடைபெறும் நாடாளுமன்ற வரவு செலவுத் திட்ட கூட்டத் தொடர் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. அதில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி உரை நிகழ்த்தினார்.
அதற்காக அவர்பாரம்பரிய முறைப்படி குதிரைப் பூட்டிய சாரட் வண்டியில் அழைத்து வரப்பட்டார். நாடாளுமன்ற வாசலில் அவரை துணை ஜனாதிபதி ஹமீது அன்சாரி, பிரதமர் நரேந்திர மோடி, நாடாளுமன்ற விவகார அமைச்சர் வெங்கையா நாயுடு, சபாநாயகர் சுமித்ரா மகாஜன் ஆகியோர் வரவேற்று அழைத்துச் சென்றனர்.
அதன் பிறகு இரு சபைகளின் உறுப்பினர்கள் அடங்கிய கூட்டுக் கூட்டத்தில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி உரை நிகழ்த்தினார். அதன்போது மத்திய அரசின் கொள்கைகள், திட்டங்கள் பற்றிய அறிவிப்புகளை அவர் வெளியிட்டார்.
வளர்ச்சித் திட்டங்கள் பயனாளிகளுக்கு நேரடியாகவும், தாமதமும், விரயமும் இன்றியும் கிடைக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.



மேலும் 35 வகையான திட்டங்கள் நேரடி மானியத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

## போருக்குத் தயாராகிறது வடகொரியா

### தென்கொரிய - அமெரிக்க பயிற்சிக்கு எதிர்ப்பு

பியொங்ஜாங்,பெப்.25
தென்கொரியா மற்றும் அமெரிக்க இராணுவத்தரப்புக்கள் கூட்டுப்பயிற்சியில் ஈடுபடவுள்ளன. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள வடகொரிய நாட்டுத் தலைவர் கிம் ஜாங் உன் தனது இராணுவத்தைப் போருக்குத் தயாராக இருக்க உத்தரவிட்டுள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
வடகொரிய இராணுவம் ஏற்பாடு செய்திருந்த மத்திய இராணுவ ஆணையக் கூட்டத்தில் பேசிய கிம் ஜாங் உன், எதிரிகளின் எந்த வகையான தாக்குதலுக்கும் பதிலடி கொடுக்க நாம் தயாராக இருக்க வேண்டும். தென் கொரியாவும் அமெரிக்காவும் நடத்தும் இராணுவக் கூட்டுப் பயிற்சி வடகொரியாவின் மீது போர்தொடுப்பதற்கான ஒத்திகை முயற்சி என்று தெரிவித்தார். வடகொரியா இதுவரை மூன்று அணு ஆயுதச்சோதனைகளைமேற்கொண்டிருந்தது.
நான்காவது முறையாக சோதனையை மேற்கொள்ளும் போது, அதற்கு அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்தது. அத்தோடு வடகொரியா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடைகளையும் விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்த ஆண்டுக்கான சிறந்த விமான நிலையமாக துபாய்

அதிநவீன கட்டடம், பசுமையான சுற்றுப்புறம், சுகாதாரமான மற்றும் பாதுகாப்பான வளாகம் என பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டுள்ள துபாய் சர்வதேச விமான நிலையம் இந்த ஆண்டுக்கான உலகின் சிறந்த விமான நிலையம் என்ற பெயரைப் பெற்றுள்ளது.



கடந்த 2014 ஆம் ஆண்டில் 7 கோடி பயணிகள் வந்து சென்றதன் மூலம் உலகின் பரபரப்பான விமான நிலையம் என்ற சிறப்பை இதுவரை தக்கவைத்திருந்த லண்டன் ஹீத்ரு விமான நிலையத்தை பின்னுக்குத் தள்ளி தற்போது முதல் இடத்தைத் துபாய் விமான நிலையம் பெற்றுள்ளது.



சோமாலியாவின் மொகடிஸ் நகரில் சந்தைப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட குண்டுவெடிப்பு

# எகிப்திய கிளர்ச்சியாளருக்கு ஐந்து ஆண்டுகள் சிறை



கெய்ரோ, பெப். 25
எகிப்தின் 2011ஆம் ஆண்டு கிளர்ச்சிப் போராட்டங்களில் முக்கிய பங்காற்றிய ஒரு முக்கிய அரசியல் செயற்பாட்டாளருக்கு எகிப்திய நீதிமன்றமொன்று 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது.
அரச அனுமதி இல்லாமல் போராட்டங்களில் மக்கள் ஈடுபடுவதில் இருந்து தடை செய்யும் சட்டம் ஒன்றை அவர் மீறியதாக தொடரப்பட்ட வழக்கின் மீள்விசாரணையில் அலா அப்தல் பட்டா என்பவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.
முன்னதாக அவருக்கு 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.
எகிப்தின் பிரபலமான வலைப்பூ எழுத்தாளரான அவர், எகிப்திய அரசை விமர்சிக்கும் முக்கிய குரலாக கருதப்பட்டார். முன்னைய வழக்கை ஒரு கேலிக்கூத்து என்று அவர் விவரித்திருந்தார்.
இந்தத் தீர்ப்பு வெளியான நேரத்தில் இராணுவ ஆட்சி ஒழிக அடக்குமுறை வீழ்க என்று அவரது ஆதரவாளர்கள் கோஷங்களை எழுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வடகொரியாவின் கொடுமைகள் அம்பலம்

## சிறையிலிருந்து மீண்ட பெண் பேட்டி



பியொங்ஜாங்,பெப்.25
சர்வதேச அளவில் வடகொரிய நாட்டுக்கு தலைவலியை ஏற்படுத்தும் விதமாக வட கொரியா நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவர் தாம் உண்ண உணவு வழங்கப்படாது பல சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு பாம்பு மற்றும் எலிகளை உண்டு உயிர் பிழைத்ததாகவும் மிக கொடுமையாக முகாமில் அறிமுகமே இல்லாத நபரொருவருக்கு 500 பவுண்ஸ்களுக்கு விற்கப்பட்டு ஒரு குழந்தைக்கு தாயானதாகவும் அதிர்ச்சியளிக்கும் தகவல்களை வெளியிட்டுள்ளார்.
பசியால், பட்டினியால் வாடும் மக்களின் அவல நிலையையும், தான் பட்ட கஷ்டங்களையும் கண்ணீர் மல்க அவர் தெரிவித்துள்ளார்.
கடந்த 1990ஆம் ஆண்டு இறுதியில் வடகொரியாவில் கடுமையான உணவுப் பஞ்சம் ஏற்பட்டதால் மக்கள் நிலைகுலைந்து போயினர்.
வடகொரியாவில் ஏற்பட்ட பஞ்சத்திலிருந்து தப்பிக்க எண்ணி ஜீ கியுன் பார்க் என்ற அந்தப் பெண், பல்வேறு போராட்டங்களுக்கு மத்தியில் வட கொரியாவிலிருந்து தப்பித்து சீனாவுக்குச் சென்றார்.
ஆனால் அவர் சீனாவின் பொருளாதாரத்தை சீர்குலைக்க முயல்வதாக குற்றம் சாட்டப்பட்டு மீண்டும் வடகொரியாவுக்கே திருப்பி அனுப்பப்பட்டார்.
பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் நாட்டிலிருந்து தப்பிக்க முயன்ற குற்றத்துக்காக ஓர் ஆண்டு காலம் தொழிலாளர் முகாமில் கடுமையான பணிகளைச் செய்யுமாறு வட கொரியா அரசு உத்தரவிட்டது.
ஓராண்டு காலமாகத் தான் அனுபவித்த துயரங்களுக்கு எல்லையே இல்லை. எந்த வார்த்தைகளாலும் அதனை விவரிக்க முடியாது என கண்ணீர்மல்க அவர் தெரிவித்துள்ளார். (ஓ–ரி)

# ஐ.எஸ். அமைப்பின் முக்கிய தலைவர் சுட்டுக்கொலை

பக்தாத்,பெப்.25
ஐ.எஸ். அமைப்பின் முக்கிய தலைவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
ஈராக்கின் மொசூல் நகரில் ஐ.எஸ் அமைப்பை நிர்வகிக்கும் அபூ டஜனா என்பவரை ஐ.எஸ். தீவிரவாதிகள் உட்பட இரண்டு மர்ம நபர்களே சுட்டுக் கொலை செய்துள்ளனர்.
அந்தச்செய்தியை வெளியிட்ட குர்திஷ் இன ஊடகங்கள் தற்போது இதனை உறுதிப்படுத்தியுள்ளன.
அதேபோல் கடந்த ஜனவரி மாதம் ஐ.எஸ். அமைப்பின் மற்றொரு முக்கிய தலைவர் தலைதுண்டித்துப் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



இந்த நிலையில் தொடர்ந்து நடைபெற்று வரும் சம்பவங்கள் தீவிரவாதிகளிடையே சற்று பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ–ரி)

# பனிக்குள் புதைந்த கப்பல் கனேடிய படையால் மீட்பு

ஒட்டாவா,பெப்.25
ஓஹியோவின் லேக் ஏரியில் பனிக்குள் சிக்குண்டிருந்த அமெரிக்கச் சரக்கு கப்பலொன்றை கனேடியகரையோரகாவற் படையைச் சேர்ந்த பனிக்கட்டி உடைக்கும் கப்பல்கள் மீட்டுள்ளன.



அன்டெர்சன் என்ற அமெரிக்க சரக்குக் கப்பல் ஓஹையோ துறைமுகத்துக்கு அருகில் பனிக்குள் சிக்கிக்கொண்டது.
கடந்த செவ்வாய்கிழமை நடைபெற்ற அந்தச்சம்பவத்தை யடுத்து, கிறிவ்வொன் மற்றும் சாமுவெல் றைஸ்லி ஆகிய இரண்டு கனேடிய கரையோர காவற்படைக் கப்பல்கள் பனிக்கூடாக ஒரு தடத்தை உருவாக்கி சரக்குக் கப்பலை விடுவித்துள்ளன.
சாமுவேல் றைஸ்லி என்ற கனேடியக் கப்பல் அன்டெர்சன் என்ற சரக்குக்கப்பலை வழித்துணையாக டிட்றொயிட் பகுதிக்கு அழைத்துச் சென்று கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ–ரி)



# சிறுவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பு

டமாஸ்கஸ், பெப்.25
சிறுவர்களுக்கு தீவிரவாதப் பயிற்சி அளித்து வரும் வீடியோ காட்சிகளை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத இயக்கம் வெளியிட்டுள்ளது.
9 நிமிடங்கள் அந்த வீடியோவில் இராணுவப் பயிற்சியில் 100 சிறுவர்கள் வரிசையில் அணிவகுத்து நின்று போர்ப் பயிற்சி மற்றும் தீவிரவாதப் பயிற்சி என்பவற்றில் ஈடுபடும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன.
பின்னணியில் ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தின் கறுப்பு நிறக் கொடி பறக்க, சீருடைகளுடன் தலையில் கறுப்பு நிற ரிப்பன்களை கட்டியபடி, பயிற்சியாளர்களின் கட்டளைக் குரலுக்கு அமைவாக அந்தச் சிறுவர்கள் செயற்படுகின்றனர். இளம் புலிகள் என அந்தப்படையை ஐ.எஸ். அமைப்பின் வீடியோ குறிப்பிடுகின்றது. அந்தப் படையில் 5 வயதுக்கு குறைவான சிறுவர்களும் இணைந்திருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ஓ–ரி)

# ஸ்பெயினில் நிலநடுக்கம்

மாட்ரிட், பெப்.25
ஐரோப்பிய நாடான ஸ்பெயினில் நேற்று கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. ஸ்பெயின் நாட்டின் மத்திய பகுதியிலும், தலைநகர் மாட்ரிட் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் நேற்று மாலை நிலநடுக்கம் உணரப்பட்டது.
இதனால் வீடுகள் மற்றும் கட்டடங்கள் அதிர்ந்தன. அதனை தொடர்ந்து அச்சமடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் அடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ–ரி)



# விமானம் தாங்கிக் கப்பலை களமிறக்கியது பிரான்ஸ்

## ஐ.எஸ்.தீவிரவாதிக[illegible]க்கு எதிரான போருக்கு

பரிஸ்,பெப்.25
ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்துக்கு எதிராக தாக்குதல் நடத்த இராணுவ விமானம் தாங்கிக் கப்பலொன்றை அனுப்பியுள்ளதாக பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.
அமெரிக்காவின் தலைமையில் கூட்டணி நாடுகளின் இராணுவத்தினர் ஈராக்கில் உள்ள ஐ.எஸ். அமைப்பு தீவிரவாதிகளை எதிர்த்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.
இந்தத்தாக்குதலில்இணைந்துசெயற்படும் விதத்தில் பிரான்ஸின் விமானம் தாங்கிக் கப்பலை வளைகுடா கடற்பகுதியில் நிறுத்தியுள்ளதாக பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். ஈராக்கில் உள்ள ஐ.எஸ் அமைப்புக்கு எதிரான தாக்குதலில் பங்களிப்பை ஆரம்பித்துள்ளதாகவும், விமானம் தாங்கிக் கப்பலுக்குரிய விமானங்களை ஏற்கனவே அனுப்பி விட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சின் அலுவலக அதிகாரி தெரிவித்துள்ளார். மேலும், இந்த விமானம் தாங்கிக் கப்பல் ஜோர்தான் மற்றும் அரபுநாடுகளின் கடலில்தளங்களை அமைத்து, அங்கிருந்து ஈராக்கில் உள்ளஐ.எஸ்.தீவிரவாதிகளைதாக்க ஆரம்பிக்கும் என்று கூறப்பட்டுள்ளது. (ஓ–ரி)



# தண்ணீர் தண்ணீர்



■ சு.சிவாஜினி

நாம் உயிர் வாழ்வதற்கு உணவை விடத் தண்ணீரே முக்கியமானது. உணவு இல்லாது போனாலும் எமது ஊர்த் தண்ணீரைக் குடித்துவிட்டு இருக்கலாம் என்று கூறுவது எமது சுன்னாகம் கிராமத்தில் காணப்படும் தண்ணீரின் சிறப்பை எடுத்துக் கூறுவதென்றால் அது மிகையாகாது.

சுத்தமான எமது பகுதி நீர் இன்று நச்சுத் தன்மையாக மாறிவிட்டது. எமது அடுத்துவரும் பல தலைமுறையை மெல்லக் கொல்லும் ஒரு கொடூர பிரச்சினை இது என்பதனை ஏன் எமது சமூகம் உணர்ந்து கொள்ள மறுகின்றது?

எந்தவிதமான உபயோகத்துக்கும் எமது கிணற்று நீரைப் பயன்படுத்த முடியாது. ஒட்டு மொத்த செயற்பாடுகளும் நாசமாகிக் கொண்டு போகின்றன. இந்தப்பாதிப்பைஎவ்வாறு நிவர்த்தி செய்வது என்பது புரியவில்லை. நாம் இந்த நீரைத் தானே உபயோகித்துக் கொண்டிருக்கின்றோம். இதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை பாதிக்கப்பட்ட மக்களே தீர்மானிக்க வேண்டும். எமது மக்களில் பலர் எந்த விதமான சிந்தனையும் இன்றித் தாமும் தமது பாடும் என்ற நிலையில் அமைதியாக இருக்கின்றனர். சுத்தமான நீர் இல்லையென்றால் என்ன விவரீதம் ஏற்படும் என்பதைச் சிந்திக்காது பிறரின் தலைகளில் சுமத்திவிட்டு வீணான செயல்களில் ஈடுபட்டுக் கொண்டும் இருக்கிறார்கள் என்று தான் சொல்ல வேண்டியுள்ளது.

உதாரணமாக ஒரு தாய் தனக்குக் காய்ச்சல் என்றால் தன்பிள்ளைக்கு பால்கொடுக்கவே பயப்படுவாள். பிள்ளைக்கும் தனது நோய் தொற்றிவிடும் என்ற பயமே இதற்கான காரணமாகும்.


நிலைமை இவ்வாறு இருக்க, இன்று விஷம் கொடுத்து எமது பிள்ளைகளை நாமே நாளாந்தம் கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்கின்றோம். அதாவது எமது குடிதண்ணீர் விஷத்தன்மை கொண்டதாக மாறி இருக்கின்றது. இதனை எமது செல்வங்கள் பருகுகின்றார்களே, இதனால் என்ன நடக்கும் என்று எந்த அம்மாவும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. மருத்துவர்களின் அறிக்கைப் பிரகாரம் மிகப் பெரிய பாதிப்புக்களை நாம் எதிர்கொண்டுள்ளோம். இதிலிருந்து எமது சந்ததியைக் காப்பாற்ற வேண்டும் என்று எத்தனை பேர் முன் வருகின்றனர்? இதுவொரு பொதுவான பிரச்சினையல்ல ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட பிரச்சினை, உரிமை சார்ந்த பிரச்சினை. அனைவரும் ஒன்றுபட்டுப் பாடுபடும் போதுதான் மாற்றம் ஏற்படும்.

தன்னைச் சுற்றி என்ன நடக்கின்றது என்பது தெரியாமல் எமது சமூகம் இருக்கின்றது. இன்றைய படித்த சமூகம் இவ்வாறு இருப்பது மிகப் பெரிய துரோகமாகும்.

நாளும் நச்சுநீரைப் பருகுகின்றோம் என்ற எண்ணமே இல்லாமல், எமது இளைஞர், யுவதிகள் எந்தவிதமான சிந்தனையும் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். கொண்டாட்டம் இசைக் கச்சேரி என்பன எங்கு இடம் பெற்றாலும் ஆடம்பரமாகக் குடும்பத்தோடு செல்கின்ற எம்மவர்கள் எமது தண்ணீருக்காக யாரோ ஒருவர் உண்ணாவிரதம் இருக்கிறாரே எமது பங்களிப்பையும் கொடுப்போம் என்று சிந்திக்கின்றனரா? இல்லை தமக்கு நேரமில்லை. உதெல்லாம் சும்மா விசர் வேலை என்று சிரிக்கும் கூட்டமும் எம்மோடு தான் இருக்கின்றது. தண்ணீரில் என்ன பிரச்சினை என்று தெரியாத பட்டதாரிகளும் எம்மோடு தான் இருக்கிறார்கள். இதையொரு மிகப் பெரிய துரோகம் என்று தான்கூற வேண்டும்.

சுற்றுலாவாக சுன்னாகத்திலிருந்து ரயிலில் யாழ்ப்பாணம் போகிறார்கள். எமது குடிதண்ணீருக்கான போராட்டத்துக்கு இவர்களுக்கு நேரமில்லை. இவர்களா மனிதர்கள்? எந்த விதமான உணர்வும் அற்றவர்களாக இவர்கள் இருப்பது மிகப் பெரிய வேதனையைத் தருகின்றது.

குறிப்பாகப் பெண்கள் இதனை முக்கியமாக உணர்ந்து கொள்ள வேண்டும். எல்லாவற்றுக்கும் பொறுப்பாக இருப்பதுபெண்கள் தான். தான் பெற்றெடுத்த பிள்ளை நச்சு நீரைக் குடித்துக் கொண்டிருக்கிறது. அதனால் பெரிய பாதகம் ஏற்படப் போகின்றது என்பதைப் பெண்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். எமது சமூகத்தின் மத்தியில் உலாவும் சில கட்சிசார் மனிதர்கள், சில பொய்களைக் கூறி எமது மக்களை முடக்கி விடுகின்றமை வெளிப்படையாகத் தெரியாமல் இருந்தாலும், மக்கள் அவற்றைக் கவனமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். பயந்து பயந்து கைகட்டி, வாய் பொத்திக் கேவலமான வாழ்வு வாழ்வதைவிட எமது குடிதண்ணீருக்கான பிரச்சினையைத் தீர்க்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து கொள்வது தான் நன்மை பயக்கும். நாம் கேட்கின்றோம் எமது நீரை யார் நாசம் பண்ணியது என்று தானே. அதற்கு எதற்குப் பயம்?





# ஒரு கூரையின் கீழ் சுற்றுலா உற்பத்திகள்

இம்முறை சஞ்சாரக உதாவ – 2015 கண்காட்சியில் 200 இற்கும் மேற்பட்ட கடைத்தொகுதிகளை அமைக்கவுள்ளதாக மஹேன் காரியவசம் தெரிவித்தார்.

சஞ்சாரக உதாவ – 2015 கண்காட்சி தொடர்பாக ஊடகவியலாளர் சந்திப்பொன்று மொனரா ரெஸ்டுரன்டில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

சஞ்சாரக உதாவ – 2015 கண்காட்சியில் அதிகரித்த கடைத்தொகுதிகளுக்கான கேள்விகளை அனுமதிக்கும் நோக்குடன் இம்முறை நிகழ்வை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அமைந்துள்ள சிறிமாவோ பண்டாரநாயக்க நினைவு கண்காட்சி மத்தியில் அமைத்துள்ளோம்.

சுற்றுலாத்துறையினரோடு தொடர்புடைய சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்களும் தொழில் முயற்சியாளர்களும் களம் காணும் கண்காட்சியாக இந்த சஞ்சாரக உதாவ உருவாக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வுகள் பல சிறிய முயற்சியாளர்களுக்கு புத்தூக்கம் அளித்துள்ளதுடன் கண்காட்சியின் இலக்கையும் அடைய வெற்றிகரமாக வழி சமைத்துள்ளது. இந்தத் தடவை 200 இற்கும் மேற்பட்ட கடைத்தொகுதிகளை அமைக்க உள்ளோம்.

நமது நாட்டில் உற்பத்திசெய்யப்படுபவை தொடர்பில் எமது உள்நாட்டு சந்தைகள் அறியாதிருப்பதுடன் பெரும் கம்பனிகள் சுற்றுலாத்துறையில் கிடைக்கும் பொருள்கள் மற்றும் சேவைகளையும் அறியாதுள்ளன.

சஞ்சாரக உதாவ இவ்வாறான வெவ்வேறு துறையினரை ஒன்றிணைக்கும் பாலமாகத் திகழ்ந்து சகலதுறையினரும் பயனடைய வழி சமைக்கின்றது.

சஞ்சாரக உதாவ இத்தருணம் 5 ஆவது தடவையாக ஏப்ரல் மாதம் 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளதோடு அதில் பெரும் எண்ணிக்கையிலான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பார்வையாளர்களும் கலந்துகொள்ளவிருப்பதாக எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை இக் கண்காட்சியில் சுற்றுலாத்துறையில் ஆர்வமுடையவர்களும் மாணவர்களும் பங்குபற்றி தங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ளலாம். (த)



## இரத்தினபுரியில் தனது சொந்தக் கட்டடத்தில் புதிய கிளையை திறந்துள்ள செலிங்கோ லைப்

ஆயுள் காப்புறுதித் தலைவர்களான செலிங்கோ லைப் இரத்தினபுரி நகரில் தனது சொந்தக் கட்டடத்தில் புதிய கிளையைத் திறந்துள்ளது. இலங்கையின் சப்பிரகமுவ மாகாணத்தில் தனது நிலையை தொடர்ந்து ஸ்திரப்படுத்தும் வகையில் தனது சொந்தக் காணியில் இந்தக்கட்டடத்தை வசதியான முறையில் கம்பனி நிர்மாணித்துள்ளது.

இந்த மூன்று மாடி கட்டடம் இலக்கம் 45 தர்மபால மாவத்தை, இரத்தினபுரி என்ற முகவரியில் அமைந்துள்ளது. கம்பனியின் மூன்று கிளைகளை ஒரே இடத்தில் கொண்டுவரும் வகையில் 10,200 சதுர அடி பரப்பளவில் இந்தக் கட்டடம் அமைந்துள்ளது.

10 கிலோவொற்ஸ் சூரிய சக்தி மின்சக்திவள ஆற்றல், சக்தி ஆற்றல் கொண்ட குளிரூட்டல் வசதி மற்றும் மின்ஒளி விளக்குகள் உட்பட சக்தி ஆற்றல் வசதி உபகரணங்களைக் கொண்டதாக இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

65 ஊழியர்கள் பணிபுரியும் இங்கு போதிய வாகன தரிப்பிட வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கட்டடத்தின் மூன்றாம் மாடியில் மாநாட்டு கூட்ட வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட நோக்கங்களின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட இந்தக் கட்டடத்தின் மூலம்; ஆயுள் காப்புறுதித் தலைவர்களின் அபார சேவைகளை இரத்தினபுரி மக்கள் இப்போது பெற்றுக் கொள்ள முடியும். இந்த நகரம் மற்றும் அதன் சுற்றுப்புறம் என்பனவற்றின் மீதான எமது அர்ப்பணத்தையும் இது புலப்படுத்துகின்றதுஎன்று கூறினார் செலிங்கோ லைப்பின் முகாமைத்துவப் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஆர்.ரெங்கநாதன்.

இலங்கையின் ஆயுள் காப்புறுதித் தொழில்துறையில் ஆகக் கூடுதலான கிளை வலையமைப்னப செலிங்கோ லைப் நிறுவனமே செயற்படுத்துகின்றது. (த)




## அவல நிலையில் காணப்படும் கிளிநொச்சி பஸ் நிலையம்

கிளிநொச்சி பஸ் நிலையம் கனகபுரம் வீதியில், ஏ–9 வீதியில் இருந்து சுமார் 150 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. இங்கிருந்து தினமும் 50 இற்கும் மேற்பட்ட பஸ்கள் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, பூநகரி, மல்லாவி, வட்டக்கச்சி, மாங்குளம், விசுவமடு, பளை, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கொழும்பு, திருகோணமலை, கண்டி, மட்டக்களப்பு போன்ற இடங்களுக்குச் சேவையில் ஈடுபடுகின்றன. மேலும் இந்த பஸ் நிலையம் கிளிநொச்சி பொதுச் சந்தையில் இருந்து 20 மீற்றர் தொலைவில் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. பொதுச் சந்தைக்கு வந்து போகும் நுகர்வோர் உட்பட சுமார் 2000இற்கு மேற்பட்ட பயணிகள் இந்த பஸ் நிலையம் ஊடாகப் பயணிக்கிறார்கள். 20இற்கும் மேற்பட்ட இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களும் 30 இற்கும் மேற்பட்ட தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபடுகின்ற போதிலும் இங்கு பயணிகள் தங்கி நிற்பதற்கு ஒரு கொட்டகை கூட இல்லை. வெயில் மழை காலங்களில் பயணிகள் கடுமையான சிரமங்களை இங்கு எதிர்கொள்கிறார்கள். குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார், நோயாளர்கள், முதியவர்கள் என அனைவருமே கால் கடுக்க நின்று தான் பஸ் எடுத்துச் செல்கிறார்கள். அத்துடன் பொது மருத்துவமனைக்கு வந்து போகும் நோயாளர்கள் கூட இந்தப் பஸ் நிலையத்தையே பயன்படுத்துகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. போர் நிறைவடைந்து 6ஆண்டுகள் ஆகின்ற போதிலும், இங்கு ஒழுங்கான பஸ் நிலையம் அமைக்கப்படவில்லை.

மேலும் பயணிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக மக்கள் பிரதிநிதிகளோ அல்லது அரச அதிகாரிகளோ கவனம் செலுத்தவில்லை. எனவே இது விடயத்தில் உரிய மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் இனியாவது கவனம் செலுத்தி தற்காலிக கொட்டகையாவது அமைத்துத் தருமாறு பயணிகள் கேட்டுக்கொள்கிறார்கள். இந்த இடம் கரைச்சி பிரதேச சபையின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே மக்கள் பிரதிநிதிகளும் அதிகாரிகளும் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி குறிப்பிட்ட விடயத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதும் சாலச் சிறந்ததாகும்.

*க.ஜெயக்குமார்*

## செல்லத்துரை வீதிக்கு விமோசனம் கிடைக்காதா?

சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்துக்கு வடக்குப் புறமாக அமைந்துள்ள சட்டத்தரணி செல்லத்துரை வீதி சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. இந்த வீதியின் பல இடங்களிலும் சல்லிக் கற்கள் பரவிய நிலையில் காணப்படுவதால் சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் ஆகியன பாதிப்பை எதிர்கொண்டு வருகின்றன.

மேலும் மழை காலங்களில் இந்த வீதியில் அமைந்துள்ள டயலொக் நிறுவனத்தின் களஞ்சியத்துக்கு முன்பாக உள்ள வீதியின் ஒரு பகுதியில் வெள்ளநீர் தேங்கி நிற்பதால் நடந்து செல்ல முடியாத அவலநிலை காணப்படுகின்றது. சாதாரண நாள்களிலும் இந்தப் பகுதியூடாகச் செல்வதில் சிரமங்கள் காணப்படுகின்றன.

இந்த வீதி மிக நீண்டதாகக் காணப்படுவதுடன் ஆங்காங்கு சேதமடைந்து காணப்படுவதால், இந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

வலி.தெற்குப் பிரதேச சபையினர் இந்த வீதியின் அவல நிலையை நேரில் பார்த்து அதனைப் புனரமைப்புச் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென இதனைப் பயன்படுத்தும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

*க.மயூரன், வரிப்புலம்.*

### கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

## தொடர்ந்து இழுபறியில் மீனவர்கள் பிரச்சினை

இலங்கை–இந்திய மீனவர் பிரச்சினை தீர்வின்றி தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இரு நாட்டு மீனவர்களுக்கு இடையேயும் மீன்பிடி முறை மற்றும் கடல் எல்லை தொடர்பாக இருந்துவரும் இந்தப் பிரச்சினையை தீர்த்து வைப்பதில் இரு நாட்டு அரசுகளும் மெத்தனப் போக்குடனேயே செயற்பட்டுவருகின்றன. இதனால், தொடர்ந்தும் ஓர் இழுபறியான நிலையிலேயே மீனவர் பிரச்சினை உள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக தொடரும் மீனவர் பிரச்சினைக்கு இரு நாடுகளிடமும் உறுதியான–பயனுள்ள தீர்வுத் திட்டம் எதுவும் இல்லை. இரு நாட்டு மீனவர்களும் அடிக்கடி எல்லை தாண்டுவதாகக் குற்றம்சாட்டப்பட்டு கைதுசெய்யப்படுகின்றனர். அவர்களது படகுகளும் பறிக்கப்படுகின்றன. பின்னர், இருநாடுகளும் பேசி கைதான மீனவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள். கைதாவதும் பின்னர் விடுவிக்கப்படுவதும் அண்மைக் காலமாக தொடர்கதையாகியுள்ளது.

அண்மையில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்ட இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால, இந்தியப் பிரதமர் மோடியுடன் பேசி, மீனவர் பிரச்சினைக்கு ஓர் உறுதியான தீர்வைக் காண்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும், அப்படி எதுவும் இடம்பெறவில்லை. மீனவர் விடயம் பேச்சில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதும், அதுகுறித்து தீர்மானம் எதுவும் எட்டப்படவில்லை.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அடிக்கடி நுழையும் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகள் இங்குள்ள கடல் வளத்தை அள்ளிச் செல்வதுடன், உள்ளூர் மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களையும் சேதப்படுத்துவதாக குற்றம்சாட்டப்பட்டு வருகின்றது. இந்திய மீனவர்களின் இந்த ஊடுருவல் காரணமாக அதிகம் பாதிக்கப்படுபவர்கள் வடபகுதி மீனவர்களே.

இந்தியாவின் இராமேஸ்வரம், நாகபட்டினம் ஆகிய கரையோர மாவட்டங்களில் இருந்து , பெரும் தொகையில் புறப்படும் இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகள் நேரடியாக வடக்குக் கடல் பகுதிக்குள் பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபடுகின்றன. இவ்வாறு வடக்குக் கடல் வளத்தை அள்ளிச் செல்வதால், போதிய மீன்பாடு இன்றி, பாதிக்கப்படுகிறார்கள் உள்ளூர் மீனவர்கள்.

இதனால், இந்தப் பிரச்சினைக்கு விரைவில் உறுதியான முடிவை எட்டுமாறும் உள்ளூர் மீனவர்கள் கோரிவருகின்ற போதும் அது குறித்து அரசு அக்கறையற்றதாகவே உள்ளது.

மீனவர் பிரச்சினைக்கு தீர்வுகாண இரு நாட்டு மீனவர்களுக்குமிடையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேச்சு மீண்டும் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய அரசின் 100 நாள் வேலைத்திட்டத்தை வேகமாக முன்னெடுக்க வேண்டியுள்ளதால், மீனவர் பேச்சை பிற்போட்டுள்ளதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது. மீனவர் பிரச்சினையை விட தனது 100நாள் திட்டமே அரசுக்கு முக்கியமாகத் தெரிவதால், மீனவர் பேச்சை அது புறந்தள்ளியுள்ளது. ஏற்கனவே திட்டமிட்டவாறு எதிர்வரும் மார்ச் மாதம் 6ஆம் திகதி இரு நாட்டு மீனவர்களும் சென்னையில் அல்லது கொழும்பில் பேச்சு நடத்துவதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்படுவதாக இலங்கை கடற்றொழில் அமைச்சு தெரிவித்திருந்தது. ஆயினும் அது இப்போது ஏப்ரலுக்கு பின்தள்ளிப் போயுள்ளது.

புதிய அரசு பதவியேற்ற பின்னர், இந்திய மீனவர்களின் அத்துமீறல் அதிகரித்துள்ளதாக வட இலங்கை மீனவர் சங்கம் குற்றம்சாட்டியுள்ளது. இலங்கைக் கடற்படையினரும் இது தொடர்பில் அக்கறையற்று உள்ளதாக அது கூறியுள்ளது.

இவ்வாறு இந்தப் பிரச்சினை குறித்து இரு நாட்டு அரசுகளும் இதயசுத்தியுடன்–முழு மனதுடன் தீர்வுகாண முன்வராமையால், இலங்கை–இந்திய மீனவர்களுக்கு இடையேயான உறவு எதிர்காலத்தில் ஒரு முரண்பாடான நிலைக்கு செல்லக்கூடிய நிலைமைகள் தென்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆகவே, இரு நாட்டு அரசுகளும் இந்த விடயத்தில் விரைந்து அக்கறை செலுத்தி, பேச்சுக்களை ஆரம்பித்து தீர்வை எட்டுவதற்கு முயற்சிக்கவேண்டிய தேவை இப்போது ஏற்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் மோடி இலங்கைக்கு வரும் வேளையிலாவது இது குறித்து ஒரு தீர்க்கமான முடிவு எட்டப்படவேண்டும் என எதிர்பார்க்கிறார்கள் உள்ளூர் மீனவர்கள். அதனைப் புதிய அரசு நிறைவேற்றுமா?

பத்தி எழுத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசினது நத்தைவேகப் போக்கு தமிழர்களை ஏய்க்காட்டும் முனைப்பே.......

♦ நூற்றுக்கணக்கான அரசியல் கைதிகளை விடுதலை செய்வது குறித்து, அரசாங்கம் தனது கவனத்தைச் செலுத்தி உள்ளது.

♦ போர்க்காலத்தில் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் காணிகளை மீண்டும் தமிழ் மக்களிடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

♦ அரசியல் கைதிகளின் விவரம் திரட்டப்பட்டு வருகிறது. எமது அரசின் பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னர் (அரசியல்) கைதிகளின் எண்ணிக்கை குறித்த சரியான விவரத்தை அறிவிப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன். அனேகமாக மார்ச் மாதத்தில் (அடுத்த மாதத்தில்) அதனை வெளியிட இயலும்.

♦ இரகசியத் தடுப்பு முகாம்கள் இருப்பின், அவற்றில் உள்ளவர்களை வெளியில் எடுத்து - வெளியில் கொண்டு வந்து - அவற்றை மூடிவிட இயலும்.

♦ காணாமற்போனதாக அறிவிக்கப்பட்டு, பெயர் கண்டுபிடிக்க - முடியாதவர்களில் சில சாரார் இறந்திருக்கவும் கூடும்.

அமெரிக்காவின் பிரபல ஊடகங்களில் ஒன்றான "நியூயோர்க் ரைம்ஸ்" பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் மேற்கண்ட தகவல்களை வெளியிட்டுள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இயங்கும் அரசு, பதவி ஏற்று ஒன்றரை மாதங்கள் (நாற்பத்தாறு நாள்) கழிந்த நிலையில் பிரதமர் மேற்போந்த கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். மொத்தத்தில் ஆறுமாத கால ஆட்சி முடிவில், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, தேர்தல் நடத்தப்பட்டு, புதிய அரசு ஒன்றை நிறுவுவதே இப்போதைய அரசின் திட்டம்.

அதுவரை இடைக்கால ஆட்சியே நடைபெற உள்ளது. அதனால், இப்போது திட்டமிடும் எந்த விடயத்தையோ அல்லது தீர்மானத்தையோ உடனுக்குடன் செயற்படுத்த இயலாது, நிறைவேற்ற முடியாது.

கடந்த மஹிந்த ஆட்சியின்போது, தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகள், உரிமை பறிப்புக்கள், ஜனநாயக நெறிமுறைகளைக் காலால் மிதித்து உதைத்துத் தள்ளியமை போன்ற சர்வாதிகாரப் போக்குகளால், அந்த அரசிடம் இருந்து எதனையுமே பெறமுடியாது என்ற நிலையே தமிழ் மக்கள் முன்னால் நீண்டு பரந்து மேலுயர்ந்தது.

அதனை மனதில் கொண்டே, மைத்திரிபால சிறிசேனவை, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற வைத்தனர் வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள். அதற்கு நன்றிக்கடனாகவேனும் தமிழ் மக்கள் அனுபவித்து வரும் மிக முக்கியமான, உடனடிப் பிரச்சினைகளுக்கும், தவிர்க்க முடியாத மனி தாபிமானத் தேறல்களுக்கும் உதவ வேண்டிய கடமை, புதிய அரசுக்கு உண்டு. ஆறுமாத காலத்தில் எல்லாவற்றுக்கும் விரைந்து செயற்பட முடியாது என்று காரணம் கற்பித்து நழுவிவிட நினைக்கலாகாது.

அண்மையில் அரசு அறிவித்த, அத்தியாவசிய மற்றும் பாவனைப் பொருள்களுக்கான விலைக் குறைப்புப் போன்று, இப்பத்தியில் அட்டவணை இடப்பட்ட தமிழ் மக்களின் விடயங்களில் ஆட்சியாளர்கள், மனமொன்றி விரைந்து செயற்பட வேண்டும். தென்னிலங்கை மக்களின், பெரும்பான்மை யினரின், வாக்குகளைத் திரட்டிப் பொதுத் தேர்தலில் வென்று விட்டால் போதும் என்ற சமன்பாட்டை நிமிர்த்திப் போடுவதற்கு எண்ணலாகாது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மார்ச் மாத அமர்வை, செப்ரெம்பருக்கு ஒத்திவைப்பதற்குப் பயன்படுத் திய ராஜதந்திர உத்திகளைக் கையில் எடுத்துச் செயற்படுவதற்கு ரணில் விக்கிரமசிங்க அரசு முனைந்தால் --

தமிழ் மக்களின் வாக்குகள் அதற்குத் தக்க [illegible] கொடுக்கும். அதனை விடுத்து, தமிழ் மக்[illegible] தொடர்ந்து ஏய்க்காட்ட பிரதமர் [illegible] சரி, சந்திரிகா குமாரதுங்கவும் சரி திட்ட[illegible] அது அவர்களின் வீழ்ச்சிக்கே வழி [illegible].

# பலமுனைகளில் சவால்களை எதிர்கொள்ளும் சிறிசேன அரசு



சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து
ரெங்கன்

மோசடிகள் மற்றும் லஞ்சஊழல்களை ஒழித்துக்கட்டுவதே புதிய அரசின் அதிமுக்கிய செயற்பாடுகளில் ஒன்று. ஆனால் இந்த விடயத்தில் அதன் செயற்பாடுகள் மிகவும் ஆமைவேகத்தில் நகர்வது மக்கள் மத்தியில் அதிருப்தியை தோற்றுவித்து வருகின்றது. பொருத்தமான சட்டநடைமுறைகள் பின்பற்றவேண்டியிருப்பதாக அரசுத் தலைவர்கள் விளக்கங்கள் தருகின்றார்கள். லஞ்சம், ஊழல் மற்றும் இவைபோன்ற முறைகேடுகளில் ஈடுபட்டவர்களை நீதிமன்றங்களின் முன் நிறுத்த வேண்டியிருப்பதால் இந்த நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியிருக்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள்.

எதுவானாலும் ஊழல் ஒழிக்கும் நடவடிக்கைகள் கடந்த வாரம் புதிய திருப்பம் ஒன்றை ஏற்படுத்தியிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. பம்பலப்பிட்டியவில் ஊழல் ஒழிப்பு செயலகம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. செயலகத்தின் பணிப்பாளராக ஆனந்த விஜேயபால செயற்படவிருக்கிறார்.

பொதுமக்கள் ஊழல்கள் தொடர்பான தமது முறைப்பாடுகளை இந்த அமைப்புக்கே அனுப்பி வைக்க வேண்டும். அவ்வாறு கிடைக்கும் புகார்கள் முறையாக ஆராயப்பட்டு அவைக்குரிய அதிகாரிகளுக்கு விசாரணைக்காக் அனுப்பி வைக்கப்படும். இந்தப் புகார்கள் எந்த அளவுக்கு ஆய்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பது இரண்டு வாரங்களுக்கு ஒருதரம் மீள் பரிசீலனை செய்யப்படும்.

ஊழல் ஒழிப்பு செயலகத்துக்கு கிடைத்துள்ள முக்கிய முதல் முறைப்பாடுகளில் ஒன்று ஜே.வி.பியிடமிருந்து வந்துள்ளது. 2007 ஆம் ஆண்டு உக்ரேனிலிருந்து மிக் 27 ரக போர்விமானங்கள் கொள்முதல் செய்யப்பட்டமை தொடர்பாகப் புலனாய்வு செய்யும்படி அவர்கள் கேட்டுள்ளார்கள். கொள்முதல் செய்ததில் முறைகேடுகள் ஏதும் இடம்பெற்றுள்ளனவா? இதில் எவராவது பெரும் தொகைப் பணத்தை தரகுப் பணமாகப் பெற்றுள்ளனரா? என்பதை ஜே.வி.பி.ஆராயும்படி கோரியுள்ளது. இதே புகாரை ஜாதிக ஹெலஉறுமயவும் தாக்கல் செய்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணியாளர்களின் பிரதம அதிகாரி காமினி செனரத் இவ்வாறு பெரும் சொத்துக்களை சேர்த்துள்ளாரா என்பதை ஆராயும்படி அவர்கள் கோரியுள்ளனர். முன்னாள் பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷ திவிநெகும நிதியைப் பங்கீடு செய்தமை தொடர்பாக புலனாய்வு செய்யும்படி ஐக்கிய தேசியக் கட்சி முறைப்பாடு செய்யவிருக்கின்றது.


> எதுவானாலும் இந்த இரு கட்சிகளின் மீதான மக்களின் நன் மதிப்பு தேய்ந்துவரும் நிலையில் கசப்பான அனுபவங்களை இருதரப்பினரும் எதிர் நோக்க நேர்ந்தாலும் ஆச்சரியமில்லை.

ஜனவரி எட்டாம் திகதி கடந்த ஜனாதிபதித் தேர்தலையடுத்து பஸில் ராஜபக்ஷ லொஞ் ஏஞ்சல்ஸில் உள்ள அவரது வீட்டுக்கு நழுவிச் சென்றுவிட்டார்.

கடந்த சனிக்கிழமையன்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கருத்தரங்கொன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆரம்பித்து வைத்தார். தினேஷ்குணவர்தன, விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார மற்றும் உதயகம்மன்பில ஆகியவர்கள் பிரமாண்டமானதொரு கூட்டத்தை நடத்தி தங்கள் பலத்தைக் காட்சிப்படுத்தியிருந்த சந்தர்ப்பத்தில்தான், ஜனாதிபதி சிறிசேனவின் நிகழ்வும் இடம்பெற்றிருந்தது. அவர்களின் கூட்டம் நுகேகொடையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. பொலிஸ் கணிப்பின்படி அக்கூட்டத்துக்கு 14 ஆயிரம் பேருக்கு மேல் வந்திருந்தார்கள். அரசுக்கு கிடைத்துள்ள தகவலின்படி 212 பஸ்களில் கூட்டத்துக்கான சனங்கள் மாத்தறை, காலி, அம்பாந்தோட்டை, தங்காலை, மொனராகல, கம்பஹா, இரத்தினபுரி மற்றும் களுத்துறை போன்ற நாட்டின் பல இடங்களிலிருந்தும் கொண்டு வந்து சேர்க்கப்பட்டனர். இக்கூட்டத்தின் நோக்கம் வரும் பொதுத்தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமர் பதவிக்கானவேட்பாளராக நிறுத்தும்படிஜனாதிபதி சிறிசேனவை வற்புறுத்துவதாகும். இதேமாதிரியான ஒரு மாபெரும் கூட்டத்தைக் கண்டியில் நடத்தவும் முயற்சிகள் நடப்பதாக அறிய வந்துள்ளது. ராஜபக்ஷவை பிரதமர் பதவிக்கு போட்டியிட நிறுத்தும்படி ஜனாதிபதியை நெருக்குவதே இதன்நோக்கம். ஆனால் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலரும் இதனை எதிர்க்கிறார்கள். இருந்தும் கட்சியின் தலைமைத்துவத்தின் நிலைப்பாட்டை மீறி மேல் மாகாணசபை முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, சாலிந்த திஸாநாயக்க, ரி.பி. ஏக்கநாயக்க, குமார் வெல்கம மற்றும் மனுஷா நாணயக்கார ஆகியவர்கள் அக் கூட்டத்தில் கலந்து கொண்டமை கட்சியில் பிளவு ஏற்பட்டிருப்பதைக் காட்டுவதாக இருந்தது.

நீர்கொழும்பு ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சியினருக்கான கருத்தரங்கும் கடந்த சில நாள்களாக மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உயர்மட்டத்தலைவர்களுடன் நடத்தி வரும் கலந்துரையாடல்களும் அவருக்குக் கட்சியிலுள்ள தலைமைத்துவ நிலைப்பாட்டினை மேலும் உறுதி செய்து கொள்ளும் முயற்சியாகக் கருதப்படுகின்றது. இம்மாதிரியான நிலைமை வரும் தேர்தலின்போது தங்களுக்கு சாதகமாக இருக்கமுடியும் என்று ஐ.தே.வினர் சிலர் கருதுகிறார்கள். அக்கட்சியில் பிளவு ஏற்படின் தேர்தலில் எங்களை முன்னிலைக்குத் தள்ளக்கூடியதாய் இருக்கும் என்று ஐ.தே.க. சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் கூறினார். எதுவானாலும் இந்த இரு கட்சிகளின் மீதான மக்களின் நன்மதிப்பு தேய்ந்துவரும் நிலையில் கசப்பான அனுபவங்களை இருதரப்பினரும் எதிர்நோக்க நேர்ந்தாலும் ஆச்சரியமில்லை. இதைத்தான் நுகேகொடையில் கூட்டம் நடத்தியவர்கள் பயன்படுத்திக்கொள்ளப் பார்க்கிறார்கள். கண்டியிலும் அதையே செய்வார்கள். நுகேகொட கூட்டத்துக்குப் பணம் செலவிட்ட பெரும் வர்த்தகர்களில் இருவர் பற்றிய தகவல் அரசுக்குக் கிடைத்துள்ளது. பஸ்களுக்கு அத்துருகிரியவிலுள்ள அச்சகம் ஒன்றில் சுவரொட்டி விளம்பரங்கள் தயாரிப்பதற்கு மற்றும் செலவுகளுக்கு இவர்களே பணம் கொடுத்துள்ளார்கள்.

ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் ஆறுவாரங்களே பதிவியிலிருந்துள்ள அரசு பல்வேறு முனைகளில் இப்போது சவால்களை எதிர் நோக்கியிருக்கிறது. இவைகளை அது எவ்வாறு சமாளித்துக் குறைந்து வரும் மதிப்பினை தக்கவைத்துக் கொள்ளும் என்பது இனி அவர்கள் செயல்படுவதைப் பொறுத்தே அமையும்.



இலங்கை பொருத்தமான விசாரணையை மேற்கொள்வதற்கு அனுமதிக்காததால் அடுத்த மாதம் வெளியிடப்பட வேண்டிய ஐ.நா விசாரணையின் பெறுபேறு செப்ரெம்பர் வரை தாமதப்படுத்தப்பட்டுள்ளது.

# மோடியின் இலங்கை வருகையால் சீனாவின் செல்வாக்கு தளர்ந்து விடுமா?

## என்ன செய்யப் போகிறார் மைத்திரி?

இலங்கை அதிபர் மைத்திரிபால சிறிசேன கடந்த வாரம் இந்தியாவுக்கு நான்கு நாள் பயணத்தை மேற்கொண்ட நிலையில், அவர் தனது முதலாவது அதிகாரபூர்வ வெளிநாட்டுப் பயணத்தை பயணிகள்விமானம் ஒன்றில்மேற்கொண்டதானது இலங்கையர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

இவருக்கு முன்னர் இலங்கையில் நீண்ட காலமாக எதேச்சாதிகார ஆட்சியைத் தனது குடும்பத்தாருடன் இணைந்து நடத்திய மஹிந்த ராஜபக்ஷ வெளிநாடுகளுக்கான தனது சுற்றுப்பயணத்தை விமானப்படைக் குச் சொந்தமான பிரத்தியேக விமானத்திலேயே மேற்கொள் வது வழக்கமாகும்.

இவ்வாறானதொரு நிலையில், தற்போதைய அதிபர் பயணிகள் விமானத்தில் இந்தியாவுக்கான தனது பயணத்தை மேற்கொண்டதானது இலங்கையர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

இலங்கை அதிபரின் இந்தியாவுக்கான பயணமானது பிறிதொரு வகையிலும் நோக்கப்படுகிறது.

அதாவது இலங்கைக்கு அதிக கடனை வழங்கியுள்ளதும் ராஜபக்ஷாக்களின் ஆட்சிக்காலத்தில் மிக முக்கிய நட்பு நாடாகவும் விளங்கிய சீனாவைக் குழப்பத்திற்கு உள்ளாக்காது உடைந்து போயிருந்த நட்புறவை இந்தியாவுடன் மீளவும் கட்டியெழுப்புவதே இப் பயணத்தின் மிக முக்கிய நோக்காகும்.

வடக்கில் வாழும் தமிழ் மக்களை இலங்கை அரசு நடத்திய விதமானது பெரும்பாலான இந்தியர்களைக் குறிப்பாக இந்தியத் தமிழர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியது.

கொடிய போர் முடிவடைந்ததன் பின்னர், வடக்குக்கு அதிக அதிகாரத்தை வழங்கி அதிகாரப் பரவலாக்கலை மேற்கொள்வதாக வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எதனையும் மஹிந்த ராஜபக்ஷ தனது ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றாது நிலைமையை மேலும் மோசமடையச் செய்தார்.

கடந்த ஆண்டு இலங்கைத் தலைநகர் கொழும்பில் சீன நீர்மூழ்கிக் கப்பல் இரண்டு தடவைகள் தங்குவதற்கு அனுமதியை வழங்கியதன் மூலம் ராஜபக்ஷ இந்தியாவை எரிச்சலுக்கு உள்ளாக்கினார்.

அதிபர் சிறிசேன இந்தியாவுக்கான தனது பயணத்தை முடித்த பின்னர், தற்போது இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான உறவு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் பயணத்தின் போது, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே முதலாவது சிவில் அணுசக்தி ஒத்துழைப்பு உட்பட சில உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

அதிக உடன்பாடுகள் எட்டப்படாத போதிலும், இலங்கையுடனான புதிய உடன்படிக்கைகள் சீனாவின் இலக்குகளை முறியடிப்பதற்கான இந்தியாவின் முயற்சிகளாகும் என இந்திய ஊடகம் ஒன்று விவரித்துள்ளது.

இதன் அடுத்த கட்டமாக, கடந்த 28 ஆண்டுகளின் பின்னர் முதன்முதலாக இந்தியப் பிரதமர் ஒருவர் இலங்கைக்கான தனது அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

அதாவது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மார்ச் மாதத்தில் இப் பயணத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

ராஜபக்ஷக்களால் அனுமதிக்கப்பட்ட சீனாவை இலங்கை அரசு நாட்டிலிருந்து வெளியேற்றினால் இந்தியா மகிழ்ச்சியடைந்திருக்கும். ஆனால் இந்தியாவைப் பொறுத்தளவில் இந்த விடயத்தில் இலங்கையிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கப்பெறவில்லை.

சிறிசேனவைப் பொறுத்தளவில் முதலீடு என்பது தேவைப்பாடான விடயமாகும்.

கொழும்புத் துறைமுகத்தில் சீனாவால் 1.4 பில்லியன் டொலர் பெறுமதியில் மேற்கொள்ளப்படும் திட்டத்தை சிறிசேன நிறுத்தமாட்டார்.

ஆனால் அது தொடர்பாகவும் சீனாவின் பிற திட்டங்கள் தொடர்பாகவும் மீளவும் ஆராயப்படும்.

மூலோபாய ஒத்துழைப்பைப் பலப்படுத்துவது தொடர்பான தனது திட்டத்தை முன்னுரிமைப்படுத்துவதற்காக சீனா தனது அதிகாரிகளை இலங்கைக்கு அனுப்பியதன் மூலம் இலங்கை தற்போது இந்தியாவுடன் கொண்டுள்ள நல்லுறவு தொடர்பான தனது பதிலை சீனா வழங்கியுள்ளது.

மார்ச் மாதத்தில் சிறிசேன சீனாவுக்கான தனது பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.




இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறிப்பாக வடக்கிலுள்ள தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மீறல்கள் தொடர்பாக அதிகம் கவலை கொள்ளும் மேற்குலக நாடுகளைச் சமாதானப்படுத்தவும் சிறிசேன விரும்புகிறார்.

இவருக்கு முன்னர் நாட்டை ஆட்சி செய்த மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறான மீறல்களை விசாரணை செய்வதற்கான நம்பகமான விசாரணையை முன்னெடுப்பதற்கு மறுத்துவிட்டார்.

இலங்கை பொருத்தமான-விசாரணையை மேற்கொள்வதற்கு அனுமதிக்காததால் அடுத்தமாதம் வெளியிடப்பட வேண்டிய ஐ.நா விசாரணையின் பெறுபேறு செப்ரெம்பர் வரை தாமதப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் ஜுன் மாதத்தில் இடம்பெறும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ள இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் மைத்திரிபால சிறிசேன உள்நாட்டு விவகாரங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.



அரசமைப்பு சீர்திருத்தம், சுதந்திரமாகத் தகவல்களை வெளியிடுதல் தொடர்பான சட்டம், உணவு விலைகளைக் குறைத்தல், உட்பட பல்வேறு சீர்திருத்தங்களைத் தனது முதல் 100 நாள் ஆட்சியில் மேற்கொள்வேன் என அவர் தமது தேர்தல் வாக்குறுதியில் உறுதிப்படுத்தியிருந்தார்.

ஆனால் இது தொடர்பான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படவில்லை. புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கூட்டணி அரசு பல்வேறு கட்சிகளைக் கொண்டது. இது ஒரு அச்சாறு என உள்நாட்டு மக்கள் கருதுகின்றனர்.

இதேவேளை, மைத்திரிபால சிறிசேன நிறைவேற்று அதிபர் முறைமையை ஒழிப்பதாகவும் வாக்குறுதி வழங்கியிருந்தார்.

தகவல் சுதந்திரம் தொடர்பான சட்டத்தை நடைமுறைப்படுத்துவதால் வாக்குறுதி வழங்கிய போதிலும் அது தொடர்பான எவ்வித முன்னேற்றமும் இடம்பெறவில்லை.

தமிழர் ஒருவர் பிரதம நீதியரசராகப் புதிதாக நியமிக்கப்பட்டதானது நம்பிக்கை ஒளியை ஏற்படுத்தியுள்ளது.

இதேபோன்று வடக்கு மாகாணத்திற்கென நியமிக்கப்பட்ட இராணுவ ஆளுநர் நீக்கப்பட்டு சிவில் ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டமையும் சிறிசேனவின் ஆட்சியில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

வடக்கில் இராணுவப் பிரசன்னம் காணப்படுகின்ற போதிலும், இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களின் ஒரு பகுதி மக்களிடம் விரைவில் கையளிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இருப்பினும், தேர்தல் தொடர்பாக அரசியல்வாதிகள் தடுமாற்றத்திற்கு உள்ளாக்கப்படுவர். பெப்ரவரி 18 அன்று மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்களால் மேற்கொள்ளப்பட்ட பேரணியின் போது ராஜபக்ஷ பிரதமராக வேண்டும் எனக் கோரப்பட்டது.

ஆனால் இது சாத்தியமில்லை என்பதை நடந்து முடிந்த அதிபர் தேர்தலின் பெறுபேறுகள் காண்பிக்கின்றன.

**எக்கனோமிஸ்ற் பத்திரிகையிலிருந்து**
**தமிழாக்கம் – புதினப்பலகை**

# தவக்காலச் சிந்தனை



## நமது வாழ்வைச் சீர்படுத்தும் காலம்

தவக்காலம் ஒரு தனிக்காலம், இறைவன் எமது அருகில் உள்ள காலம்; இறைவனிடம் நாம் திரும்பி வருவதற்கு ஏற்ற காலம், மன மாற்றத்தின் காலம், மறுவாழ்வை மனத்துக்குக் கொணரவேண்டிய காலம். கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவருக்கும் தவக்காலம் மிகவும் முக்கியமான ஒரு காலம். கிறிஸ்தவர்கள் தாங்கள் வாழும் வாழ்க்கையை அலசி ஆராய்ந்து பார்த்து, அந்தவாழ்வில் உள்ள குறைகளை, தீமைகளை, பாவங்களை எல்லாம் எண்ணி, மனம் வருந்தி இறைவனிடம் மன்னிப்பு வேண்டும் ஒரு புனிதமான காலம். இவ்வாறாக வாழ்வை அலசி ஆராய்ந்து பார்க்க செபமும் தவமும் உதவி புரிகின்றன.

உடலை வருத்தி உணவு உறக்கம் துறந்து, தவம் செய்வதும், மனதை ஒரு நிலைப்படுத்தி, இறைவனைத் தியானித்து தன் வாழ்க்கையைத் திருத்தி அமைத்துக் கொள்வதும், அனைத்து சமயங்களினதும் போதனையாகும். இயேசு பாலை நிலத்துக்குச் சென்று செபம், தவம் செய்ததை நாம் கண்டு உணர்ந்து கடைப்பிடிக்கவும் நாம் செய்த பாவங்களுக்கு மன்னிப்புப் பெற்று பாஸ்காத் திருவிழாவைக் கொண்டாட எம்மைத் தயாராக்கிக் கொள்ளவும் திருச்சபையால் ஏற்படுத்தப்பட்ட காலம் இதுவாகும்.

தவக்காலத்தில் 40 நாள்களில் எமது வாழ்வைச் சீர்படுத்திக் கொள்ள திருச்சபை எம்மை அழைக்கிறது. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு காலமுண்டென்பது சபை உரையாளரின் போதனை (3:1) "மனம்மாற இதுவே ஏற்புடைய காலம்" என்பது திருச்சபையின் போதனை. தவக்காலத்தில் 40 நாள்களை அனுசரிப்பதற்கான வரலாற்றுப் பின்னணிகள் உள்ளன. அவை வருமாறு:

- ✦நோவா காலத்துப் பெரு வெள்ளம் 40 நாள்கள்
- ✦இஸ்ராயேல் மக்களின் பாலைநிலப் பயணம் 40ஆண்டுகள்
- ✦ எலியா இறைவாக்கினரின் உண்ணா நோன்பு 40 பகலும் 40 இரவும்
- ✦மோசே சீனாய் மலையில் உண்ணா நோன்பு 40 நாள்கள்
- ✦ நினிவே மக்களின் தவம் 40 நாள்கள்
- ✦ இயேசுவின் பாலைநில அனுபவம் 40நாள்கள்

அருட்பணி பாலேந்திரன்,
செபமாலைதாசர் சபை, யாழ்ப்பாணம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | | | | | 3 | 7 |
| | 7 | | 6 | | | 1 | 2 | 8 |
| 5 | 8 | | | | 3 | 4 | | |
| | 3 | | 5 | | 8 | | 6 | |
| 8 | | | | 6 | | | | 5 |
| | 1 | | 3 | | 2 | | 8 | |
| | | 8 | 4 | | | | 5 | 2 |
| 3 | 4 | 2 | | | 5 | | 7 | |
| 9 | 5 | | | | | | 4 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 2 | 6 | 5 | 7 | 8 | 9 | 4 |
| 8 | 4 | 7 | 2 | 3 | 9 | 5 | 6 | 1 |
| 6 | 5 | 9 | 8 | 1 | 4 | 3 | 2 | 7 |
| 5 | 7 | 6 | 1 | 4 | 8 | 2 | 3 | 9 |
| 9 | 1 | 3 | 5 | 7 | 2 | 6 | 4 | 8 |
| 2 | 8 | 4 | 9 | 6 | 3 | 7 | 1 | 5 |
| 3 | 6 | 1 | 7 | 9 | 5 | 4 | 8 | 2 |
| 7 | 9 | 8 | 4 | 2 | 6 | 1 | 5 | 3 |
| 4 | 2 | 5 | 3 | 8 | 1 | 9 | 7 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்த்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப் பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரக்கறிகளின் நேற்றைய நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 50 | 30 | 60 | 30 | 40 | 40 | 20 |
| கத்தரி | 120 | 80 | 140 | 120 | 100 | 120 | 140 | 60 |
| கரட் | 140 | 200 | 160 | 200 | 140 | 200 | 150 | 120 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 60 | 40 | 60 | 50 | 35 |
| பயிற்றை | 120 | 120 | 110 | 120 | 140 | 160 | 150 | 140 |
| பாகல் | 100 | 100 | 110 | 200 | 120 | 180 | 170 | 160 |
| கருணைக்கிழங்கு | 50 | 60 | 50 | 80 | 50 | 80 | 70 | 40 |
| பெ.வெங்காயம் | 100 | 80 | 80 | 90 | 80 | 100 | 90 | 70 |
| சி.வெங்காயம் | 40 | 100 | 80 | 100 | 65 | 120 | 70 | 50 |
| பூசணி | 80 | 80 | 120 | 120 | 100 | 140 | 110 | 100 |
| தக்காளி | 130 | 110 | 130 | 120 | 140 | 200 | 220 | 125 |
| வாழைக்காய் | 80 | 70 | 80 | 100 | 60 | 80 | 90 | 70 |
| கீரை | 15 | 30 | 30 | 10 | 20 | 20 | 30 | 10 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 30 | 20 | 30 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 110 | 120 | 120 | 120 | 200 | 220 | 120 |
| புடோல் | 80 | 60 | 80 | 80 | 70 | 80 | 120 | 80 |
| கோவா | 80 | 90 | 80 | 100 | 80 | 120 | 130 | 70 |
| வெண்டி | 80 | 80 | 60 | 100 | 80 | 80 | 90 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 200 | 170 | 160 | 220 | 120 |
| லீக்ஸ் | 180 | 150 | 160 | 140 | 160 | 280 | 180 | 120 |
| தேங்காய் | 55 | 45 | 60 | 40 | 45 | 60 | 50 | 45 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 80 | 80 | 90 | 70 |
| தேசிக்காய் | 40 | 50 | 40 | 40 | 40 | 20 | 60 | 25 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 10 | 20 | 10 |
| கறிமிளகாய் | 200 | 130 | 200 | 200 | 170 | 100 | 180 | 200 |
| இராசவள்ளி | 100 | 90 | 100 | 120 | 100 | 120 | 180 | 80 |
| பனங்கிழங்கு | 04 | 02 | 05 | 04 | 05 | 05 | 05 | 03 |

# கடலுணவுகளின் நேற்றைய நிலவரம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 550 | 650 | 700 | 600 | 500 |
| நண்டு | 200 | 300 | 350 | 300 | 200 | 220 |
| கணவாய் | 500 | 500 | 600 | 500 | 600 | – |
| பாரை | 450 | 450 | 500 | 500 | 400 | 370 |
| சுறா | 500 | 500 | 650 | 600 | 1000 | 450 |
| சீலா | 250 | 400 | 450 | 450 | 400 | 300 |
| விளை | 550 | 400 | 500 | 450 | 400 | 300 |
| முரல் | 250 | 300 | 350 | 300 | 200 | – |
| கும்பிளா | 350 | 250 | 380 | 400 | 300 | 270 |
| கிழாக்கன் | 300 | 500 | 400 | 350 | – | – |
| ஒரா | 300 | 300 | 380 | 300 | – | – |
| திரளி | 150 | 250 | 300 | 200 | 200 | – |
| நகரை | 150 | 200 | 300 | 300 | – | 250 |
| சூடை | 100 | 150 | 150 | 100 | 150 | 60 |
| ஒட்டி | 250 | 100 | 150 | 200 | 200 | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 300 | 250 | 230 |
| பாலை | 400 | 250 | 300 | 400 | – | – |
| வாளை | 100 | 100 | 250 | 300 | – | 200 |
| கொய் | 80 | 150 | 200 | 80 | 150 | – |
| மதனம் | 150 | 200 | 300 | 250 | 250 | 250 |

# நாளை

**மாசி-14**
**வியாழக்கிழமை**
**26.02.2015**

திதி:அட்டமி: பி.ப.04.24 வரை
நட்சத்திரம்: ரோகிணி மு.இ.11.28
சுபநேரம்: 07.59-09.29 வரை
இராகுகாலம்: 01.59-03.29 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## கொள்கைவெறியை தவிருங்கள்

கொள்கைவெறி மட்டும் இல்லாதிருந்தால், உலகம் தற்போது இருப்பதைவிட எவ்வளவோ மேன்மை யுற்றிருக்கும். கொள்கைவெறி மனித இனத்தை முன்னேற்றும் என்று எண்ணுவது தவறு. உண்மையில் இந்தக் கொள்கைவெறி மக்களிடையே வெறுப்பையும் கோபத்தையும் தூண்டி, ஒருவரோடு ஒருவர் சண்டையிடச் செய்து, மனிதர்களை இரக்கமில்லாதவர்களாக மாற்றி, அவர்களை அவர்கள் இருந்த நிலையிலிருந்து தாழ்த்தவே செய்யும். கொள்கைவெறியைத் தவிர்த்தால் மட்டுமே திறமையுடன் செயற்பட முடியும். நல்ல மனமும் அமைதியும் ஆராய்ந்து தெளியும் குணமும், தெளிந்த சிந்தனையும் மிகுந்த கருணையும், அன்பும் உடையவன் தான் உலகுக்கு நன்மை செய்கிறான்.




## கண் பராமரிப்பு..

கண்களின் அழகுக்குக் கீழ்க்கண்ட உணவுகள் முக்கியம். பால், பால் பொருள்கள். கீரை, முட்டை, மஞ்சள் மற்றும் செம்மஞ்சள் நிறப் பழங் கள் மற்றும் காய்கள். போதிய அளவு தண்ணீர் குடிக்க வேண்டியதும் மிக முக்கியம். உட லுக்கு மட்டுமன்றி கண்களுக்குப் பயிற்சி அவசியம். ஏனெனில்கண் தசைகளோடு,மூளையுடன் தொடர்புடைய ஏராளமான நரம்புகள் இணைக்கப்பட்டுள்ளன. அருகில் இருக்கும் பொருளைப் பார்த்துவிட்டு, உடனடியாக தொலைவில் உள்ள ஒரு பொருளையும் பார்க்க வேண்டும்.கட்டை விரலை நடுவில் வைத்துக்கொண்டு, அதை இடவலமாகவும், வல இடமாகவும் நகர்த்தி, தலையைத் திருப்பாமல் வெறும் பார்வையை மட்டும் திருப்பிப் பார்க்க வேண்டும். தினசரி எட்டு மணி நேரத் தூக்கம் மிகவும் அவசியம்.

# கர்ப்பிணிகளுக்கு இளநீர் உடல் நலம் தரும்

கர்ப்ப காலத்தில் இயற்கையான மருத்துவ குணம் நிறைந்த இளநீரைப் பருகுவது தாய்க்கும், கருவில் உள்ள குழந்தைக்கும் ஆரோக்கியமானது என்று சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. கர்ப்பிணிகள் அதிகமாக இளநீர் பருகுவது நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இளநீரில் எல்க்ரோலைட் அதிகமாக உள்ளது. எனவே கர்ப்பமாக இருக்கும் பெண்கள் இளநீர் அருந்துவது மிகவும் அவசியம் என்கின்றனர் மருத்துவர்கள். இது கர்ப்பிணிகளை நாவறட்சியில் இருந்து பாதுகாக்கும். உடம்பில் உப்புத் தன்மை குறைந்தால் இயற்கை முறையில் உடம்பில் உள்ள உப்பின் அளவை சரி செய்யவும் இது உதவுகிறது. கர்ப்ப காலத்தில் சிறுநீர் தொற்று ஏற்படுவது தவிர்க்கப்படும் என்றும் அவர்கள் கூறியுள்ளனர், இளநீரில் மிதமாகவே சர்க்கரை, உப்பு மற்றும் புரதச் சத்து உள்ளது. இளநீர் குடிப்பதால், கர்ப்ப காலத்துக்கே உரித்தான மலச் சிக்கல், வயிறு உப்பிசம், நெஞ்சு எரிச்சல் குறிப்பிட்ட அளவு சரியாக வாய்ப்புள்ளது. எனவே கர்ப்ப காலத்தில் பெண்கள் கடையில் விற்கும் கார்பனேட் அடங்கிய பானங் களையும், தேநீர் போன்றவைகளையும் குடிப்பதைத் தவிர்க்கவும். இளநீர் இயற்கையிலே சுத்திகரிக்கப்பட்டுள்ளதால் தூய்மைக்கேடு மற்றும் நோய் தாக்குதல் பற்றி கவலை படாமல் அருந்தலாம் என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இளநீரில் கொழுப்புச் சத்து, கொலஸ்ட்ரோல் சுத்தமாக இல்லை என்றும், இது உடலின் நல்ல கொலஸ்ட்ரோலை அதிகப் படுத்த உதவுகிறது என்றும் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.



# உங்கள் பெயருக்கு பின்னால் இருக்கும் இரகசியம் தெரியுமா?




**J** என்ற எழுத்து மிகப்பெரிய லட்சியத்தைக் குறிக்கும். உங்களது பெயர் J என்ற எழுத்தில் தொடங்கினால், உங்களுக்குத் தேவையானவற்றை அடையும் வரை எதற்காகவும் விட்டுக் கொடுக்காமல், அதை அடைய முயல்வீர்கள். உங்களுக்கு ஏற்ற வகையிலான அல்லது உங்களை விட வசதி வாய்ப்புக் கூடிய ஒரு வாழ்க்கைத் துணையைத் தான் நீங்கள் தேர்ந்தெடுப்பீர்கள்.

**K** உங்களது பெயர் K என்ற எழுத்தில் தொடங்கினால், ஒளிவு மறைவுடன் வெட்கப்படும் குணத்தைக் கொண்டவராக நீங்கள் திடமானவராக இருந்தாலும், உணர்ச்சிபூர்வமானவராக இருப்பீர்கள். சூழ்நிலைக்குத் தகுந்தவாறு சுய உறுதி கூறும் நபராகவும், பொறுப்பைக் கையில் எடுக்கும் நபராகவும் விளங்குவீர்கள். வாழ்க்கையில் அர்த்தமுள்ளதாக எதையாவது செய்ய வேண்டும் என நினைப்பீர்கள். நீங்கள் விரும்பியவர்களை அன்புடன் பார்த்துக் கொள்வீர்கள்.

**I** உங்களது பெயர் I என்ற எழுத்தில் தொடங்கினால், வாழ்க்கையில் நிலை கொள்ள அதிகமாகத் துடிப்பீர்கள். அடிக்கடி உறவுகளை மாற்றும் நீங்கள் எவருடனும் ஆழமான காதலைக் கொண்டிருக்க மாட்டீர்கள். தொழில் ரீதியாக அதிகமாகச் சம்பாதிக்கும் உங்களுக்கு நல்ல விதமான தொழில்வாய்ப்பு அமையும்.

**M** என்ற எழுத்து தைரியம், அறிவு மற்றும் கடின உழைப்பைக் குறிக்கும். உண்மையான நட்பை உங்களால் கண்டுபிடிக்க முடியாது. m என்ற எழுத்தில் உங்கள் பெயர் தொடங்கினால் நீங்கள் உண்மையுள்ள நண்பனாக இருப்பீர்கள். அறிவுரை வழங்குவதில் வல்லவராக இருக்கும் உங்களுக்கு நம்பத் தகுந்த துணை கிடைக்கும். உறவுமுறையில் ஈடுபடும் போது, தன்னை முழுவதுமாக அதில் அர்ப்பணித்துக் கொள்வார்கள்.

**N** என்ற எழுத்து ஓவியத் திறனைக் குறிக்கும். துடிப்பு மற்றும் முயற்சி வேட்கையுடைய பண்பைக் கொண்டவரான உங்களைப் பிறரிடம் இருந்து விலக்கியே வைக்கும். அனைத்திலும் முழுமையை எதிர்ப்பார்க்கும் நீங்கள், உங்கள் துணையைத் தேர்ந்தெடுப்பதில் மிகவும் அக்கறை கொள்வீர்கள்.

**O** அனைத்தையும் விட அறிவு மற்றும் கல்விக்கே முக்கியத்துவம் அளிப்பீர்கள். உங்கள் பெயர் O என்ற எழுத்தில் தொடங்கினால், நீங்கள் ஆசிரியராகவோ, எழுத்தாளராகவோ வருவீர்கள். ஒழுக்கத்துடன் இருக்கும் நீங்கள் எது நல்லதோ, அதன் பக்கமே நிற்பீர்கள். உங்கள் துணையிடமும் அதே குணங்களைத் தான் எதிர்ப்பார்ப்பீர்கள்.

**P** உங்களது பெயர் P என்ற எழுத்தில் தொடங்கினால், நீங்கள் திறமைசாலியாக, அறிவுக் கூர்மை மிக்கவராக, புதுமை மிக்கவராக இருப்பீர்கள். படபடவென பேசும் உங்களுக்கு எப்படிக் குதூகலமாக இருப்பது என்பது தெரியும். உடற் தோற்றத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் நீங்கள், நல்ல அழகான துணையைத் தான் தேடுவீர்கள்.

**Q** என்ற எழுத்தில் பெயர் தொடங்குபவர்கள் நல்ல எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் இருப்பீர்கள். பலரும் நாடக ஆசிரியர்களாகவும், இசையமைப்பாளராகவும், நடிகர்களாகவும் இருப்பார்கள். அவர்களுக்கு திடமான கருத்துகள் இருக்கும். அவர்களுக்குத் தனித்துவமான (வசீகரத் தன்மை) இருக்கும். எதிலும் பழைய பாணியைப் பின் பற்றாமல் புதிதாக உருவாக்குவார்கள்.

# ஆண்களிடம் பெண்கள் விரும்புவது...

பெண்களது மனதைப் புரிந்து கொள்ள இயலாது. அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை எவராலும் அறிந்து கொள்ள முடியாது. ஆண்களின் எண்ணங்களுக்கு நேர் மாறாகச் சிந்தித்து அவர்களை குழப்பி விடுவது பெண்களின் வாடிக்கை.

பெண்கள் விரும்புவது பாதுகாப்பு உணர்வைத் தான், தந்தை, கணவர், மகன், என எந்த ஆணாக இருந்தாலும் தனக்குப் பாதுகாப்பாக இருக்கவேண்டும் என்று நினைப்பார்கள். அதேபோல தோள் சாயும்போது தோழனாகவும், மடி சாயும்போது தாயுமானவனாகவும் இருக்கும் ஆண்களுக்கு மட்டுமே பெண்களின் மனதில் இடமுண்டு.

பெண்களைச் சந்திக்கும்போது தோற்றத்தில் கவனம்தேவை. முதன் முதலில் உங்களைப் பற்றிய ஓர் எண்ணத்தை உருவாக்குவது அந்தத் தோற்றம்தான். அதற்காக மிகைப்படுத்தப்பட்ட அலங்காரமோ, செயற்பாடுகளோ தேவையில்லை. அத்தகைய ஆண்களைத்தான் பெண்களுக்கு மிகவும் பிடிக்கும். பணமும், விலை உயர்ந்த பரிசுப் பொருள்களும் கொடுத்தால் பெண்களை எளிதில் கவர்ந்து விடலாம் என்று ஆண்கள் தவறாகக் கணக்குப் போடுகின்றனர். நீங்கள் பணத்தினால் பெண்களை கவர முயலும் பட்சத்தில் உங்களைவிட உங்கள் பணத்தின்மீது தான் பெண்களின் கவனம் இருக்கும்.

ஆகவே உண்மையான புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்தி பெண்களின் அபிப்பிராயத்தைப் பெற முயற்சி செய்வதே சிறந்த வழி. எப்பொழுதாவது பேசுவதைவிட அடிக்கடி விசாரியுங்கள். தனிப்பட்ட முறையிலோ, குடும்பரீதியாகவோ பேச்சு இருக்கட்டும். அடிக்கடி அவர்களுக்காக நேரத்தைச் செலவிடுங்கள்.

பெண்களுக்கு உணர்வு ரீதியான செயல்பாடுகள் பிடிக்கும். அதைச் சரியாகப் புரிந்து கொண்டு செயல்படும் ஆண்களுக்கு, பெண்களின் மனதில் எப்போதும் இட முண்டு. எதையும் வெளிப்படையாகப் பேசுங்கள். மனதில் கபடம் இல்லாத பேச்சும், கண்களுக்கு நேராக அதைத் தெரிவிக்கும் ஆண்களைத் தான் பெண்களுக்கு அதிகம் பிடிக்கும்.

எப்பொழுதும் கனவான்தன செயற்பாடுகளுடன் நடந்து கொள்ளும் ஆண்களால் தான் எளிதில் பெண்களது இதயத்தை கவரமுடியும். பெண்களைக் கவருவதற்காக எத்தனையோ ஆண்கள் தங்களின் சுயத்தை இழந்து அநேக வேடங்களை போடுகின்றனர். ஆனால் இந்த நடிப்பை பெண்கள் எளிதில் இனம் கண்டு கொள்வதால் அநேக ஆண்களின் முயற்சி தோல்வியிலேயே முடிகிறது.

உண்மையாக இருந்தால் மட்டுமே, பெண்களை எளிதில் கவரமுடியும். பெண்களைக் கவர வேண்டும் என்பதற்காக எதையும் மிகைப்படுத்திப் பேசாதீர்கள். நிறையப் படித்து விசய ஞானத்தோடு பேசுங்கள். இது போன்ற செயற்பாடுகளால் மட்டுமே பெண்களின் மனதைக் கவர முடியும்.




# பெண் என்ற பாகுபாடு ஏன்?

காலம் காலமாக வெளிப்படுத்தப்பட்டு வரும் 'பெண்' என்பதன் கருத்தியல்கள் உடைத்தெறியப் படல் வேண்டும். நீ அடக்கமானவள், நீ தீர்மானங்களைக் கேட்டுக் கொள்வாய், சுகபோகங்களை அள்ளித் தருபவள், பொத்திப் பொத்திப் பாதுகாக்கப்பட வேண்டியவள், கற்புடையவள், மென்மையானவள், பூப்போன்றவள் என்பனவெல்லாம் முற்றாக மாற்றியமைக்கப்படல் வேண்டும். அவள் சார்ந்த செயற்பாடுகளின் மென்மையும், பயமும், அச்சமும், அதைரியமும், பொறுமை, தாங்கும் சக்தி என்பனவும் மாற்றியமைக்கப்படல் வேண்டும். சமூகத்தில் நிலவும் பெண்ணின் உயிரியல் வகிபாகம் எது என்பதனை அவள் தீர்மானிக்க வேண்டும். இன்னுமின்னும் அவள்மீது பூசப்பட்டு அப்பி வைக்கப்பட்டிருக்கும், கலாசாரம் பண்பாடு சார்ந்த கருத்தியல்களை உடைத்தெறிவது முதன்மையானதாகும்.

அவள் மீது கட்டவிழ்ந்து விடப்பட்டிருக்கும் சுரண்டல்கள், அடக்குமுறைகள் என்பவற்றுக்கெதிராக அவளாக உணர்ந்து, அவற்றிக்கெதிரான போராடத் துணிவதும் அவசியமாகும்.

மூலை முடுக்கெல்லாம் பெண்கள் மீதான ஒடுக்குமுறைகள் சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு, கலாசார, மத ரீதியான அம்சங்களில் சன்னம் சன்னமாக ஊடு பாய்ந்து ஏகாதிபத்தியங்களின் ஒடுக்குமுறைகள் ஆழப்படுத்தியிருக்கின்றதென்பது கசப்பான உண்மை.



# குழந்தைகள் என்றும் குழந்தைகளே!



**ஒரு** சிறுவன்; ஆசையாக நாய்க்குட்டி ஒன்று வளர்த்தான், ஒரு நாள் திடீரென்று அந்த நாய்க்குட்டி இறந்துவிட்டது. பையன் விடாமல் அழுதுகொண்டே இருந்தான்.வீட்டில் எவ்வளவோ ஆறுதல் சொல்லிப் பார்த்தார்கள். ஒன்றும் நடக்கவில்லை. அழுகையும் நின்றபாடில்லை. பிறகு ஒரு மனோதத்துவ ,வைத்தியரிடம் அழைத்துப் போய் ஆலோசனை செய்யச் சொன்னார்கள். அவரும் பல ஆறுதல் வார்த்தைகளை சொல்லிவிட்டு கடைசியில் அவனிடம்,'இதோ பார் இந்த சின்ன விடயத்திற்காக ஏன் இப்படி அழுகிறாய்? எங்கள் தாத்தா கூட போன வாரம் செத்துப் போனார். நான் என்ன அழுகிறேனா பார்' என்றார். உடனே அந்தப் பையன் 'நீங்க என்ன, என்னை மாதிரி குட்டியில இருந்தா உங்க தாத்தாவை வளர்த்தீங்க?' என்றான் கோபத்தோடு. டாக்டர் வாயே பேசவில்லை. குழந்தைகள் என்றும் குழந்தைகளே!

## சூரியன்



சூரியன் மஞ்சள் நிற சிறு நட்சத்திர வகையைச் சேர்ந்தது.
சூரியன் விநாடிக்கு 220 கிலோ மீற்றர் வேகத்தில் நகர்கிறது.
பூரண சூரிய கிரகணம் ஏழரை நிமிடங்கள் மட்டுமே நீடிக்கும்.
ஒவ்வொரு ஆண்டிலும் ஐந்து முதல் ஏழு சூரிய கிரகணங்கள் நிகழும்.
சூரியனின் வயது 460 கோடி ஆண்டுகள்.
சூரியனின் ஈர்ப்பு சக்தி புவியின் ஈர்ப்பு சக்தியைவிட 28 மடங்கு அதிகம்.
ஒரு வேளை சூரியனே இல்லாமல் போய்விட்டால், அதை நாம் உணர எட்டு நிமிடங்களுக்கு மேல் ஆகும்.
சூரிய கிரகணத்தை விண்வெளியிலிருந்து முழுமையாகப் பார்க்க முடியும். ஏனெனில், பூமியின் வாயுமண்டலத்தால் அதை மறைக்க முடியாது.
சூரியனுக்குள் பத்து லட்சம் பூமிகளை அடைத்துவிட முடியும்.
சூரியனை 475 நானோமீற்றர் அலைநீளத்தில் பார்த்தால், அது நீல நிறத்திலேயே தென்படுமாம்.

## முயல்

பாலூட்டி இனத்தைச் சேர்ந்த முயல், ஒரு தாவர உண்ணி. உலகில் உள்ள முயல்களில் பாதி அளவு வட அமெரிக்கக் கண்டத்தில் உள்ளன. ஐரோப்பா, ஆபிரிக்கா, தென் அமெரிக்கா, ஆசியா ஆகிய கண்டங்களில் முயல்கள் காணப்படுகின்றன. சமவெளிப் பகுதிகள், காடுகள், சதுப்பு நிலங்கள், புல்வெளிகளில் முயல்கள் வாழும். முயல்கள் கூட்டமாக வாழ்பவை. முயல்கள் நிலத்தில் குழி தோண்டி வளைகளில் மறைந்து வாழும். முயல் குட்டிகள் பிறக்கும் போது கண்களை மூடியபடி, ரோமம் இல்லாமலேயே பிறக்கும்.

முயல்களுக்கு மோப்ப சக்தி அதிகம். செவித் திறனும் பார்வைத் திறனும் கூர்மையானது. குதிரையைப் போல எல்லாக் கோணங்களிலும் அதன் கண்ணால் பார்க்க முடியும்.


முயல்களின் கால்கள் பலமானவை. இவற்றால் மின்னல் வேகத்தில் ஓட முடியும். ஒரே குதியில் ஒரு மீற்றர் உயரத்துக்கும் மூன்று மீற்றர் நீளத்துக்கும் தாவிவிடும். ஒரு மணிநேரத்தில் 48 கிலோமீற்றர் தூரம் வரை ஓடும்.

முயல்களின் ஆயுள்காலம் சராசரியாக 8 முதல் 10 ஆண்டுகள்வரை.



## வர்ணம் தீட்டலாம் வாங்க...





## த்த முடியாத ஒட்டகச்சிவிங்கி



உலகின் உயரமான பாலூட்டி விலங்கு ஒட்டகச்சிவிங்கி.
ஆபிரிக்கப் புல்வெளிகள், காடுகளில் அதிகம் காணப்படுகின்றன.
ஆண் ஒட்டகச் சிவிங்கியின் எடை சராசரியாக 1,400 கிலோ வரை இருக்கும்.

ஒட்டகச் சிவிங்கியின் சிறப்பம்சமே அதன் கழுத்துதான். இது ஒன்றரை மீற்றர் முதல் 1.8 மீற்றர் வரை நீண்டு இருக்கும்.
ஒட்டகச்சிவிங்கியின் வாலில் உள்ள ரோமம் மனிதர்களின் தலை முடியைவிட 10 மடங்கு அடர்த்தியானது.
ஒட்டகச் சிவிங்கிக்கு அதிக தண்ணீர் தேவையில்லை. ஒரு சில நாள்களுக்கு ஒருமுறைதான் தண்ணீர் குடிக்கும். அதற்குத் தேவையான நீர்ச்சத்தைத் தாவரங்கள் மூலமே பெற்றுக்கொள்கிறது.
ஒட்டகச் சிவிங்குக்கு குரல் நாண் இருந்தாலும் அதனால் சத்தம் போட்டு கத்த முடியாது.

### பின்னடைவுகளைத் தவிர்த்து

# வெற்றி காணுவோம்

வாழ்வில் சில சம்பவங்கள் நமக்கு சவால்விடும் விதமாய் அமையும். அத்தகைய சவால்கள் வரும்போதெல்லாம் தொடை தட்டி எழுபவர்கள் சோதனைகளைக் கடந்து சாதிக்கிறார்கள். தொடை நடுங்கி நிற்பவர்கள் தோற்கிறார்கள். இது ஒற்றை வரி உபதேசமல்ல, உண்மையின் சாரம். நிகரற்ற சாதனையாளர்கள் வாழ்வில் நிரூபிக்கப்பட்ட சத்தியம்.

காலம் வீசுகிற பந்தைக் கையில் பிடிக்கும் லாவகமே, எறியப்பட்டது பூப்பந்தா அணுகுண்டா என்பதைத் தீர்மானிக்கிறது. எதிர்வரும் சவால்கள் ஒவ்வொன்றிலும் சாதனைக்கான சாத்தியக்கூறுகள் ஒளிந்திருப்பதை உணர்ந்தவர்கள் உயர்கிறார்கள்.

சில நடைமுறை உதாரணங்களை நினைத்துப் பார்த்தால் நம் வாழ்விலும் சோதனைகள் வருவது நாம் சாதிப்பதற்காகவே என்கிற உண்மை புலப்படும்.

'வாழ்க்கை, கசப்பான சம்பவங்களால் ஆங்காங்கே புள்ளிகளை வைத்து விட்டுப் போகிறது. அவற்றை கரும்புள்ளிகள் என்று நினைத்துக் கவலைப்படுகிறோம். ஆனால் அந்தப் புள்ளிகளை இணைக்கிற புத்திசாலித்தனம் இருந்தால், அந்தக் கசப்பான சம்பவங்களே கம்பீரமான வெற்றிக்குக் காரணிகள் ஆகின்றன' என்றார் ஸ்டீவ் ஜாப்ஸ். இதனை உணர்த்தும் விதமாய் உதாரணங்களைத் தன்னுடைய வாழ்விலிருந்தே தந்தார் அவர்.

தான் தொடங்கிய அப்பிள் நிறுவனத்திலிருந்தே வெளியேற்றப்பட்டார் ஸ்டீவ் ஜாப்ஸ். கசப்பான அந்தக் கரும்புள்ளி வைக்கப்பட்ட விநாடியே அடுத்த வெற்றியின் புள்ளியைத் தொட, புயல்போல் இயங்கினார் அவர். பிக்ஸல் அனிமேஷன் ஸ்ரூடியோஸ் என்கிற புத்தம் புதிய நிறுவனத்தைத் தொடங்கி அனிமேஷன் உலகில் அசகாய சூரராய் மிக விரைவில் வளர்ந்தார். இந்த மகத்தான வெற்றி, தான் உருவாக்கிய அப்பிள் நிறுவனத்தை மீண்டும் அவருடைய ஆளுகைக்குள் கொண்டு வந்தது. தன் மறு வருகையை ஒரு சாதனையின் மூலம் கொண் டாடத் தீர்மானித்தார் ஸ்டீவ் ஜாப்ஸ். இருபத்தோராம் நூற்றாண்டை உலுக்கும் விதமாய் ஒரு கண்டுபிடிப்பைக் கொடுத்தார். அதுதான் உலகெங்கும் உள்ளவர்களின் கண்களுக்கும் காதுகளுக்கும் விருந்தாகிக் கொண்டிருக்கும் ஐ-பாட். பின்னடைவுகள், சவால்விடும் தருணங்கள், சோதனைகள் இல்லாமல் இந்தச் சாதனைகள் சாத்தியமே இல்லை என்று அடித்துச் சொல்லும் ஸ்டீவ் ஜாப்ஸ், கரும் புள்ளிகளை இணைக்கும் வெற்றிக்கோலம் வரைவதற்கான உத்திகளையும் உணர்த்தினார்.




(தொடரும்)

# விருப்பு வாக்கு முறையே ஊழலுக்கு மூல காரணம்

## திப்பிட் வாவே ஸ்ரீசுமங்கள தேரர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.25
சட்டத்துக்கு முரணான விதத்தில் – முறையற்ற விதத்தில் பணத்தைச் சம்பாதித்துக்கொண்டுள்ளவர்களையே இன்று அரசியலில் காணமுடிகின்றது. அவர்கள் நாட்டுக்காக சேவையாற்றுவதில்லை. தொடர்ந்தும் முறையற்ற விதங்களில் பணத்தைச் சம்பாதித்துக் கொள்வது மாத்திரமே அவர்களது குறியாக உள்ளது. இன்றைய விருப்பு வாக்கு முறைமையே அதற்கு மூலகாரணமாக இருக்கின்றது – இவ்வாறு மல்வத்தை பீடாதிபதியான மகாநாயக்கர் திப்பிட் வாவே ஸ்ரீசுமங்கள தேரர் தெரிவித்துள்ளார்.
எதிர்காலத்தில் அரசியலில் பிரவேசிக்க விருப்போரை முன்னிட்டு தயாரிக்கப்பட்டுள்ள நல்லொழுக்க ஆசார சீலங்கள் கொண்ட பிரதியொன்றை சமர்ப்பிப்பதற்காக அவரிடம் சென்றிருந்த பவ்ரல் அமைப்பின் நிறை வேற்றுப் பணிப்பாளர் ரோஹண யஹட்டியாராய்ச்சிக்கே மஹாநாயக்க தேரர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.
"கடந்த காலத்தில் இந்த நாட்டின் அரசியலில் கற்றறிந்த மக்கள் பணத்தை சூறையாடுவதற்கு எந்தவொரு அவசியமுமற்ற – நேர்மையுடன் நாட்டுக்கும் மக்களுக்கும் சேவையாற்றும் – மக்களை நேசிக்கும் உறுதிமொழிகளை அச்சொட்டாக நிறைவேற்றும் உத்தமர்களையே காணமுடிந்திருந்தது. ஒரு காலகட்டத்தில் இந்த நாட்டை இருதடவைகள் நிர்வகித்திருந்த பிரதமர் இறக்கும் போது அவரது வங்கிக் கணக்கில் நூறு ரூபாய்கள் வரையிலான தொகையொன்றே இருந்ததாக எம்மால் தெரிந்துகொள்ள முடிந்திருந்தது. பணத்தாசை, அதிகாரப்பேராசை கொண்ட அரசியலுக்குச் சற்றும் பொருத்தமில்லாத நபர்கள் அரசியலில் புகுந்து கொண்டதாலேயே இன்று நாட்டுக்கு இந்த அழிவு ஏற்பட்டுள்ளது."– என்று அவர் தெரிவித்துள்ளார்.
"பணத்தைச் செலவழித்து லஞ்சமாக நாட்டுமக்களுக்கு எதையெதையோ கொடுத்து வாக்குகளைப் பெற்றுக் கொள்வதையே நாட்டில் இன்று காணமுடிகின்றது. அந்த நிலைக்கே இன்று நாடு உள்ளாகியிருக்கிறது. நாட்டு மக்களுக்கு அது சம்பந்தமாக அந்தளவுக்கு தெளிவு இல்லை. இந்த நிலைப்பாட்டை ஒழித்து நாட்டுக்கும் மக்களுக்கும் நேர்மையுடன் அன்பு செலுத்தும் கற்றறிந்த உத்தமர்களை உயர் பதவிகளில் அமர்த்துவதற்கு நாட்டு மக்கள் செயற்பட வேண்டியுள்ளது"– என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ–22)

# வீரவன்ஸவின் மனைவி சிறை மருத்துவமனையில்

கொழும்பு, பெப்.25
முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் மனைவி சசி வீரவன்ஸ சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர் மாலம்பே பிரதேசத்தில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே நீதிமன்ற உத்தரவுப்படி சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்த உத்தரவை கொழும்பு பிரதம நீதிவான் கிஹான் பிலபிட்டிய பிறப்பித்துள்ளார்.



சசி வீரவன்ஸவுக்கு மேலதிக சிகிச்சைகள் அளிக்கப்பட வேண்டுமா என்பது குறித்து சிறைச்சாலை பிரதம வைத்திய அதிகாரியின் பரிந்துரைகளை பெற்றுக் கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார்.
போலியான ஆவணங்களை சமர்ப்பித்து கடவுச்சீட்டு பெற்றுக்கொண்டதாக சசி வீரவன்ஸவுக்கு எதிராக கடுவெல நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. சசி வீரவன்ஸ இரண்டு தேசிய அடையாள அட்டைகள் இரண்டு கடவுச்சீட்டுக்களைப் பயன்படுத்தியுள்ளதாகவும் அவற்றில் பிறந்த திகதி மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.


**பெயர் மாற்றம்**

மல்வம் உடுவிலைச் சேர்ந்த **செல்வி கறோலினா விமலநாதன்** ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை **கஜானி விமலநாதன்** என பெயர் மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.
(57269)(10) **செல்வி. கஜானி விமலநாதன்**

**காணி விற்பனைக்கு**

ஆனைக்கோட்டை பொன்னையா ஒழுங்கையில் சுற்றுமதில் கிணற்றுடன் கூடிய காணி மானிப்பாய் வீதியில் இருந்து 200M தூரத்தில் விற்பனைக்கு உண்டு
தொடர்பு:
077 1165345, 021 222 4095



செவி புலன்களில் குறைபாடு உள்ளவர்களுக்கு விஷன் கெயா வழங்கும் விசேட சந்தர்ப்பம்...



**இதன் மூலமாக**

- செவிபுலனுடன் தொடர்புடைய உபகரணங்கள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்ச்சி.
- இலவசமாக ஆரம்ப செவிபுலனுடன் தொடர்புடைய பரிசோதனை வழங்கப்படும்.

**அதற்கு நீங்கள் செய்யவேண்டியதாவது, மார்ச் 01ம் திகதி**

இலக்கம் 108, ப்ரவுன் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் அமைந்துள்ள விஷன் கெயா நிறுவனத்துக்கு வருகை தருவது மாத்திரமே.

அழையுங்கள் : கோமதி – 076 544 1517
வித்தியா – 077 342 6515

oticon PEOPLE FIRST
VISION CARE OPTICAL SERVICES



# INVITATION

**The Opening Ceremony Of**
**Drinking Water Filtration Plant System**
**Donated To The District General Hospital, Vavuniya**
**By**
**Thiyahie Charitable Trust With the sponsorship of its**

**Founder MR.V.Thiyagendran**

**Date: 25.02.2015**
**Time: 4.00 Pm**

**Chairperson**
**Dr.K Akilendran**
**(Director, District General Hospital, Vavuniya)**

**Chief Guest**
**Hon . Justice C.V Wigneswaran**
**Chief Minister of northern Province**

**Special Guests**
**Hon. Dr. P. Sathiyalingam**
**(Minister of Helth, Northern Province)**

**Mr. R Raveenthiran**
**(Secretary, Ministry of health, Northern Province)**

**Mr.C. Kamalanaathan**
**(Director, Thiyahie Charitable Trust)**

**All Are Cordially Welcome!**

# அழைப்பிதழ்

வவுனியா ஆதார வைத்தியசாலைக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்கும் நிகழ்வு
**Drinking Water Filtration Plant System**
தியாகி அறக்கொடை நிறுவனத்தின் 35 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இன்று (25.02.2015) புதன் கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படுகின்றது.
வடமாகாண சபையின் முதலமைச்சர் கௌரவ **க.வி.விக்னேஸ்வரன்** அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக் கின்றார். அத்துடன் சிறப்பு விருந்தினராக வட மாகாண சபையின் சுகாதார அமைச்சர் கௌரவ வைத்திய கலாநிதி **ப.சத்தியலிங்கம்** அவர்கள் கலந்து சிறப்பிக்கின்றார்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

THIYAHIE CHARITABLE TRUST

## செயற்பாட்டு அரசியலில் விரைவில் இறங்குவோம்

### பொதுபல சேனா கூறுகின்றது

எதிர்வரும் காலங்களில் செயற்பாட்டு அரசியலில் களமிறங்குவது குறித்து கவனம் செலுத்தி வருவதாக பொதுபல சேனா இயக்கம் தெரிவித்துள்ளது.

அரசியலில் களமிறங்குமாறு பல்வேறு சந்தர்ப்பங்களில் பலர் கோரிக்கை விடுத்து வருகின்றனர். அவற்றைக் கருத்திற் கொண்டு இறுதித் தீர்மானம் ஒன்றை எடுக்க உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.(ற)

# அதிபர் சேவை பிரமாணக் குறிப்பு வெளியானது புதிய சுற்றறிக்கை

யாழ்ப்பாணம், பெப். 25

இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைப்படுத்தல் தொடர்பான சுற்றறிக்கை சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 1999 .07.02 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட –

இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக்குறிப்பு – 2014 ஒக்ரோபர் 22 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி மூலம் திருத்தியமைக்கப்பட்டு வெளியிடப்பட்டு இருந்தது எனவும்–

இத் திருத்தியமைக்கப்பட்ட அறிவித்தலுக்கு அமைய இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பு

2008.07.01 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இலங்கை அதிபர் சேவையில் வகுப்பு 3 இலுள்ள சகல அதிபர்களும் 2008. 07.01 இலிருந்து செயற்படும்படியாக அதிபர் வகுப்பு 3 இற்கு உள்வாங்கப்பட்டு அதிபர் சேவை சம்பளத்துக்கு உரித்தாகுவர்.

இதேபோன்ற இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பு II ஆம் தர சகல அதிபர்களும் வகுப்பு 2 இற்கு உள்வாங்கப்படுவர்.

முன்னர் 2 ஆம் வகுப்பு 1 ஆம் தரத்திலுள்ள அதிபர்கள் வகுப்பு 1 இற்கும் உள்வாங்கப்படுவர்.

2008.07.01 ஆம் திகதி தொடக்கம் இதுவரையில் ஓய்வு பெற்ற அதிபர் சேவை உத்தியோகத்தர்களுக்குமான ஓய்வூதியம் இதன்படி திருத்தி அமைக்கப்பட்டு 2011.01.01 ஆம் திகதி தொடக்கம் ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 2008.06.30 அல்லது அத்திகதிக்கு முன் ஓய்வு பெற்ற அதிபர்சேவை உத்தியோகத்தர்களுக்கு இந்தப் பிரமாணக் குறிப்பில் காட்டியுள்ள சரத்துக்கள் ஏற்புடையதாகாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி றெஜினா லில்லிமலர் ஜெயராசா



பிரதான வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றெஜினா லில்லிமலர் ஜெயராசா 23.02.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை பஸ்தியாம்பிள்ளை- திரேசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நீக்கிலஸ்-ரட்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், நீக்கிலஸ் J. ஜெயராசாவின் (Retd.Asst. Director, Srilanka Customs) பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான பக்ஸ் பஸ்தியாம்பிள்ளை (S.V.P), பேரின்பம் பஸ்தியாம்பிள்ளை (B.T), றோஸ்மலர் கனகரத்தினம் (பிறிஜற்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மாகிறெட் பஸ்தியாம்பிள்ளை, அரியமலர் பஸ்தியாம்பிள்ளை, ஜோன் கனகரத்தினம் மற்றும் அரியமலர் அந்தோனிப்பிள்ளை (ஆஸ்திரேலியா) நீக்கிலஸ் ராஜநாயகம் (ஆஸ்திரேலியா), ராசமலர் பேடினன்ட் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் A.F றேமன்ட் மலர்ச்சாலையில் இன்று (25.02.2015) 2.00 pm - 7.00 pm வரையும், நாளை (26.02.2015) 10.00 am-3.00 pm வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதி ஆராதனையின் பின் பொறளை சேமக்காலையில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

N.J. Jeyarajah
35 1/1, Janaki Lane, Colombo-04.
T.P: 0112 586714

தகவல்:
குடும்பத்தினர்.

### கந்தையா அருணகிரிநாதன்



புங்குடுதீவு, 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா அருணகிரிநாதன் 23.02.2015 திங்கட்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்-நாகம்மா தம்பதியரின் மருமகனும், சுந்தராம்பாளின் அன்புக் கணவரும், ரூபகலா (பிரான்ஸ்), சந்திரகாசன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுபாஸ்கரன் (பிரான்ஸ்), கஜனா (சுவிஸ்) ஆகியோரின் மாமனும், நிதிலன், அகிலேஸ், இலக்கியா ஆகியோரின் பேரனும், புஸ்பவதி (பிரான்ஸ்), காலஞ்சென்ற திருலோகநாதன் (ஸ்ரீசக்தி) மற்றும் சறோஜினிதேவி (தேவி), கருணாவதி (கிளி), பவானி (சோதி), சர்வலோகநாதன் (ஜேர்மனி), வைத்தீஸ்வரன் (கனடா) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான கோபாலகிருஸ்ணன், சீவரத்தினம் மற்றும் உலகேஸ்வரி கேதீஸ்வரன் (ஈசன்), சச்சிதானந்தன் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், இராமலிங்கம் மற்றும் புஸ்பராணி ஏரம்பமூர்த்தி மகாதேவன் செல்வகலா யோகராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுபாஸ்கரன் (பிரான்ஸ்)
T.P: 0033651788583
021 222 1175

தகவல்: சகோதரர்கள்
ஏரம்பமூர்த்தி, 412, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம் (மைத்துனர்)

### கணபதிப்பிள்ளை யோகராசா

(பச்சிலைப்பள்ளி - பிரதேசசபை)



பெரியபளையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை யோகராசா 22.02.2015 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் வள்ளிப் பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சத்தியலீலாவின் (பொது முகாமையாளர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் - பளை) அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிவமலர் மற்றும் சந்திரமோகன் (வீதி அபிவிருத்தி அதிகாரசபை - யாழ்ப்பாணம்), கணேசலிங்கம், சற்குணநேசன் (ஜேர்மனி), தங்கமலர் (நோர்வே), காலஞ்சென்ற தங்க ரூபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வரத்தினம், உதயகலா, ஜானகி, இந்திரகாந்தன் (நோர்வே), இந்திரலீலா, ஜவனராணி, கோமளா, மஞ்சுளா, சிவகுமார், சியாமளா, அகிலா, பகிரதன் ஆகியோரின் மைத்துனரும், சின்னத்துரை, காலஞ்சென்ற தெய்வானை ஆகியோரின் மருமகனும், நிரூஷன், விதூஷன், திலக்ஷினி, கிரிதரன், விதுசிகன், ஜனனி, ஆதவன், மயந்தினி, மதுரன், மதுவன், டினுசிகா, தனுசிகா ஆகியோரின் பெரியப்பாவும், சுதர்சினி, சுதர்சன், சுகிர்தன், சுகந்தன், சுஜிதா, சேயோன், செந்தூரன் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.02.2015) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3.00 மணிக்கு தகனக் கிரியைக்காக பூதவுடல் தம்பகாமம் மலையான் காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


பெரியபளை, பளை. (51908)(45.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### நல்லதம்பி கணபதிப்பிள்ளை

மலர்வு: 27.11.1932 உதிர்வு: 22.02.2015



மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நல்லதம்பி கணபதிப்பிள்ளை 22.02. 2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அருமை மகனும், காலஞ்சென்ற சதாசிவம்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மாணிக்கத்தின் பாசமிகு கணவரும், வசந்தகுமாரி, உதயகுமார், சந்திரகுமார், ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கேதீஸ்வரன், கிருஷ்ணகுமாரி, பங்கயற்செல்வி, மங்களேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமனும், காலஞ்சென்ற இராசம்மாவின் அருமைத் தம்பியும், காலஞ்சென்ற இராசையா மற்றும் பொன்னம்மா ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், காலஞ்சென்ற செல்வராசா, செல்வரத்தினம், ரத்தினபூதி, யோகராசா, செல்வராணி, செல்வரேணுகா, நந்தினி, நவமணி, விஷ்வநாதன், காலஞ்சென்ற நடேசன் மற்றும் சிவஞ்சோதி, காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மற்றும் ஜெகதீஸ்வரி இராசேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும், சத்தியமூர்த்தி, குணரத்தினம், பூபதி, பாலசிங்கம், காலஞ்சென்ற பாக்கியநாதன் ஆகியோரின் பாசமிகு மாமனும், காலஞ்சென்ற நாகம்மா, செல்லம்மா, தங்கம்மா ஆகியோரின் அருமை மைத்துனரும், துவாரகேதன், அபர்ணா, துஸ்யந்தமூர்த்தி, மேதுஜா, ஜெனாத், ஆர்த்தி, ஆரணா, யாழினி, கீர்த்திகா, அபிரா, அயூசன், நிரோஜா, தனுஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.02.2015) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிரர்ய இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

## திருக்கோவில் பிரதேச சபை உறுப்பினர் காலமானார்


அம்பாறை, பெப்.25

தமிழ்தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட திருக்கோவில் பிரதேச சபை உறுப்பினர் டாக்டர் வே. மகேந்திரன் 61ஆவது வயதில் காலமானார்.

இரு தினங்களாக சுகவீனமுற்ற நிலையில் அம்பாறை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் உயிரிழந்துள்ளார்.

தம்பிலுவிலை பிறப்பிடமாக கொண்ட இவர் வைத்தியராக பல வைத்தியசாலைகளில் கடமையாற்றிவந்துள்ளதுடன் கடந்த பிரதேச சபை தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் சார்பில் போட்டியிட்டு பிரதேச சபைஉறுப்பினராகதெரிவு செய்யப்பட்டிருந்தார். (ற-10)

## மரண அறிவித்தல்



திருமதி

### பரமேஸ்வரி இளையதம்பி (பத்தர்)

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி இளையதம்பி 23.02.2015 திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - துரையம்மா தம்பதியரின் அன்பு மகளும் கிட்ணர் இளையதம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வர்களான கமலேஸ்வரி, சொர்ணலிங்கம், அரியமலர் மற்றும் இராஜேஸ்வரி, சோதிலிங்கம், நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரஞ்சன், சசிகலா, காலஞ்சென்றவர்களான தயாபரன், புஸ்பமலர், பிறேமச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும், நிர்மலாதேவி, கஜேந்திரன் ஆகியோரின் மாமியும், றஜீவன், அனுசன், பிரியங்கா, அபிநயா, அனுசியா, லக்ஸ்சிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

42, நாயன்மார் வீதி,
நல்லூர்.
தொ.பே. 077 041 8086 (51906)(45.3)

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## ஐ.நா.

முற்பகல் 10 மணியளவில் பேரணி பலாலி வீதியூடாக நகரத் தொடங்கியது. நிரை நிரையாக ஆயிரக்கணக்கான மக்கள் அதில் பங்கெடுத்தனர். பேரணி நல்லூர் ஆலயத்தின் வடக்கு வீதியில் – தமிழ் மக்களின் உரிமைக்காக அகிம்சை வழியில் – உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகி திலீபனின் நினைவிடத்தில் நிறைவடைந்தது.

அங்கு காணாமற்போகச் செய்யப்பட்டோரின் உறவுகளும் கூடியிருந்தனர். அவர்களின் அழுகை ஒலியில் அந்தப் பகுதி சோகமயமானது. "எங்கள் பிள்ளைகளையும், உறவுகளையும் எம்மிடம் திருப்பித் தாருங்கள். எங்கள் உறவுகளுக்காக அலைகின்றோம். மைத்திரிபால சிறிசேனவே எங்கள் உறவுகளைத் தாருங்கள். இல்லையேல் நாம் தற்கொலை செய்துவிடுவோம்."– என்று அவர்கள் கூறினர். இரு தாய்மார்கள் அங்கு மயங்கிச் சரிந்தனர்.

அங்கு பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத் தலைவர் இராசகுமாரன் உரையாற்றியிருந்தார்.

"வேற்றுமைகளைக் களைந்து ஒன்றாக ஜனநாயக ரீதியாகப் போராடி எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதியைப் பெற்றுத்தர அனைவரும் நடவடிக்கை எடுக்க வேண்டும்..விசாரணை அறிக்கை தாமதப்படுத்தப்பட்டிருப்பதானது, நீதி கிடைக்கும் என நம்பியிருந்த தமிழ் மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது. தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதியே. அறிக்கையை உடனடியாக வெளியிட நாம் தொடர்ந்து போராட வேண்டும். எமது உரிமைகளுக்காக நாம் தொடர்ந்து ஜனநாயக வழியில் போராட வேண்டும். இவ்வாறான போராட்டங்கள் நசுக்கப்பட முடியாத போராட்டம் என்பதை வலியுறுத்துவோம். யாழ்ப்பாணத்திலுள்ள ஐ.நா. அலுவலகத்தில் மனு கையளிக்கப்பட இருந்தது. ஆனால் யாழ்ப்பாணத்தில் உள்ள அலுவலகம் நிகழ்ச்சித்திட்ட அலுவலகமே என்று அதன் அதிகாரிகள் கூறியதனால் ஆயர் ஊடாக கொழும்பிலுள்ள அதிகாரிகளிடம் கையளிக்கத் தீர்மானிக்கப்பட்டது."– என்று அவர் தெரிவித்தார்.

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் மற்றும் சர்வதேச இந்து குருமார் ஒன்றியத் தலைவர் சபா.வாசுதேவக் குருக்கள் ஆகியோரிடம் மனு கையளிக்கப்பட்டது.

அந்த மனுவில் –

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கையைத் தாமதப்படுத்தி அதனை எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குப் பிற்போட்டமைக்காக கடும் விசனத்தைத் தெரிவிக்கின்றோம். பாதிக்கப்பட்டவர்கள் என்ற ரீதியில் அறிக்கை உடனடியாக வெளிவர வேண்டும் என்று விரும்புகின்றோம். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தற்போதைய அரசு போரில் இழைக்கப்பட்ட கொடுமைகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றை உருவாக்கும் என்ற நம்பிக்கையில் அறிக்கை பிற்போடப்படுவதைத் தாங்கள் பரிந்துரை செய்துள்ளதாக நாம் புரிந்து கொள்கின்றோம். அரசின் நடைமுறையில் உள்ள நிர்வாகக் கட்டமைப்பையும் (போரில் தீவிர பங்காற்றியவர்கள் உட்பட), கடந்த கால உள்நாட்டுவிசாரணைப்பொறிமுறைகள் நீதியை நிலைநாட்டத் தவறியமை தொடர்பான வரலாற்றையும் கருத்திற் கொண்டு நோக்கும் போது, இந்த அரசால் உருவாக்கப்படவல்ல எந்தவொரு உள்நாட்டுப் பொறிமுறையிலும் எமக்கு நம்பிக்கை இல்லை என்பது தெளிவு. இலங்கை அரசியலில் ஆதிக்கம் செலுத்துகின்ற சிங்கள பௌத்த தலைமைத்துவங்கள் தொடர்பிலான எமது நீண்டகால அனுபவத்தில், இலங்கை ஆயுதப்படைகளைச் சார்ந்த அங்கத்தவர்கள் எவ்விதக் குற்றங்களுக்காகவும் உள்நாட்டில் தண்டிக்கப்படமாட்டார்கள் என்பதை நாம் அறிவோம். உள்நாட்டு விசாரணை மீதான சர்வதேச மேற்பார்வை வெறும் காலவிரயத்துக்கு மட்டுமே வழிகோலும் என்பதையும் அறிவோம்.

நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளான இராணுவமயமாக்கம், மக்கள் தம் சொந்தக் கிராமங்களில் குடியேறல், காணாமற்போனோர் மற்றும் சட்டவிரோத தடுப்புக்காவல் சம்பந்தப்பட்ட இப்பிரச்சினைகள் தொடர்பில் சிறிசேன அரசால் குறிப்பிடக்கூடிய எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. – போன்ற விடயங்கள் உள்ளடங்கியுள்ளன.

பேரணியில் பல்கலை ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள், சமயப் பெரியார்கள், சிவில் சமூக அமைப்பைச் சேர்ந்தவர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், காணாமற் போனோரின் உறவுகள், மருத்துவர்கள் அரசியல்வாதிகளில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், ஈ.சரவணபவன், சி.சிறிதரன், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் –வடமாகாண அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம், மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

(ந–4,109)

## வாள்வெட்டுக்கு

இரவு 8.50 மணியளவில் வேலை முடிந்து வந்து, அவர் வீட்டில் தொலைபேசியில் பாடல் கேட்டுக்கொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த 4 பேர் கொண்ட குழுவினர் இவரது வீடு என நினைத்து அயல் வீட்டுக் கதவை தட்டி விசாரித்தனர். அதைக் கேட்டு எழுந்து வீட்டின் வெளியே வந்த பிரபுவை மோட்டார் சைக்கிளின் வெளிச்சத்தில் வீட்டுக்குச் செல்லும் ஒழுங்கையில் வைத்து சரமாரியாக வெட்டியுள்ளனர் என்று கூறப்படுகின்றது. அலறல் சத்தம் கேட்டு பிரபுலின் மனைவி, அயலவர்கள் வந்தபோது தாக்குதலாளிகள் தப்பித்துச் சென்றுள்ளனர். வயிற்றில் ஆழமான வெட்டுக் காயத்துக்கு உள்ளான பிரபு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி பொது வைத்திய சாலையில் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பாக நேற்று மாலை தர்மபுரத்தை சேர்ந்த ஐவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாகவும் கொலைக்கு பயன்படுத்திய வாள் மற்றும் சில பொருள்களையும் தர்மபுரம் கிழக்கு பகுதியில் இருந்து மீட்டுள்ளதாகவும் கிளிநொச்சி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி பாலசூரிய தெரிவித்தார்.

(ந–21)

## விசாரணை

நேற்று நடைபெற்ற பேரணியின்போது ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இந்தப் பேரணி நீதி கேட்கும் வைபவமாகும். பிற்போடப்படும் நீதி மறுக்கப்படும் நீதியாகச் சட்ட இயலிலே அடிப்படைத் தத்துவமாக உள்ளது. உள்ளக விசாரணை அறிக்கையில் நம்பிக்கை இல்லை என்பதனால் தான் நாங்கள் ஐ.நாவை நாடுகிறோம். அவர்கள் எம்மைக் கைவிட்டுவிட்டதாகவும் ஏமாற்றிவிட்டதாகவுமே நாம் உணர்கிறோம். உள்ளக விசாரணை செய்வதாக அரசு கூறியிருக்கிறது. அதற்கு 6 மாதங்கள் போதாது. 2 வருடங்கள்வரை நீடிக்கலாம். அது முழுமையாகச் செய்யும் விசாரணையாக இருக்காது. ஆகவே மீண்டும் பிற்போட்டு சில வேளைகளில் அடுத்த வருடம் மார்ச் மாதம் சமர்ப்பிக்குமாறும் அரசு கோரக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. அது தான் தத்துவமாகவும் நீதி மறுக்கப்படும் நீதியாகும்."– என்று அவர் தெரிவித்தார்.

"இந்நாட்டில் உள்ளவர்கள்தான் குற்றம் செய்தவர்கள். குற்றம் செய்தவனை நாட்டில் நீதிவானாக்குவது எப்படி? குற்றச்சாட்டப்பட்டிருக்கும் நபரும் நீதிவானும் ஒருவராக இருக்க முடியாது. அதுவும் தத்துவம். பாரபட்சமற்ற தூய்மையான உள்ளம் கொண்ட உலக சார்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு அமைப்பு இதனைச் செய்ய வேண்டும்.

அரச ஆவணங்களின் அடிப்படையில் முன்னர் கூறப்பட்ட அறிக்கையின்படி ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 679 பேர் 8 மாதங்களில் அழிக்கப்பட்டுள்ளனர். போர் இறுதிக் கட்டத்தில் – ஒக்ரோபர் மாதத்திலிருந்து மே மாதம் 19 வரையான காலப்பகுதியில் இவ்வளவு மக்கள் அழிக்கப்பட்டுள்ளனர். குழந்தைகள் உட்பட பலவகையினரும் கொல்லப்பட்டவர்களில் உள்ளடங்குவர்."– என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

"திட்டம் வகுத்து அந்த உள்நோக்கிலேயே அரசு போரை நடத்தியுள்ளது. அத் தகைய தீய நோக்கம் கொண்டவர்கள் இதுவரை எந்த விசாரணையும் நடத்தாத வர்கள் எதிர்காலத்தில் நடத்தவுள்ளதாகக் கூறுவதை நாம் நம்பமுடியாது.

புதிய அரசிடம் பெரிய எதிர்பார்ப்பு எமக்கு இருந்தது. ஆனால் அவர்களால் செய்ய முடியாத காரியத்தை அவர்கள் செய்ய முற்படுகிறார்கள்.

இந்தப் பேரணி பயனுடையதாக இருக்கும். என்னிடம் மனுக் கையளிக்கப்பட்டுள்ளது. நான் நேரடியாக ஐ.நா. அலுவலகத்துக்குச் சென்று ஐ.நா.பிரதிநிதியிடம் மனுவைக் கையளிப்பேன்"– என்றும் அவர் கூறினார். (ந–4)

## பேரணி

சபையின் அமர்வை இரு மணி நேரம் ஒத்தி வைக்கும் விசேட கவனவீர்ப்புப் பிரேரணையை முன்வைத்தார். அதனை உறுப்பினர் சிராய்வா வழிமொழிந்தார்.

இதற்கு வடக்கு மாகாண சபையில் எந்தவொரு எதிர்ப்பும் தெரிவிக்கப்படவில்லை. அதையடுத்து சபை உடனடியாக இரு மணி நேரம் ஒத்தி வைக்கப்பட்டது. மாகாண சபை உறுப்பினர்கள் போராட்டத்தில் கலந்து கொண்டனர். சபை மீண்டும் மு.ப. 11.30 மணிக்கு ஆரம்பமானது.

அதில் முதலில் கேள்விகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. எதிர்கட்சித் தலைவர் சி.தவராசாவினால் எழுப்பப்பட்ட கேள்வி சர்ச்சையை ஏற்படுத்தியது. வடக்கு மாகாண சபையின் கடந்த நிதியாண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பான விடயம், வடக்கு மாகாண இணையத் தளத்தில் வெளியாகியது சம்பந்தமாக அமைந்த அவரது கேள்விக்கு, முதலமைச்சர் இணையத் தளத்தில் வெளியாகியதற்கு எல்லாம் என்னால் பொறுப்புக் கூற முடியாது என்று காட்டமாகப் பதிலளித்ததால் அந்த சர்சை நீடித்தது.

அதன்பின்னர் வழமை போன்று மாகாண சபையில் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன.

(ந–5)

**துயர் பகிர்கின்றோம்**

எமது பாடசாலையின்
சிரேஸ்ட ஆசிரியர்
**திரு தம்பிராசா ஜெயபாபு**
அவர்களின் அன்புச்சகோதரி
திருமதி **நவரட்ணராஜா தங்கராணி**
அவர்கள் 22.02.2015 ஆம் திகதியன்று இறைவனடி சேர்ந்ததையிட்டு அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ குடத்தனை அ.த.க. பாடசாலை
குடத்தனை.

**கண்ணீர் அஞ்சலி**



பருத்தித்துறை பிரதேச செயலகத் தின்
வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி
உத்தியோகத்தராகக் கடமையாற்றிய
**குணசேகரம் சுதாகர்**
24.02.2015 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

பிரதேச செயலரும்
அனைத்து உத்தியோகத்தர்களும்

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**



தோற்றம்
09.02.1967

மறைவு
27.01.2015

அமரர் **தில்லையம்பலம் கேசவன்**

கடந்த 27.01.2015 சிவபதமடைந்த எமது செல்வப்புதல்வனை நினைவு கூருவதுடன், இவரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை [26.02.2015] வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

வத்திராயன் தெற்கு,
தாளையடி.

குடும்பத்தினர்.

**கண்ணீர் அஞ்சலி**



எமது பாடசாலையின் விவசாய பாட ஆசிரியரான
**திரு குமாரசாமி ஜெகதீஸ்வரன்**
அவர்கள் 23.2.2015 (திங்கட்கிழமை) அன்று காலமாகிய செய்தி கேட்டு மிக்க அதிர்ச்சியும் துயரமும் அடைந்துள்ளோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் ஏனைய உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

நலன்புரி கழகம்
யா/ கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்.
போப்பாய்.

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**

**அமரர் நாகலிங்கம் கணேசபிள்ளை**



தோற்றம்
15
02
1935

மறைவு
26
01
2015

தந்தையாய்த் தாயாய்
குருவாய் வழிகாட்டியாய்
வாழ்ந்த தெய்வமே கல்விப்பணிக்காய்
சிந்தை வைத்து காலமெல்லாம்
நல்லாசிரயனாய் உழைத்து
ஆயிரமாயிரம் சுடர் தீபங்கள்
ஒளிரவைத்தனை
எந்தையிறைவனைமறவாத சிந்தையுடன்
தென் புலத்தார் தெய்வம்
விருந்தென இல்லற தர்மங்கள்
நிறைவு செய்தாய்
தந்தி முகனருளால் நிறை வாழ்வு வாழ்ந்து
சிவலோக நாயகன் சேவடி
அடைந்த தெய்வமே இப்புனித நாளில்
வணங்குகின்றோம் ஐயா!

26.01.2015 திங்கட்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தின் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று 25.02.2015 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார். உறவினர். நண்பர்கள்.அனைவரும் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் எமது குடும்பக் குலவிளக்கின் பிரிவுச்செய்தி கேட்டு நேரில் வந்து துயரில் பங்குகொண்ட உறவினர் நண்பர்கள் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த வெளிநாட்டு உள்நாட்டு உறவினர்கள் பல வழிகளில் உதவி புரிந்த உறவுகள் அன்பு உள்ளங்களுக்கு எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

" சத்தியகிரி " இணுவில் தெற்கு

நீங்காத நினைவுகளில்
குடும்ப உறவுகள்

# இன்றைய நல்லாட்சிக்காக விலை கொடுத்துள்ளோம்

## மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.25

கடந்த காலங்களில் இந்த நாட்டில் ஒரு ஊடக மாநாடு நடத்த முடியாது. ஒரு பொதுக்கூட்டம் நடத்த முடியாது. ஒரு ஜனநாயக ஆர்ப்பாட்டம் நடத்த முடியாது. ஒரு அரசியல் ஊர்வலம் நடத்த முடியாது.. இன்றுஎவரும்கூட்டம்,ஊடகமாநாடு, ஆர்ப்பாட்டம், ஊர்வலம் என்று ஜனநாயக வரம்பு அனுமதித்த எதையும் செய்யலாம். நாம் இன்று ஏற்படுத்தியுள்ள நல்லாட்சி சூழலின் வெளிப்பாடுதான் இதுவாகும். – இவ்வாறு தெரிவித்தார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்.

கொழும்பு மாநகர சபையில் முன்னணியின் மாநகரசபை உறுப்பினர் கே. ரீ. குருசாமியின் ஏற்பாட்டில் நடைபெற்ற, மாநகரசபையின் 150ஆவது நிறைவுக்கான இந்து சமய விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–



"இதற்காக நாம் பல்லாண்டுகளாக பாடுபட்டு உழைத்துள்ளோம். நாடு முழுக்க ஓடோடி பணியாற்றியுள்ளோம். ஏச்சு, பேச்சு, கல்லடி, துப்பாக்கி குண்டு ஆகியவற்றை கண்டுள்ளோம். இன்றைய நல்லாட்சியை நாம் விலை கொடுத்துத்தான் பெற்றோம்.அதைமறந்துவிடாதீர்கள். எவருக்கும் இந்த நாட்டில் அரசியல் செய்ய உரிமை உண்டு. ஆட்சிக்கு வர முயற்சி செய்ய உரிமை உண்டு. ஆனால், அதற்கு இன வாதத்தை பயன் படுத்த எவருக்கும் இடம் கொடுக்க முடி யாது. சிங்கள, தமிழ், முஸ்லிம் இனத்தவரையும், பௌத்த, இந்து, இஸ்லாம், கத்தோலிக்க மதத் தவரையும் ஒருவருக்கொருவர் எதிராக தூண்டிவிட்டு தம் சொந்த தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள எவருக்கும் இடமில்லை. இங்குஎவரும் இனவாதம் பேச முடியாது. அதை அனுமதிக்க முடியாது.

இன்று நாம் ஒருவிதத்தில் தேசிய அரசு ஒன்றை நடத்துகின்றோம். நமது ஜனாதிபதி ஒரு கட்சி. பிரதமர் இன்னொரு கட்சி. நாம் வேறொரு கட்சி. இன்னும் பல கட்சிகள் இணைந்துள்ளன. ஆகவே இது ஒரு தேசிய அரசு. இது வேண்டாம் என்று எவரும் முடிவு எடுத்தால் அதற்கும் முகங்கொடுக்க நாம் தயார். எல்லாவற்றையும் கலைத்துவிட்டு நாம் புதிய தேர்தலுக்கு செல்வோம்."– என்றார். (ற)



உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள சிங்கப்பூர் வெளிவிவகார மற்றும் சட்டம் தொடர்பான அமைச்சர் கே. சண்முகன் நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இலங்கையினதும், சிங்கப்பூரினதும் நட்புறவை மேலும் வலுப் படுத்தி கொள்ளும் நோக்கிலேயே அவர் இலங்கை வந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் மத்திய வங்கி ஆளுநர் ஆகியோரையும் சந்திக்கவுள்ளார். (ற)

# இலங்கை மீனவர்கள் இந்தியாவில் கைது

கொழும்பு, பெப்.25

இலங்கை மீனவர்கள் 19பேர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. எல்லைதாண்டி மீன்பிடித்தமைக்காகவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

தூத்துக்குடி கடற்பகுதியில் வைத்து இந்த மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மீனவர்களுடன் நான்கு மீன்பிடிப் படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் தூத்துக்குடி காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ற)

# ஜெயக்குமாரிக்கு தடுப்புகாவல் நீடிப்பு

கொழும்பு, பெப்.25

பாலேந்திரன் ஜெயகுமாரியை தொடர்ந்தும் அடுத்த மாதம் 10 ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

பயங்கரவாத தடுப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி கைது செய்யப்பட்டு பூசா தடுப்பு முகாமில் சுமார் ஒரு வருடகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த ஜெயகுமாரி கடந்த வாரம் வெலிக்கடை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்.

நேற்று அவர் கொழும்பு நீதிவான நீதிமன்றில் அவர் முற்படுத்தப்பட்டார். அதன்போது எதிர்வரும் மார்ச் 10 ஆம் திகதிவரை சிறைச் சாலையில் தடுத்து வைத்திருப்பதற்கான உத்தரவை நீதிவான் பிறப்பித்துள்ளார். (ற)

### முள்ளிவாய்க்கால்

அதில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனால், முதலமைச்சரிடம் முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட கேள்வி எழுப்பப்பட்டது.

'முள்ளிவாய்க்கால் மண்ணில் உயிர் தியாகம் செய்த தங்களுடைய உறவுகளை நினைவு கூர்வதற்கு ஏதுவாக ஒரு நினைவுச் சின்னம் அமைத்தல்' என்ற பிரேரணை கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் திகதி சபை அமர்வில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு ஒரு வருடமும் கடந்து விட்ட நிலையில் இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? – என்று அவர் கேள்வியெழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த முதலமைச்சர், அதை அமைப்பதற்குரிய நிதி ஏற்பாடுகள் மாகாண நிதிச் சட்டத்தில் இல்லை. நினைவுத்தூபி அமைப்பதற்கு வடக்கு மாகாண சபை தடையாக இல்லை. பொதுமக்களோ அல்லது பொது அமைப்புக்களோ இதனை உரிய முறையில் விண்ணப்பித்துச் செயற்படுத்த முடியும்."– என்று தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், பொது அமைப்புக்கள் தயாராக இருக்கின்றன என்று தெரிவித்தார். அதையடுத்து அவைத் தலைவர், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சுக்கு முறைப்படி விண்ணப்பித்து இதனைச் செயற்படுத்தலாம்– என்று தெரிவித்தார்.

அதன்பின்னர் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன், வன்னிப் பெருநிலப்பரப்பை ஆட்சி செய்த தமிழ் மன்னான பண்டார வன்னியனின் வாளேந்திய உருவச்சிலை முல்லைத்தீவு நகரில் நிறுவப்பட வேண்டுமென கோரும் பிரேரணையை முன்மொழிந்தார். இதனைச் சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. இதனை நடைமுறைப் படுத்துவதற்கும், உள்ளூராட்சி அமைச்சுக்கு விண்ணப்பித்து நடவடிக்கை எடுக்குமாறு அவைத் தலைவர் தெரிவித்தார். (ற-5)

### மகேஸ்வரி

யாழ். மாவட்ட பாரவூர்தி உரிமையாளர்கள் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் மணல் ஏற்றுவதற்காக மகேஸ்வரி நிதியத்திடம் 5 ஆயிரம் ரூபா அங்கத்துவப் பணம் செலுத்தியிருந்தனர்.

முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரில் 2010 ஆம் ஆண்டு 500க்கும் மேற்பட்ட பாரவூர்தி உரிமையாளர்கள் இந்தப் பணத்தைச் செலுத்தியுள்ளனர். அத்துடன் சேவைகளுக்கான சேமிப்புப் பணமாக 300 ரூபாவையும் செலுத்தியிருந்தனர். கடந்த ஆண்டு தொடக்கம் அங்கத்தவர்களின் பணத்தை மீளளிக்குமாறு பாரவூர்தி சங்கத்தால் மகேஸ்வரி நிதியத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதன்பின்னர் கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற பாரவூர்தி உரிமையாளர் சங்கத்தின் பொதுக் கூட்டத்தின் போது மகேஸ்வரி நிதியத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தத் தீர்மானித்திருந்தனர். எனினும் மகேஸ்வரி நிதியத்தின் இணைப்பாளரால் தொலைபேசி மூலமாக பணத்தை மீளளிப்பதற்கான இணக்கப்பாடு காணப்பட்டது. அதையடுத்து பாரவூர்தி உரிமையாளர்கள் ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டனர். இணக்கப்பாட்டின் ஊடாக வாரவாரம் 50 பேர் வீதம் பணத்தை மீளளிப்பதாக மகேஸ்வரி நிதியத்தால் தெரிவிக்கப்பட்டு முதல் வாரம் மட்டும் 50 பேருக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் வழங்கப்பட்டது. எனினும் ஏனைய அங்கத்தவர்களின்பணம்மீளளிக்கப்படவில்லை.

அதையடுத்தே அங்கத்தவர்கள் இணைந்து இந்த ஊர்வலப் பேரணியை ஏற்பாடு செய்துள்ளனர்.

கோண்டாவிலில் அமைந்துள்ள சங்கக் காரியாலயத்தில் இருந்து ஊர்வலமாக கோவில் வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரி நிலையத்தின் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள அங்கத்தவர்கள் அனைவரும் பங்குபற்றுவர் என சங்கத்தின் தலைவர் செ.ஜெயக்குமார் தெரிவித்தார். (ற-14)

### சென்னையில்

இலங்கை அரசால் தொடர்ந்து நிகழ்த்தப்படும் இனஅழிப்பை ஐ.நா சபை உடனடியாக தடுத்து நிறுத்த முன்வரவேண்டும். ஐ.நா. சபை கால தாமதமின்றி போர்க்குற்ற விசாரணை அறிக்கையை வருகின்ற மார்ச் மாத கூட்டத் தொடரிலேயே வெளியிடப்பட வேண்டும். தமிழீழ மக்களின் உரிமைகளை மீட்டெடுக்க, சுதந்திர தமிழீழம் அமைய பொது வாக்குக்கெடுப்பை விரைவில் நடத்த ஐ.நா முன்வரவேண்டும். தமிழீழ மக்களின் நல்வாழ்வுக்காகவும் விடுதலைக்காகவும் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழீழ மக்களின் தேசிய இராணுவமாக அங்கீகரிக்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. (ற-5)

### ஜனநாயக

உதவித் திட்டத்துக்கு, அனைத்து இயக்கப் போராளிகளின் சார்பாக நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

இதன் மூலம் ஒவ்வொரு போராளியின் குடும்பங்களும் ஓரளவேனும், தமது வாழ்வாதார வளத்தினை மேம்படுத்த முடியும் என்று நம்புகின்றேன். அஹிம்சைப் போராட்டத்தின் மூலம் 35 ஆண்டுகளும், ஆயுதப் போராட்டம் மூலம் 31 ஆண்டுகளும் போராடி ஒரேயொரு தீர்வாக இந்த மாகாணசபையே கிடைக்கப் பெற்றுள்ளது. இந்தச் சபையில் கடந்த காலத் தரவுகளின் ஒரு சிறு பகுதியேனும், பதிவு செய்யப்பட வேண்டியது காலத்தின் தேவை என்று கருதுகின்றேன்."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

"சுதந்திரத்துக்கு பிற்பட்ட காலப் பகுதியில் தமிழ் மக்களுக்கான அரசியல் சம உரிமைக்கு என்று ஜனநாயக வழியில் போராடிய தமிழ் மக்களை இலங்கை அரசை மாறி மாறி ஆண்டு வந்த பேரினவாத அரசுகள் ஆயுத முனையில் அடக்க முற்பட்டதன் விளைவே, ஆயுதப் போராட்டத்தின் வெளிப்பாடாக அமைந்தது. ஆயுதப் போராட்டத்தில் 38 ஆயுதக் குழுக்கள் செயற்பட்டன. அவற்றுகள் மாணவர் அமைப்புக்களும் உள்ளடங்குகின்றன.

கிராமிய அபிவிருத்தி அமைச்சினால் அறிவிக்கப்படுகின்ற போராளிகளில் வாழ்வாதார உதவிகள் வழங்கும் விடயத்தில் ஏனைய இயக்கப் போராளிகள் விலக்கப்பட்டுள்ளதாக பலரிடமிருந்து முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளை பொறுத்தவரை அவர்களுக்கு வாழ்வாதார உதவிகளை செய்ய வேண்டியது எமக்கு எல்லோருக்கும் உள்ள முக்கிய கடமை என்பதை ஏற்றுக் கொள்வதோடு ஏனையவர்களுக்கும் நாம் சந்தர்ப்பம் வழங்க வேண்டும்."– என்றும் அவர் தெரிவித்தார்.

"1987 ஆம் ஆண்டு இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் போது சகல இயக்கங்களும் ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு, ஆயுதங்களை கையளித்து அரசியல் கட்சியாகப் பதிவு செய்து ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து கொண்டனர். பின்னர் புலிகள் மட்டுமே தொடர்ச்சியாக இறுதி வரை ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

தற்போதைய சூழ்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் பலர் அச்சுறுத்தல்களின் மத்தியில் எமது மண்ணில் வாழ்ந்து வருகின்றனர். தென்னிலங்கையில் ஆயுதப் போராட்ட இயக்கமான ஜே.வி.பி அரசியலில் உள்வாங்கப்பட்டது போன்று விடுதலைப் புலி உறுப்பினர்களையும், அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுள் உள்வாங்கி அரசியல் செயற்பாட்டினை முன்னெடுப்பதன் ஊடாக அவர்களின் எதிர்கால பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும்"– என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-5)

### நெற் குவியலுடன்

கிளிநொச்சி பொது வைத்திய சாலையின் விடுதியில் உள்ள அவரது உறவினரைப் பார்த்துவிட்டு இரவு 8.30 மணியளவில் பூநகரி வீதி வழியாக மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்தபோது இந்த விபத்து நடந்துள்ளது. அறுவடை முடிந்து வீதியில் காயவிடப்பட்டிருந்த பெரிய நெல் குவியலுடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டது. பின் இருக்கையில் இருந்தவர் காயமடைந்து கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் உடல் உடற் கூற்றுச் சோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ற-21)


**மரண அறிவித்தல்**

**இராசையா ஜெயானந்தராசா (ஆனந்தன்)**



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா ஜெயானந்தராசா (ஆனந்தன்) நேற்று (24.02.2015) செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் இராசையா-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், சந்திரமலரின் அன்புக் கணவரும், தாரணி, ஜெனா, ஜென்சிகா, தருபன், அபர்ணன் ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுத்திக்கிரியைகள் இன்று (25.02.2015) புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கொட்டுடைக் காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

ஸ்ரீவாகீஸ்வரி வீதி, கோண்டாவில் வடக்கு. குடும்பத்தினர்.

# மணியம் தோட்ட மக்கள் கவலை

## வீட்டுத் திட்ட உதவிகளைப் பெறுவதில்



கொழும்புத்துறை,பெப்.25
மணியம்தோட்டப் பகுதியில் பெரும்பாலானவர்களுக்கு காணிக்கான உறுதிகள் இதுவரை கிடைக்கப்பெறாமை, பெயர் மாற்றம் செய்யப்படாமை போன்ற காரணங்களால் வீட்டுத்திட்ட உதவிகளைப் பெறமுடியாதுள்ளதாக அந்தப் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.
இந்திய உதவி வீட்டுத்திட்டத்தின் கீழ் குறித்த பகுதியில் 40 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. சுமார் 5லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுவரும் வீடுகளின் நிர்மாணப் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன.
முதலாவதாக 30 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு கடந்த மாதம் பயனாளிகள் அந்த வீடுகளில் குடியமர்ந்துள்ளனர். எனினும் 423 காணித் துண்டுகளில் 530 குடும்பங்கள் வசித்து வரும் நிலையில், தற்போது 25 வீதமான வீடுகளே பயனாளிகளுக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக கிராம அபிவிருத்திச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.
1974ஆம் ஆண்டு காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் மணியம் என்பவரின் தென்னம் தோட்டம் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப் பட்டு குறித்த கிராமம் உருவாக்கப்பட்டது. பின்னைய கால போர் நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து குடிமனைகள் அழிவுற்ற நிலையில் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த குறித்த பகுதி பின்னர் விடுவிக்கப்பட்டு மக்கள் மீளக் குடியமர்ந்தனர்.
பல்வேறு அரச சார்பற்ற, அரச நிறுவனங்களின் மலசல கூட, அரைநிரந்தர மற்றும் வாழ்வாதார உதவிகளுடன் பல சிரமங்களின் மத்தியில் வாழ்ந்து வந்த அந்தப் பகுதி மக்களுக்குத் தற்போது இந்திய உதவித் திட்ட வீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.
பெரும்பாலானவர்களுக்கு காணிக்கான உறுதிகள் இது வரை கிடைக்கப்பெறாமை, பெயர் மாற்றம் செய்யப்படாமை போன்ற காரணங்களால் வீட்டுத்திட்ட உதவிகளைப் பெறமுடியாதுள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.
உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி மக்களுக்கான வீட்டுத்திட்ட உதவிகளைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். அதேவேளை உதயபுரம் கிராமத்திலும் 30 இற்கும் மேற்பட்ட வீடுகள் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.(வ-135)

# மீன் சந்தைக் கழிவுகளால் நிரம்பும் சாவகச்சேரி-தனங்களப்பு வீதி

கொடிகாமம், பெப்.25
சாவகச்சேரி-தனங்களப்பு வீதியில் அமைந்துள்ள மீன் சந்தையிலிருந்து 100மீற்றர் தூரத்தில் கழிவுப் பொருள்கள் கொட்டப்படுகின்றன.
இதனால் அந்தப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதாரச் சீர்கேடும் நிலவுகின்றது.
சாவகச்சேரி நகரப் பகுதியிலிருந்து சுமார் 600 மீற்றர் தூரத்திலேயே இறைச்சிக் கழிவுகள், கழிவுப்பொருள்கள் கொட்டப்படுகின்றன. இதனால் வீதியால் பயணிப்போர் மூக்கைப் பொத்திய வாறு அசௌகரியத்தின் மத்தியில் பயணிக்கின்றனர்.
நகரப்பகுதியிலுள்ள மக்களின் வீட்டுக் கிணறுகள் போன்றவற்றில் காகங்கள் இவ்வாறு கொட்டப்படும் இறைச்சிக் கழிவுகளை காவிச்சென்று போடுவதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.



எனவே பொதுச் சுகாதார பரிசோதகரும், சாவகச்சேரி நகரசபையினரும் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (வ-105)

## பபுள் பீடா விற்பனை செய்யத் தடை

தென்மராட்சி, பெப்.25
தென்மராட்சி பிரதேச வர்த்தக நிலையங்களில் போதைப் பொருளான பபுள் பீடா விற்பனை செய்யவேண்டாம் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.
குறித்த பீடா மாணவர்கள் உட்பட பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்து வருவதால் இதனை விற்பனை செய்வோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதி வர்த்தக நிலையங்களில் போதை பீடா விற்பனை செய்வதைக் கண்காணிக்க சாவகச்சேரி நகர சபையினரின் உதவி நாடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)



வவுனியா கண்டி வீதி, மூன்றுமுறிப்பில் அமைந்திருக்கும் ஆலடி சித்திவிநாயகர் ஆலய மண்டபத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. ஆலய பிரதம குருவால் விசேட பூசை செய்யப்பட்டு ஆலயத்தின் நிர்வாகசபைத் தலைவர் கோபாலகிருஷ்ணன் மற்றும் வடமாகாணசபை உறுப்பினரான மயில்வாகனம் தியாகராசா, நிர்வாகசபை அங்கத்தவர்கள், பக்தர்கள் என பலரும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (வ-402)

# திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயக் கிணறு சுத்தமில்லை

## பக்தர்கள் கவலை





கொடிகாமம், பெப்.25
திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்தின் பக்தர்களது வசதிக்காக தொட்டியில் இறைக்கப்படும் கிணற்றுநீர் சுத்தமானதாக இல்லை என்று குற்றம் சுமத்தப்படுகிறது.
ஏ-9 வீதியிலுள்ள புகழ்பெற்ற குறித்த ஆலயம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதியில் அமைந்திருப்பதுடன், புதுக்குடியிருப்பு பிரதேச சபையினரின் ஆளுகைக்கு உட் பட்டது மாகும். இதில் பக்தர்களின் பயன்பாட்டுக்காக தொட்டியில் இறைக்கப்படும் நீரைப் பெறும் கிணறு பலவருடங்களாக துப்புரவு செய்யப்படாமல் சுகாதாரச் சீர்கேடாக உள்ளது. அந்தக்கிணற்றில் குப்பைகள் மிதக்கும் அதேசமயம் மிகவும் சுகா தாரமற்ற நிலையில் காணப்படுகின்றது. அத்துடன் நீர் நிரப்பப்படும் தொட்டியும் பாசி படர்ந்து தூய்மையற்றுக் காணப்படுகிறது. தொட்டியில் கைகால் கழுவ வருவோர் அந்த நீரை வாயில் மென்று கொப்பளிக்கவும் செய்கின்றனர்.
ஆலயச் சூழல் என்பதால் பக்தர்களும், ஏ-9 வீதியால் பயணிக்கும் மக்களும் அந்தத் தண்ணீர் சுகாதாரமாக இருக்கும் என்று நம்புகின்றனர். எனவே தயவு செய்து இது தொடர்பில் விரைந்து நட வடிக்கை எடுத்து கிணறைத் துப்புரவு செய்து பக்தர்களுக்கு தூய்மையான நீரை வழங்கு மாறு பக்தர்களும் கோயிலை அண்டிய பகுதி வியாபாரிகளும் வேண்டுகோள் விடுக்கின்றனர். (வ-105)

## சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டுக்கு காத்திருக்கும் நிலை

தென்மராட்சி,பெப்.25
சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்குச் செல்லும் பொது மக்கள் முறைப்பாடு செய்ய மணிக் கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது.
குறித்த பொலிஸ் நிலையத்தில் ஒரு பெண் பொலிஸ் உத்தியோகத்தரும், ஓர் ஆண் பொலிஸ் உத்தியோகத்தரும் முறைப்பாடுகள் பதிவு செய்வதால் முறைப்பாட்டைபதிவு செய்ய நீண்டநேரம் எடுக்கிறது. இதனால் முறைப்பாடு செய்யச் செல்லும் பொதுமக்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தனர்.
இதுதொடர்பாக பொலிஸ் நிலையத்தலைமைக் காரியாலயப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, நிலையத்தில் தமிழ்ப் பொலிஸார் கடமையாற்றுகின்ற போதிலும் செய்யப்படும் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகளுக்காக செல்வதால் இருவரே நிலையத்தில் முறைப்பாடுகளைப் பதிவு செய்கின்றனர்.
தமிழ்ப் பொலிஸார் பற்றாக் குறையாக இருப்பதால் முறைப்பாடுகள் பதிவில் சிறிது நேரம் தாமதமாகின்றது. மேலும் தமிழ்ப் பொலிஸார் நியமிக்கப்படும் வரை ஏற்படும் தாமதத்துக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தெரி வித்தார். (வ-9)

# மன்னார் பஸ் தரிப்பிடத்தில் நடைபாதையை ஆக்கிரமித்த வர்த்தக நிலையங்கள்

## பாதசாரிகளுக்கு இடையூறு ஏற்படுவதாக நகர சபையின் உப தலைவர் கூறுகிறார்

மன்னார்,பெப்.25
மன்னார் அரச பஸ் தரிப்பி டத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் நடைபாதைகளை ஆக்கிரமித்துள்ளமையால் பொதுமக்கள் தொடர்ந்தும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக மன்னார் நகர சபையின் உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாசன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:
மக்களுக்கு அசௌகரியங் களை ஏற்படுத்துகின்ற வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு இவ்விடயம் தொடர்பில் பல தடவைகள் எடுத்துக்கூறியும் அவர்களுக்கு பல ஆலோசனைகளைக் கூறிய போதும் அவர்கள் எவ்வித நடவடிக்கைகளையும் இதுவரை மேற்கொள்ளவில்லை.
குறிப்பாக நடைபாதை வியாபாரிகள் மக்கள் நடந்து செல்கின்ற பாதைகளில் தமது வியாபாரப் பொருள்களை வைத்து விற்பனை செய்து வருகின்றனர். அது மட்டுமன்றி, அந்தப்பகுதியில் உள்ள வர்த்தகர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்ட குறித்த அளவுக்கு மேலாகவும் தமது வர்த்தக நிலையங்களை விஸ்தரிப்புச் செய்து பாதசாரிகளுக்கு தொடர்ந்தும் இடையூறை ஏற்படுத்தி வருகின்றனர்.
இந்தச்செயற்பாடுகளால் நாளாந்தம் பஸ் தரிப்பிடத்துக்கு வரும் ஆண்கள், பெண்கள், வயோதிபர்கள், குறிப்பாக கர்ப்பிணித் தாய்மார்கள் என பலரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.
எனவே இந்தச் செயற்பாடுகள் தொடருமாக இருந்தால் பொது மக்களின் நன்மை கருதி சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-56)


# சுகாதார தொண்டர் போராட்டம்

## வடக்கு மாகாண சபையின் முன்பாக நேற்று திரண்டனர்

யாழ்ப்பாணம், பெப். 25

யாழ்.மாவட்ட சுகாதாரத் தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி வடமாகாண சபைக்கு முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப்போராட்டத்தில்ஈடுபட்டனர். கடந்த இரண்டு வாரங்களாக அவர்கள் பண்ணை சுகாதாரக் கிராமம், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை முன்பாகக் கவனவீர்ப்பில் ஈடுபட்டு வந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை சுகாதாரத் திணைக்களத்திலிருந்து வடமாகாண ஆளுநர் அலுவலகத்துக்கும் பேரணியாகச் சென்று மனுக் கொடுத்திருந்தனர். இந்த வாரம் அது தொடர்பில் சந்தித்துக் கலந்துரையாடித் தீர்வைத் தருவதாக உறுதியளிக்கப்பட்டதாகச் சுகாதாரத் தொண்டர்கள்தெரிவித்திருந்தனர். எனினும் அவர்களது நிரந்தர நியமனம் தொடர்பான சிக்கல் இன்னும் இழுபறியிலேயே உள்ளது. பலருக்கு ஏற்கனவே அதிக சம்பளம் வழங்கப்பட்டு வரும் நிலையில் மேலதிக கொடுப்பனவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் மாதாந்தம் 6 ஆயிரம் ரூபா பெற்று வரும் அவர்களுக்குக் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதத்திலிருந்து அந்த 6 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படுவதில்லை. என்று சுகாதாரத் தொண்டர்கள் கூறுகின்றனர். இந்தநிலையில் அவர்கள் தமக்கு நிரந்தர நியமனம் கோரி தொடர் கவனவீர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். முதலமைச்சர், சுகாதார அமைச்சர் ஆகியோர் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி அவர்கள் கவனவீர்ப்புப் போர் நடத்தினர். எனினும் நேற்று சுகாதார அமைச்சர் அமர்வுக்குச்சென்றிருக்கவில்லை. அதனால் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் அவர்களுடன் கலந்துரையாடியுள்ளனர். (த-4)





'மனித நேயம்' அமைப்பினரால் 2 லட்சத்து 90 ஆயிரம் ரூபா செலவில் குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று மாலை புதுக்குடியிருப்பில் புதிய குடியிருப்புப் பகுதியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மனித நேயம் அமைப்பின் தொண்டாளர் சுவாமி ரி. தொண்டுநாதன் குழாய்க் கிணற்றைமக்களிடம் கையளித்துள்ளார்.

# மன்னார் மாவட்டத்தில் மொழிச்சங்கம் ஆரம்பம்

## மொழிப் பிரயோகத்துக்கான உரிமைகள், உறவுகளை வலுப்படுத்தும் நோக்குடன்

மன்னார், பெப் .25

மன்னார் மாவட்ட மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஊடாக இரு மொழிப் பிரயோகத்தைப் பரப்பும் வகையில் மன்னார் மாவட்ட மொழிச் சங்கங்களின் ஒன்றியம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மன்னார் பெரியகமம் பொது நோக்கு மண்டபத்தில் ஆரம்ப நிகழ்வு இடம் பெற்றது. எல்லா மக்கள் குழுவினரையும் உள்ளடக்கும் வகையில் மாவட்ட மட்டத்தில் நிகழ்ச்சிகளைச் செயற்படுத்துவதற்கும், மொழிப் பிரயோகத்தக்கான உரிமைகள் மற்றும் அதற்கான வசதிகளை மேம்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும், மொழிகளுக்கிடையே தொடர்பாடல் மற்றும் பரஸ்பர உறவுகளை வலுப்படுத்துவதன் மூலம் சமூக ஒருமைப்பாடு பேணும் நோக்கோடு குறித்த ஒன்றியம் ஆரம்பிக்கப் பட்டது.



இதன்போது குறித்த ஒன்றயத்தின் நிர்வாகத் தெரிவும் இடம் பெற்றது.

தலைவராக றீற்றா (செபஸ்ரியன் மொழிச் சங்கம் பெற்றா மன்னார்), உபதலைவராக வீ. வசந்திராதேவி (விடியலை நோக்கி மொழிச் சங்கம், பட்டித்தோட்டம்), செயலாளராக ஆர்.வி. லக்சிலா (தனிநாயகம் அடிகளார் மொழிச் சங்கம், பனங்கட்டுக் கொட்டு மேற்கு), உப செயலாளராக வை. ஜெனிற்றா (தலைவர், பிரஜைகள் சபை பனங்கட்டுக் கொட்டு கிழக்கு), பொருளாளராக ரீ.அனற்லின்ரா (வளர்பிறை மொழிச்சங்கம், உப்புக்குளம் வடக்கு) ஆகியோர் தெரிவாகினர்.

இதன்மூலம் இனங்களுக்கு இடையேயான மொழி உறவுகளை வலுப்படுத்துவதற்கும்,மொழி நடைமுறைப்படுத்தலை உறுதி செய்வதற்கும், மக்களிடையே மொழி தொடர்பான நல்லெண்ணத்தைவளர்ப்பதற்கும்திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இதன் ஏற்பாட்டாளர்கள் கூறினர். (த-56)

## கச்சதீவில் இம்முறை சுங்க அதிகாரிகள்

யாழ்ப்பாணம்,பெப்.25

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த பெருநாளை முன்னிட்டுசுங்கதிணைக்களத்தினரின் செயற்பாடுகளும் அதிகரிக்கப்படவுள்ளன.

இந்தியாவில்இருந்தும், இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கச்சதீவில் ஒன்று கூடவுள்ளனர்.

இதனை முன்னிட்டு சட்டவிரோத கடத்தல் வியாபார நடவடிக்கைகளும் இடம்பெறலாம் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இதன் முன்னெச்சரிக்கையாக சுங்கப் பகுதியினர் கச்சதீவு கடற்பகுதியில் தீவிர கண்காணிப்பில் ஈடுபடுவதற்குத் தயாராகி வருகின்றனர் என்று சுங்க திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-17)

## செலுத்தினார் அபராதம்

நீதிமன்றத்தில் தொலைபேசியில் உரையாடிய மட்டுவில் வடக்கு வாசி சாவகச்சேரி நீதி மன்றில் 3 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினார்.இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் இடம் பெற்றது. (த-9)

# 57 இடங்களில் குடிதண்ணீர் மாசு

## மாற்று ஒழுங்குகளுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.25

உடுவில்,தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இதுவரை குடிதண்ணீருக்குப் பொருத்தமற்ற பிரதேசங்களாக 57 கிராம சேவகர் பிரிவுகள் கருதப்பட்டுள்ளது. எனினும் அங்குள்ள மக்களுக்கு போதிய குடிதண்ணீரை வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

சுன்னாகம் பகுதியில் கிணற்று நீரில் கழிவு ஒயில் கலந்துள்ளதால் 37 கிராம சேவகர் பிரிவுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது. உடுவில், தெல்லிப்பழை ஆகிய இரு பிரதேச செயலர் பிரிவுகளிலேயே இந்தத் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இதன் பின்னர் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்போது 57 பிரிவுகளில் இந்தத் தாக்கம் இருப்பதாகக் கருதப்பட்டுள்ளது.

முதற்கட்ட நடவடிக்கையாகப் பொதுமக்களுக்கான குடிதண்ணீரை வழங்குவதற் குப் பிரதேச செயலகம், பிரதேச சபை ஆகியவற்று டன் இணைந்து குடிதண்ணீரை வழங்க ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது. பொது மக்களின் குடிதண்ணீர் விநி யோகத்துக்கு என 370 இற்கும் மேற்பட்ட நீர்த் தாங்கிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. குடிதண் ணீரைப் பரிசோதனை செய்வதற்கு ஆய்வு கூட உத்தியோகத்தர்கள் கொண்ட குழு நியமிக்கப்பட்டு நீர் மாதிரிகளை பரிசோதித்து வருகின்றனர். 50 வீதமான மாதிரிப் பரிசோதனைகள் முடிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது-என்றார். (த-14)

## காய்ச்சலால் இளைஞர் உயிரிழந்தார்

கொடிகாமம், பெப். 25

ஒருநாள் காய்ச்சலால் இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக சாவடைந்துள்ளார்.

அல்வாயைச் சேர்ந்த குணசேகரம் சுதாகரன்(வயது-31) என்ற இளைஞரே நிமோனியா காய்ச்சலால் நேற்று முன்தினம் இரவு சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.காய்ச்சல் காரணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையில் இவர் அனுமதிக்கப்பட்டார். (த-105)

# முறையற்ற மீன்பிடி இராணுவம் உதவி

யாழ்ப்பாணம், பெப். 24

வடமராட்சி கிழக்கு கட்டைக் காட்டுப்பகுதியில் தென்னிலங்கை மீனவர்கள் இராணுவத்தின் உதவியுடன் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றம்சாட்டியுள்ளார்.

இருப்பினும் இராணுவத்தினர் அவ்வாறான எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை என்று பலாலி படைத் தலைமையகம் மறுத்துள்ளது.

வடமராட்சி கிழக்கு கட்டைக் காட்டுப்பகுதியில் தற்போது கடல் அட்டை பிடிப்பதற்கான பருவகாலம் ஆரம்பமாகியுள்ளது. இதனால் தென்னிலங்கை மீனவர்கள் அங்கு வந்து கடலட்டை பிடிப்பில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு வரும் மீனவர்கள், டைனமற் பாவித்து மீன்பிடிப்பது, சிலிண்டர் பாவித்து மீன்பிடிப்பது, வெளிச்சம் போட்டு மீன்பிடிப்பது என்று சட்டவிரோதத் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

இதற்கு இராணுவத்தினரும் உடந்தையாக இருக்கின்றனர். இவர்களின் உதவியுடனேயே, சிங்கள மீனவர்கள் இவ்வாறான தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக அந்தப் பகுதிக்குச் சென்ற தன்னிடம் மீனவர்கள் முறையிட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

*வடமராட்சி கிழக்கு கட்டைக் காட்டுப் பகுதியில் தற்போது கடல் அட்டை பிடிப்பதற்கான பருவகாலம் ஆரம்பமாகியுள்ளது. இதனால் தென்னிலங்கை மீனவர்கள் அங்கு வந்து கட லட்டை பிடிப்பில் ஈடுபடுகின்ற னர்.*

இதேவேளை உள்ளூர் மீனவர்கள் கருத்துத் தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒரு மீனவர் சங்கம் வழங்கிய அனுமதியைப் பெற்றுக் கொண்டு, கடல் வழியாக யாழ்.கடல் எல்லைப் பகுதிக்குள் வரும் மீனவர்கள், இவ்வாறான சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்று குறிப் பிட்டனர்.

இது தொடர்பில் பலாலி இராணுவத் தலைமையகத்தின் ஊடகப் பிரிவு அதிகாரி லெப்.கேணல் மல்லவராச்சியுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, கடந்த 2 வாரங்களுக்கு முன்னர் சிங்கள மீனவர்கள் வந்து மீன்பிடியில் ஈடுபட்டனர். அவர்கள் கடற்றொழில் திணைக்களத்திடம் முறையான அனுமதியைப் பெற்றே மீன்பிடியில் ஈடுபட்டனர். தென்னிலங்கை மீனவர்களின் எந்தவிதமான சட்டவிரோத நடவடிக்கையுடனேயோ அல்லது எந்த விதத்திலுமோ இராணுவத்தினர் தொடர்புபடவில்லை. எமது மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு நடவடிக்கையையும் நாம் செய்யமாட்டோம் – என்றார். (த–5)



யாழ்ப்பாணத்தில் இருந்து தம்புள்ளைக்கு மரக்கறி ஏற்றிச் சென்று கொண்டிருந்த லொறி நேற்று அதிகாலை கிளிநொச்சி இரணைமடுச் சந்தியில் தடம் புரண்டது.இந்தச் சம்பவத்தில் சாரதி உட்பட அனைவரும் காயங்கள் ஏதும் ஏற்படாமல் தப்பித்தனர். (த–21)

## போக்குவரத்து பொலிஸ் அதிகரிக்கப்படவேண்டும்

தென்மராட்சி,பெப்.25

தென்மராட்சிப் பிரதேசத்தில் அதிகரித்து வரும் வீதி விபத்துக்களைத் தவிர்க்கவும், ஏ–9 வீதியில் மாணவர்கள் பாடசாலை வரும் நேரத்தில் சமாந்தரமாகச் செல்வதைத்தவிர்க்கவும்பொலிஸ் போக்குவரத்துச் சேவை விஸ்தரிக்கப்படல்வேண்டும்.

இவ்வாறு கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற பொலிஸ்– பொது மக்கள் நல்லுறவு ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட பொது மக்களால் கோரிக்கை விடப்பட்டது.

பொலிஸார் அண்மையில் இடமாற்றம் செய்யப்பட்டபோது 42 பொலிஸார் இடமாற்றம் பெற்றுச் சென்றபோதிலும் 28 பேரே இடமாற்றலாகி வந்துள்ளனர். ஏனைய 14 பொலிஸாரும் வந்ததும் மக்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும் எனவும், மாணவர்கள் வீதிகளில் சமாந்தரமாகச் செல்வது தொடர்பாக மாணவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாதுள்ளது. பாடசாலைகள் தோறும் பொலிஸார் வீதி ஒழுங்குகளைக் கவனித்து செயற்படுமாறு விழிப்புணர்வு கருத்தரங்குகளும் செய்முறை விளக்கங்களும் கொடுத்துள்ளபோதிலும் மாணவர்கள் அதனை அனுசரித்துச் செல்வதில்லையெனவும் தெரிவித்தார். (த–9)

## மின்னல் கும்பலை சேர்ந்த மூன்று பேர் பொலிஸாரிடம் மாட்டினர்

யாழ்ப்பாணம், பெப் .25

வடமராட்சிப் பகுதியில் கடந்த வாரம் தனியார் நிறுவனம் ஒன்றின் முகாமையாளர் தாக்கப்பட்டமை தொடர்பாக மின் னல் கும்பல் எனக் கூறப்படும் கும்பலை சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், மேலும் இருவர் தேடப்பட்டு வருவதாகவும், இந்தச் சம்பவத் துக்குப் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் ஓட்டோ, மோட்டார் சைக்கிள் என்பன தேடப்பட்டு வருவதாகவும் நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

வடமராட்சிப் பகுதியில் மூத்த விநாயகர் ஆலயத்துக்குச் சமீபமாக தனியார் நிறுவன முகாமையாளர் ஒருவர் இனந் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக நெல்லியடி பொலிஸ் நிலை யத்திலும் முறைப்பாடு செய்யப் பட்டிருந்தது. விசாரணை நடத்திய பொலிஸார் நெல்லியடி, வதிரி பகுதிகளைச் சேர்ந்த மூவரை சந்தேகத்தின்பேரில் கைது செய்தனர். அவர்கள் மூவரும் மின்னல் என்ற கும்பலின் அங்கத்தவர் எனத்தெரிவிக்கப்பட்டது.(த–109)



*லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் ஹாட்லிக் கல்லூரி மாணவர்களுக்கான ஆங்கிலக் கல்விக் கருத்தரங்கு நேற்றுக் கல்லூரியில் நடைபெற்றது. கல்லூரி அதிபர் தர்மலிங்கம் முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த கருத்தரங்கில் வளவாளராக லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த அம்பலவாணர் துரைசிங்கம் கலந்துகொண்டார். (த)*

## குடாநாட்டில் நாளாந்தம் தேங்காய் விலை உயர்வு

யாழ்ப்பாணம்,பெப்.25

குடாநாட்டில் நாளாந்தம் தேங்காயின் விலை அதிகரித்த வண்ணம் உள்ளது. வட பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட தேங்காய்கள் தென்னிலங்கைக்கு அதிகம் எடுத்துச் செல்லப்படுவதாலேயே இந்த விலை உயர்வு ஏற்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் 35 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட தேங்காய் குடாநாட்டு சந்தைகளில் தற்போது 55 ரூபாவையும் தாண்டி 60 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

வடக்கில் போரினால் அழிக்கப்பட்ட தென்னை மரங்களுக்குப் பதிலாக புதிய கன்றுகளை நாட்டியுள்ளதால் தேங்காய்கள் கிடைக்கும் பருவத்தை அந்தத் தென்னை மரங்கள் அடையவில்லை. எனினும் இருக்கும் தென்னை மரங்களில் இருந்து பெறப்பட்ட தேங்காய் களைத் தென்னிலங்கை வர்த்தகர்கள் எடுத்துச் செல்வதால் உற்பத்தியாளர்கள் தேங்காய்களின் விலைகளை அதிகரித்துள்ளன. (த–14)

## வர்த்தக நிலையங்களால் இடையூறு

மன்னார், பெப் 25

மன்னார் அரச பஸ் தரிப்பிடப்பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் நடைபாதைகளை ஆக்கிரமித்துள்ளமையினால் பொதுமக்கள் தொடர்ந்தும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாக மன்னார் நகர சபையின் உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாசன் தெரிவித்தார்.

# கொங்கிறீற் தூண் இடிந்து விழுந்து குடும்பஸ்தர் நசிந்து பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம், பெப். 25

உரிய முறையில் நிர்மாணிக்கப்படாத தூண் விழுந்ததால் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உடல்நசிந்து உயிரிழந்தார். யாழ்.நாவலர் வீதி, இலுப்பையடியில் நேற்று மதியம் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் கோண்டாவிலைச் சேர்ந்த இராசையா ஜெயானந்தராசா (வயது–44) என்பவரே உயிரிழந்தார். இவர் 5 பிள்ளைகளின் தந்தையாவார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

தென்பகுதியைச் சேர்ந்த கட்டட நிர்மாண நிறுவனம் ஒன்று இலுப்பையடியில் கட்டடம் ஒன்றை நிர்மாணித்து வருகிறது. அங்கு வாசலில் இரும்புக் கதவு போடுவதற்கெனத் தூண் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதிலிருந்து நீளமான கம்பி எதுவும் இல்லாது சிறிய கம்பி வைத்து கொங்கிறீற் போடப்பட்டுள்ளது. அந்தக் கொங்கிறீற்றுக்கும் தூணுக்குமான தொடர்பு மிகக்குறைவாக இருந்துள்ளது. இந்நிலையில் கொங்கிறீற் போடுவதற்கு அடித்தளத்துக்கு போடப்பட்ட பலகைகளை அகற்றுமாறு மேலதிகாரிகள் கூறியுள்ளனர். அதனடிப்படை யில் குறித்த தொழிலாளிக்கு அது எட்டாமையால் அந்தப் பலகையை தொங்கி அலவாங்கினால் தட்டியுள்ளார். அந்த நேரமே பலகையுடன் கொங்கிறீற் தூண் சரிந்து தொழிலாளியின் மேல் விழுந்துள்ளது. அவரது முதுகின் மேல் கொங்கிறீற் விழுந்ததனால் அவர் நசிந்து தலையிலும் காயமடைந்து அந்த இடத்திலேயே உயிரிழந்தார் என்று இறப்பு விசாரணை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (த–4)



## மண்டான் ஊடாக யாழ்ப்பாணம்

இ.போ.சவினால் பருத்தித்துறை–யாழ்ப்பாணம் (மண்டான் ஊடாக) 750 இலக்க பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சேவை பருத்தித்துறையில் இருந்து அதிகாலை 5 மணிக்கும், முற்பகல் 10.30 மணிக்கும் புறப்படும். இது குஞ்சர் கடை– மண்டான்சந்தி– வல்லை ஊடாக யாழ்ப்பாணம் வந்தடையும்.

இதேவேளை, காரைநகரிலிருந்து புறப்படும் பஸ்கள் பிரதி செவ்வாய்க்கிழமையும், வெள்ளிக்கிழமையும் காரைநகர் சிவன் கோயில் சென்று யாழ்ப் பாணம் சென்றடையும். அதே போல யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகர் நோக்கிப் புறப்படும் பஸ்கள் மேற்படி பாதைகள் ஊடாக சேவையில் ஈடுபடும். (த–14

# மத்திய நண்பர்கள் 2 பிரிவிலும் வெற்றி

யாழ்ப்பாணம், பெப்.25
பூநகரி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான ஆண்,பெண் இரு பாலாருக்குமான கபடித் தொடரின் இறுதியாட்டத்தில் இரு பிரிவிலும் மத்திய நண்பர்கள் அணி வெற்றி பெற்றுக் கிண்ணத்தை தனதாக்கியது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை பூநகரி 4ஆம் கட்டை அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டங்களில் முதலில் நடைபெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் மத்திய நண்பர்கள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பூநகரி அண்ணா விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் மத்திய நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி 37:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

தொடர்ந்து நடைபெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் மத்திய நண்பர்கள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பல்லவன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் மத்திய நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி 34:19 என்ற புள்ளிகளின் அடிப் படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது. (த-23,ரி)

# திருநகரை வீழ்த்திக் கிண்ணம் சுவீகரித்தது உருத்திரபுரம் வி.க.

யாழ்ப்பாணம்,பெப்.25
கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டக்கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்ட தொடரின் இறுதியாட்டத்தில் உருத்திபுரம் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்று கிண்ணத்தை சொந்தமாக்கியது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை உருத்திரபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திருநகர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. ஆட்டத்தின் முடிவில் இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாதமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் உருத்திபுரம் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(த-23,ரி)

# ஜொலிஸ்ரார், பல்கலை அணிகள் போராடி வெற்றி

யாழ்ப்பாணம், பெப் .25
யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்.மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி, யாழ்.பல்கலைக்கழக அணி ஆகியவை வெற்றி பெற்றன.

முதலில் நடைபெற்ற ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக் கழக அலுமினி அணி மோதிக் கொண்டன. இதில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 62:39 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

மின் ஒளியில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் யாழ்.பல்கலைக் கழக அணியை எதிர்த்து பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் யாழ். பல்கலைக்கழக அணி 65:63 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (த-23-ரி)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம்,பெப் .25
நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழகம் யாழ் மாவட்ட ரீதியில் நடத்தும் யாழ்ப்பாணம் வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட தொடரின் ஆட்டங்கள் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை பி.ப. 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வெற்றிலைக்கேணி சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23,ரி)

# கே.ஸி.ஸி.ஸி. அணியை வீழ்த்தியது பற்றீசியன்ஸ்

யாழ்ப்பாணம்,பெப்.25
யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் கூடைப் பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள்



யாழ்.மத்திய கல்லூரிக் கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெற்று வருகின்றன.

கடந்த சனிக்கிழமை நடை பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில்கே.ஸி. ஸி.ஸி. அணியை எதிர்த்து ஆடிய பற்றிசியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 58:46 என்ற புள்ளிகள் அடிப் படையில் வெற்றி பெற்றது.(த-23,ரி)

**Cook தேவை**

வவுனியாவில் பிரபல்யமான ரெஸ்ரோறன்ட் இற்கு சைனீஸ், இந்தியன் Cook தேவை. உணவு தங்குமிடத்துடன் நல்ல சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு : 024- 222 6262 / 077 - 886 6855 /077 - 703 2006
(56211)(5.3.7)

# அரசியல்வாதிகளுக்கு பின்னால் திரிபவர்களுக்கே அரச நியமனம்

## ரிப்கான் பதியுதீன் சாடல்

யாழ்ப்பாணம், பெப். 25
அரசியல்வாதிகளுக்குப் பின்னால் திரிபவர்களுக்கே, அரசியல்வாதிகள் முன்னுரிமையில் வேலை



வழங்குவார்கள். இது நூற்றுக்கு இருநூறு வீதம் உண்மை என்று தெரிவித்த, அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் சகோதரரும் வடக்கு மாகாணசபை உறுப்பினருமான ரிப்கான் பதியுதீன் கடந்த காலங்களில் நடந்து முடிந்த விடயத்தைப் பற்றி பேச வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்.

அத்துடன், தனது சகோதரர் யாரிடமாவது ஒரு ரூபா பணத்தை தன்னும் வாங்கிக் கொண்டு வேலை வாய்ப்புக் கொடுத்திருந்தால், அதனை நிரூபித்தால் மாகாண சபை உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்து விட்டுப் போவதாகவும் சவால் விடுத்தார்.

வடக்கு மாகாணசபையின் நேற்றைய அமர்வில், ஆளுங்கட்சி உறுப்பினர் ச.சுகிர்தனால் முன்வைக்கப்பட்ட பிரேரணை மீதான விவாதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் அரசியல்வாதிகளினால் முறையற்ற வகையில் நியமனங்கள் வழங்கப்பட்டன. அவர்கள் தமக்கு வேண்டியவர்களுக்கு நியமனங்களை வழங்கினர். அத்துடன் பணங்களைப் பெற்றும் நியமனங்களை வழங்கினார்கள். தியேட்டருக்குப் போனால் தான் வேலை கிடைக்கும் என்று படித்த- பட்டதாரிகளை அரசியல்வாதிகளுக்கு பின்னால் திரியச் செய்தார்கள். மேலும் தகுதி இல்லாதவர்களுக்கும் நியமனம் வழங்கப்பட்டது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்கள் குறிப்பிட்டனர்.

இதன் போது கருத்துத் தெரிவித்த ரிப்கான் பதியுதீன், அரசியல்வாதிகள் தமக்குப் பின்னால் திரிபவர்களுக்கே வேலைவாய்ப்பை வழங்குவார்கள். அது 200 சதவீதம் உண்மை. நீங்களும் அதைத்தான் செய்கின்றீர்கள். இவையெல்லாம் நடந்து முடிந்த விடயம். எனது சகோதரர் (அமைச்சர் ரிஷாத் பதியுதீன்) நியமனம் வழங்கும் போது தகுதியில்லாத யாருக்கும் நியமனத்தை வழங்கவில்லை. அத்துடன் தகுதியானவர்களுக்கும், பணம் பெற்று நியமனத்தைவழங்கவில்லை என்று அவர் குறிப்பிட்டார். (த-5)

# மாணவனை குதறியது நாய்

கிளிநொச்சி, பெப். 25
பாடசாலையின் வளாகத்தில் கட்டாக்காலியாக நின்ற நாய் பாடசாலை மணவனைக் கடித்து குதறியதில் மாணவன் பலத்த காயங்களுக்கு உள்ளாகி கிளிநொச்சி வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று இடம் பெற்றுள்ளது.

கிளிநொச்சி- பரந்தன் பகுதியை சேர்ந்த, பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் 7ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவனான பிரதீபன் பகலவன் என்பவரே இவ்வாறு காயங்களுக்கு உள்ளானார்.

இவர் நேற்று பாடசாலை அதிபரின் அலுவலகம் முன்பாக உள்ள நீர்க்குழாயில் தண்ணீர் குடித்து விட்டுத் திரும்பும்வேளை எதிரே வந்த மாணவனுடன் மோதுண்டு நிலத்தில் விழுந்துள்ளார். அவ்வேளை அங்கு நின்று கொண்டிருந்த நாய் அந்த மாணவனைப் பாய்ந்து கடித்துக் குதறியதில் வலது கையில் பலத்த காயங்களுக்கு உள்ளானார்.இவர்நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் கிளிநொச்சி பொது வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு, சிகிச்சைகளின் பின்னர் மாலை வீடு திரும்பினார். (த-21)

**பயிற்சியுடன் தொழில்வாய்ப்பு**
**Heavy Machinery Training & Job Opportunities**

RMY




•EXCAVATOR OPERATOR •FORK LIFT OPERATOR
•WHEEL LOADER OPERATOR •BACKHOE LOADER OPERATOR

முதலாவது தடவையாக வடகிழக்கு இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் கல்வியறிவு இல்லாவிட்டாலும பயிற்சியளித்து பயிற்சியின் ஆள்சேர்த்துக்கொள்ளல் பின்னர் 50000.00 வருமானத்துக்கு தொழில் தேடி வாய்ப்பளிக்கப்படும்.

குறிப்பு: இம் மாதம் 27ஆம் திகதி (27.02.2015) வெள்ளிக் கிழமை இலவசப் பயிற்சி நடத்தப்படவுள்ளது. ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றலாம். இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்பவர் களுக்கு விஷேட சலுகை வழங்கப்படும்.

ஆரம்பம் மார்ச் மாதம் முதலாம் திகதி 2015

மேலதிகவிபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்:
RMY இயந்திர உபகரண பயிற்சிப் பாடசாலை, தலைமன்னார் ரோட், பேசாலை
RMY MACHINERY TRAINING SCHOOL
THALAIMANNAR ROAD, PESALAI, MANNAR
Tel: 023 32 38 344 (office), 0777770638/0777182974 (mobile).
E'mail:-lalithtraingschool@gmail.com

**பணிநிலை வேண்டுகை**
முகாமையாளர் தேவை

யாழ் A9 றோட், கச்சேரி வீதியில் இயங்கிவரும் Bastian Hotel இற்கு அனுபவம் மிக்க முகாமையாளர் தேவை

| | |
|---|---|
| வயதெல்லை | 25- 40 வரை |
| கல்வித்தகைமை | Hotel Management சார்ந்த கற்கைநெறி |
| அனுபவம் | 2 வருட Hotel சார்ந்த அனுபவம் |
| நேர்முகத் தேர்வு | 26, 27, 28 ஆம் திகதிகளில் காலை 9.00 - 11.00 வரை நடைபெறும் |

தகுதியானவர்கள் நேரில் வரவும்
தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்



Bastian HOTEL
Bastian Hotel,
37, Kandy Road, Jaffna.
TP: 021 222 2605

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

புதன் பொய்கை

உதயன்

25 பெப்ரவரி 2015 புதன்கிழமை

நாம் எந்தச் செயல்களைச் செய்யலாம் என்று முடிவு செய்வோம். நாம் செய்யும் செயல்கள் நம்மை இத்தகையவர் என்று முடிவு செய்யும்.

—வெர்ன்ஸ்.

ராஜராஜன்



# மனிதர்களின் நிம்மதியைத் தீர்மானிக்கும் மன அமைதி

அமைதியை விரும்பாதவர்கள் எவருமில்லை. ஆனால் அனைவருக்கும் அமைதி சுலபமாகக் கிடைப்பதில்லை. மன அமைதி குன்றிவிட்டால், எமது உடலின் இயக்கங்கள் பாதிக்கப்பட்டு விடுகின்றன.

மனம் அமைதியிழந்து கவலைகளால் சூழப்பட்டு, கடுமையான உளைச்சலுடன் காணப்படும்போது வேலைகளில் தாமதம், வினைத்திறன் இல்லாமை போன்ற குறைபாடுகள் ஏற்படுகின்றன. நாம் அமைதியின்றிக் காணப்படுகின்றோம் என்பதை எமது முகம் காட்டிவிடும்.

ஓர் ஊரிலே நதி ஒன்று அமைதியாக ஓடிக்கொண்டிருக்கின்றது. அதன் இரண்டு கரைகளிலும் நிழல் பரப்பியவாறு பெரு விருட்சங்கள் காணப்படுகின்றன.

அந்த நதியையும் அதன் சுற்றுப்புறத்தையும் பார்க்கும்போது, மனதில் இனம் புரியாததொரு பரவச உணர்வு ஏற்பட்டு விடுகின்றது. அங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிடலாமா என மனம் ஏங்குகின்றது.

அந்த நதியில் பயணம் செய்வது கூட ஒரு சுக அனுபவமாக இருக்கும். ஆனால் மழை காலங்களில் நதியில் வெள்ளம் சேரும்போது அதன் போக்கே மாறிவிடுகின்றது.

அலைகள் எழுவதன் காரணமாக அமைதியாகச் சென்று கொண்டிருக்கும் அந்த ஓடம், நிலை தடுமாறிக் கவிழ்ந்து விடுவதும் உண்டு. எமது மனதிலும் இவ்வாறான குழப்பநிலை ஏற்படுவதும் உண்டு.

அமைதி கிடைக்க வேண்டுமென்றால் தனிமையான சூழ்நிலைதான் அதற்கு உகந்தது. இதனால்தான் இந்த உலகில் தோன்றிய மகான்கள் தனிமையை நாடிச் சென்றார்கள். ஏகாந்தமான இமயமலைச் சாரலில் பல வருடங்களாகத் தவமிருந்த ரிஷிகள் தொடர்பான வரலாறுகளும் நிறையவே காணப்படுகின்றன.

சில வேளைகளில் எமது மனம் அமைதியை இழந்துவிடும். அப்போது எதைக் கண்டாலும் வெறுப்பு ஏற்படும். யாரைக் கண்டாலும் கோபம் ஏற்படும். எவருடனும் கதைப்பதற்கு மனம் விரும்பாது. எங்காவது அமைதியான இடத்துக்குச் செல்வதற்கு மனம் ஏங்கும். அவ்வாறான இடங்கள் எமது ஊர்களிலேயே நிறைய உள்ளன. வயல் நிலங்களுக்கு நடுவே அமைந்திருக்கும் ஆலயங்கள் சில எமது கண்களில் தென்படுகின்றன. அவற்றைச் சூழ அரச மரங்களும் ஆலமரங்களும் கிளைகளைப் பரப்பி நிழல் தருகின்றன.

அவற்றுக்குப் போட்டியாக மருத மரங்களும் வேப்ப மரங்களும் ஓங்கி வளர்ந்து காணப்படுகின்றன. குளுகுளுவென வீசுகின்ற தென்றல் காற்று உடலை வருடிச் செல்லும்போது ஓர் இதமான சுக அனுபவம் எமக்குக் கிடைக்கின்றது. அங்கு ஏதாவதொரு மூலையில் படுத்துக் கண்ணயர்ந்து எழும்பும்போது, எம்முள் ஏதோவொரு மாற்றம் தெரிய ஆரம்பிக்கும். மனதை இறுக்கி அழுத்தியிருந்த பாரம் குறைந்து மனம் லேசாக மாறியிருக்கும். அப்போது மனதில் அமைதி தென்பட ஆரம்பிக்கும். இதற்கு நாம் எந்த விலையும் செலுத்தவில்லை. அமைதியும் இதமும் கலந்த அந்தச் சூழலே எம்மை அவ்விதம் மாற்றிவிட்டது.

சில நல்லவர்களின் வார்த்தைகள் கூட எம்மை ஆற்றுகைப்படுத்தி அமைதியை ஏற்படுத்துவதற்கு உதவக் கூடியவை. எமது மனதில் ஏற்படும் காயங்களுக்கு அவர்களின் இதமான வார்த்தைகள் மருந்தாக அமைந்து விடுகின்றன. தீயவர்களின் வார்த்தைகள் அதற்கு எதிர்மாறான விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றன.

இன்று உலகம் அமைதிக்காக ஏங்கி நிற்கின்றது. தீவிரவாதச் செயல்கள் முழு உலகின் அமைதியையும் சீரழித்துவிட்டன. எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற அச்சத்தில் மக்கள் உறைந்து கிடக்கின்றனர்.

தீவிரவாதத்தை ஒழிப்பதற்காகவும் போர்த் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் செலவழிக்கப்படும் பெருந்தொகையான பணத்தைக் கொண்டு, வறுமையில் வாடுகின்ற மக்களின் துயர் துடைக்க முடியும். பின் தங்கிய கிராமங்களை அபிவிருத்தி செய்ய முடியும். சாலை வசதிகளை ஏற்படுத்த முடியும். இவ்வாறு பல விடயங்களைக் கூறமுடியும்.

ஆகவே எமது மனதில் மட்டுமல்ல உலகம் முழுவதும் அமைதி நிலவுமானால், சொர்க்கம் என்பதை நாம் நினைத்துப்பார்க்க வேண்டிய தேவை எழாது. நாம் வாழுகின்ற பூமியே சொர்க்கலோகமாக மாறிவிடும்.

ஆகவே சொர்க்கமும் நரகமும் எமது மனங்களைப் பொறுத்துத்தான் அமைகின்றன. மேலும் மனஅமைதி ஒன்றினால் தான் மனிதர்களின் வாழ்வு செம்மையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

மனதை இறுக்கி அழுத்தியிருந்த பாரம் குறைந்து மனம் லேசாக மாறியிருக்கும். அப்போது மனதில் அமைதி தென்பட ஆரம்பிக்கும். இதற்கு நாம் எந்த விலையும் செலுத்தவில்லை. அமைதியும் இதமும் கலந்த அந்தச் சூழலே எம்மை அவ்விதம் மாற்றிவிட்டது.





# பென்குயின் பற்றித் தெரியுமா?

பறக்க முடியாத பறவை இனம் பென்குயின். அவை தங்கள் சிறகுகளைத் துடுப்புகளாகத் தகவமைத்துக் கொண்டவை. நீரில் நீந்துவதற்குத் தமது துடுப்புகளைப் பயன்படுத்தும். பூமியின் தென் அரைக்கோளப் பகுதியிலும், வடக்கே கலப்பகோஸ் தீவுகளிலும் பென்குயின்கள் அதிகமாக வாழ்கின்றன. உணவுக்காக பூமத் திய ரேகையையும் கடந்து செல்வதுண்டு. நியூ சிலாந்து, ஆஸ்திரேலியா, சிலி, ஆர்ஜென்ரீனா மற்றும் தென்ஆபிரிக்காவில் பெருமளவில் காணப்படுகின்றன. பென்குயின்களின் முக்கிய உணவு மீன்கள். பென்குயின் வகைகளில் மிகப் பெரியது சக்கரவர்த்தி பெங்குயின் எனப்படும் 'எம்பரர் பெங்குயின்'. ஒரு மீற்றருக்கும் அதிகமான உயரமும் 35 கிலோகிராம் எடையும் உள்ளவை.

பென்குயின்களில் சிறியது, நீலப் பெங்குயின். இதன் உயரம் 40 சென்டிமீற்றர். ஒரு கிலோகிராம் எடை. கடல் நீரைக் குடித்து பெங்குயின்களால் வாழமுடியும். வாழ்நாளின் பாதியை நீரிலும், பாதியை நிலத்திலும் செலவழிக்கின்றன.

பொதுவாகப் பெரிய பென்குயின்கள், வெப்பத்தை உடலில் தக்கவைக்கும் திறனைப் பெற்றிருக்கின்றன. அதனால் அதிக குளிர்ப் பகுதிகளிலும் அவற்றால் வாழமுடியும். சிறிய பென்குயின்களால் அதிக குளிர் நிலவும் பகுதிகளில் வாழமுடியாது.

நியூசிலாந்தைச் சேர்ந்த மஞ்சள் கண் பென்குயின்கள் அரிதாகி வருகின்றன. தற்போது அவற் றின் எண்ணிக்கை சுமார் 4000 மட்டுமே இருக்கும் என கணிக் கப்பட்டுள்ளது.

பென்குயினின் கறுப்பு முதுகும், வெள்ளை வயிறும் நீந்தும்போது குழப்பத்தை ஏற்படுத்தும். அவை நீந்தும் போது, மேலிருந்து பார்த்தால் கண்டுபிடிக்க முடியாது. தண்ணீ ருக்குக் கீழே இருந்து, சூரிய ஒளி பிரதிபலித்து அதன் வெள்ளை நிற வயிற்றை மறைத்து விடும். பென்குயின்களுக்கு அன்டார்டிகா கண்டத்தில் ஆபத்துக் கிடையாது. ஏனெனில் அங்கு பென்குயின்களை வேட்டையாடும் விலங்குகள் கிடையா.



# 'அ' இல் தொடங்கும் பழமொழிகள்

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
அகல இருந்தால் நல்ல உறவு, கிட்டவந்தால் முட்டப் பகை.
அகல உழுகிறதை விட ஆழ உழு.
அகல் வட்டம் பகல் மழை.
அசைந்து தின்கிறது யானை, அசையாமல் தின்கிறது வீடு.
அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்.
அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது
அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?
அடக்கமே பெண்ணுக்கு அழகு.
அடக்கம் உடையார் அறிஞர், அடங்காதவர் கல்லார்.
அடாது செய்தவன் படாது படுவான்
அடி நாக்கிலே நஞ்சும் நுனி நாக்கில் அமுதமும்
அடுத்த வீட்டுக்காரனுக்கு அதிகாரம் வந்தால் அண்டை வீட்டுக்காரனுக்கு இரைச்சல் இலாபம்
அணில் கொம்பிலும், ஆமை கிணற்றிலும்.
அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வாராது.
அத்திப் பழத்தைப் பிட்டுப்பார்த்தால் அத்தனையும் புழு.
அந்தி மழை அழுதாலும் விடாது.
அன்னம் இட்டவர் வீட்டில் கன்னம் இடலாமா?
அன்னைக்கு உதவாதவன் யாருக்கும் ஆகான்.
அன்பு இருந்தால் ஆகாததும் ஆகும்.
அன்று எழுதியவன் அழித்து எழுதுவானா?
அன்று குடிக்கத் தண்ணீர் இல்லை ஆனைமேல் அம்பாரி வேணுமாம்.
அப்பன் அருமை மாண்டால் தெரியும்.
அப்பியாச வித்தைக்கு அழிவில்லை
அயலூரானுக்கு ஆற்றோரம் பயம், உள்ளூரானுக்கு மரத்தடியில் பயம்.

# முட்டாளுக்கு புத்தி சொல்வது வீண்!

ஒரு காட்டில் பல குரங்குகள் கூட்டமாக வசித்து வந்தன. குளிர்காலத்தில் ஒருநாள் மிகவும் கடுமையான குளிராக இருந்தது. குரங்குகளால் குளிரைத் தாங்க முடியவில்லை. கொஞ்சம் நெருப்புக் கிடைத்தால் சருகுகளைப் போட்டுத் தீமூட்டிக் குளிர் காயலாம் என்று ஒரு வயது போன குரங்கு கூறியது. நெருப்புக்கு எங்கே போவது என்று குரங்குகள் யோசித்துக் கொண்டிருந்த போது ஒரு மின்மினிப் பூச்சி பளிச் பளிச் சென்று மின்னியவாறு பறந்து சென்று கொண்டிருந்தது. அதைக் கண்ட ஒரு குரங்கு அதோ நெருப்புப் போகிறது என்று கூறியது. மற்றொரு குரங்கு அந்த மின்மினிப் பூச்சியைப் பிடித்து வந்து தரையில் போட்டது. மற்றக் குரங்குகள் சுற்றிலும் கிடந்த குப்பை கூளங்களைச் சேகரித்து வந்து மின்மினிப் பூச்சிமீது போட்டன. பிறகு குரங்குகள் நெருப்பு கொழுந்து விட்டு எரியப் போகிறது என எதிர்பார்த்து சூழ்ந்து அமர்ந்து கொண்டன. ஆனால் தீ எரியும் வழியைக் காணோம் பின்னர் குரங்குகள் வாயினால் குப்பையை ஊதி நெருப்பை எரிய விடும் முயற்சியில் ஈடுபட்டன. மரத்தில் அமர்ந்து குரங்குகளின் கோமாளித் தனத்தைக் கவனித்துக் கொண்டிருந்த ஒரு பறவை கலகலவென்று சிரித்தபடி மரத்தை விட்டிறங்கிக் கீழே வந்து அமர்ந்தது. பின்னர் குரங்குகளை நோக்கி "நண்பர்களே, மின்மினிப் பூச்சியை நெருப்பு என்று எண்ணிக் கொண்டு தீ மூட்ட வீண் பிரயாசை எடுக்கிறீர்கள். நீங்கள் என்னதான் வாயால் ஊதினாலும் மின்மினிப் பூச்சியிடமிருந்து நெருப்பு வரவே வராது. வீண் வேலையை விட்டுவிடுங்கள்" என்று புத்திமதி கூறிற்று. "உனக்கு ஒன்றும் தெரியாது. வாயை மூடிக்கொண்டு உன் வேலையைப் பார்" என்று கூறிவிட்டு குரங்குகள் மறுபடியும் குப்பையை வாயால் ஊதித் தீ உண்டாக்க முயற்சி செய்தன.

பறவை, குரங்குகளின் முட்டாள் தனத்தை எண்ணிப் பரிதாபப்பட்டு திரும்பத் திரும்ப குரங்குகளுக்கு புத்திமதி கூறிக் கொண்டிருந்தது. இதனால் கோபமுற்ற குரங்குகள் பறவை மீது பாய்ந்து அதனைப் பிடித்து தரையில் மோதிக் கொன்று விட்டன. இதிலிருந்து என்ன புரிகிறது? முட்டாளுக்கு புத்தி சொன்னால் வினை நமக்குத்தான்.






# கூடிவாழ்வோம்

*பறவை எல்லாம் பாடுச்சு*
*பக்கம் வந்து தேடுச்சு*
*கறவை மாடு சிரிச்சுச்சு*
*கறந்து பாலும் தந்துச்சு..!*
*குடிச்சு பறவை மகிழ்ந்துச்சு*
*கூட்டம் சேர கத்துச்சு*
*பசிக்கு இங்கே வந்திட*
*பாடிப் பாடி அழைச்சிச்சு..!*
*எங்கிருக்கும் பறவையும்*
*எகிறிப் பறந்து வந்துச்சு*
*இனத்தின் குரலைக் கேட்டுச்சு*
*இறங்கி வந்து பார்த்துச்சு..!*

*கோமாதா நமக்கு எல்லாம்*
*குடிக்க பாலும் தந்துச்சு*
*கூடி நாமும் கூட்டம் போட்டு*
*'அன்னை' யென்று சொல்லுச்சு..!*
*பாதுகாக்கும் தாயாக*
*பட்டி தொட்டி சொல்லுது*
*சாதுவாக இருந்த அதுவும்*
*சினந்து காடு வெல்லுது..!*
*பறவைக் கூட்டம் நாமெல்லாம்*
*போற்றி அதை வணங்குவோம்*
*சிறகாய் நாமும் இருந்துமே*
*பறக்க வைத்து மகிழுவோம்..!*





## திருமறைக் கலாமன்றத்தில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சி

திருமறைக்கலாமன்றத்தின் ஓவியக்கூடத்தின் ஏற்பாட்டில் வளர்ந்து வரும் இளம் பெண் ஓவியர் சர்மிலா சந்திரதாசனின் ஓவியக் கண்காட்சி கடந்த சனிக்கிழமை யாழ். நக்கா வீதியில் உள்ள திருமறைக்கலாமன்றத்தின் ஓவியக்கூடத்தில் நடைபெற்றது. நிகழ்வுக்குப் பிரதம விருத்தினராகக் கலந்து கொண்ட ஈழத்தின் மூத்த ஓவியர் ஆசை இராசையாவால் சம்பிர தாயமுறைப்படி நாடாவெட்டி கண்காட்சி திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய கல்வி (அபிவிருத்தி) பிரதி கல்விப் பணிப்பாளர் சிறிகுமரன் கலந்து கொண்டார். மற்றும் திருமறைக் கலாமன்றத்தின் இயக்குநர் மரியசேவியர் அடிகளார், திருமறைக்கலாமன்ற உறுப்பினர்கள், யாழ். திருக்குடும்ப கன்னியர் மட மாணவிகள், நலன் விரும்பிகள் என பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (வ-23)






## காட்டில் வெளியிடப்பட்ட 'ஆஷா நாயும் அவளும்' நூல்

'ஆஷா நாயும் அவளும்' என்ற நூல் வெளியீடு, முல்லைத்தீவு விஸ்வமடு இளங்கோபுர காட்டுப் பகுதியில் வைத்து கற்சிலைமடு அரசினர்தமிழ்கலவன்பாடசாலை அதிபர் தலைமையில் கடந்த 19 ஆம் திகதி இடம் பெற்றுள்ளது.

இந்த நூல், வள்ளுவர்புரம் யோ. புரட்சியால் எழுதப்பட்ட அவரது 3 ஆவது நூலாக வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. இதனை ஐ.மு.ஆ நிறுவனத்தின் கிளிநொச்சி பணிப்பாளர் வேதநாயகன் வெளியிட்டு வைக்க, வட மாகாண சபை உறுப்பினரும் மருத்துவ கலாநிதியுமான சிவமோகன் பெற்றுக்கொண்டுள்ளார்.

புரட்சியின் எழுத்தாக்கத்தில் 'இடம்பெயர்ந்த ஊரில் இடம் பெயராத நாய்' என்ற நூல் இளங்கோபுரத்தில் முதலாவது நூலாகவும் 'எதிர் வீட்டு நாயும் என் ஏழை நாயும்' என்ற நூல் இரண்டாவதாகவும் வெளியிடப்பட்டது. இவரது மூன்றாவது நூல் வெளியீட்டு நிகழ்வில் பெருந்திரளான அறிஞர்களும் கல்விமான்களும் ஊடகவியலாளர்களும் படைப்பாளிகளும் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.



## உதயன் புத்தாண்டு - 2015 மலர் மேய்ச்சல்:




# 'போஷாக்குகள் விளைந்துள்ள ஒரு வயல்!'

நவாலியூர் கவிராயர்

தைப் பொங்கல் திருநாளைத் தமிழ் நாட்டில் தமிழர் புத்தாண்டாகக் கொண்டாட முனைவதன் எதிரொலியாக ஈழத்திலும், மெல்ல மெல்ல அதனைப் புத்தாண்டாக அங்கீகரிக்கும் முயற்சியாக 'உதயன்' நாளிதழ் பொங்கல் தினத்தன்று (15.1.2015) நூறு பக்கங்களில் நூறு விடயதானங்களை நூறு ரூபா விலையில் பதிப்பித்து விற்பனைக்கு விட்டு வெற்றியும் கண்டுள்ளது.

ஜனவரி 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி அடைந்த இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதிய ஜனநாயகக் கட்சிசார்பில்வெளியிட்ட விஞ்ஞாபனத்தில் நூறுநாள்கள் வேலைத்திட்டங்களையும் தெரிவித்து இருந்தார்.

இந்நூறும் புத்தாண்டு மலரிலும் கடைப்பிடிக்கப்பட்டுள்ளதும்; அவதானிக்கத்தக்கது. அந்நூறும் இந்நூறும் வெற்றி பெற்றுள்ளன. இவ்விதம் பத்திரிகைத் தாளில் முன்பாக செய்திப் பத்திரிகைகள் ஐம்பதுக்கும் அதிக பக்கங்களில் மலர்கள் பிரசுரித்திருக்கின்றனவா என்ற சிந்தனைச் சக்கரத்தைப் பின்நோக்கி ஓட விட்டேன்.

அதனில் 1969ஆம் வருடம் 'தினகரன்' நாளிதழ் 'நாடக விழா மலர்' ஒன்றை வெளியிட்டிருந்தது. அது இதன் அரைப் பக்க அளவில் 69பக்கங்களைக் கொண்டிருந்தது. அதன் பின்பாக வார இதழாக வெளிவந்த 'சுதந்திரன்' 1970ஆம் ஆண்டு இதே அளவில் 70 பக்கங்களில் ஆண்டு மலரொன்றை வெளியிட்டதாகவும் ஞாபகம்!

'உதயன்' நாளிதழ் 5 ஆண்டுகளுக்கு முன் 2010ஆம் அண்டில் 'வெள்ளிவிழாமலர்' இதனுடைய அரைப் பக்கம் அ்ளவில் நூல் உருவில் 241 பக்கங்களில் முந்நூறு ரூபா விலையில் விட்டிருந்ததும் சுட்டிக்காட்டத் தக்கதே! இவற்றை விடவும் கடந்த முப்பது ஆண்டுகளில் 'உதயன்' நாளிதழ் தைப் பொங்கல், சித்திரை வருடம், தீபாவளி மற்றும் கிறிஸ்மஸ் புதுவருட மலர்களை வெளியிட்டுள்ளதுடன்; நல்லூர் முருகன் ஆலயம் போன்ற வடபகுதிக் கோயில்களின் கும்பாபிஷேக, தேர்த்திருவிழா, தேர்வெள்ளோட்ட விழா போன்ற இன்னோரன்ன மலர்களை வெளியிட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வேளை 2015 ஆம் ஆண்டு புத்தாண்டு மலரை நோக்கினால், நூறு தலைப்புகளில் நூற்றுக்கும் அதிகமான விடயங்களை நூறு ரூபா விலையில் அள்ளித் தந்துள்ளதைக் கண்டு மலைத்துப் போகலாம்.

20 கட்டுரைகள், 10சிறுகதைகள் இவற்றுள் 2 தமிழகப் படைப்புகள். 13 கவிதைகள், 02 நெடுங்கதைகள், 2 நேர்காணல்கள் ,17 பிற படைப்புகள், 7 துணுக்குகள், புத்தாண்டுப் பலன்கள், வீடுகட்டமுன், மச்சங்கள் கூறும் அதிஷ்டம், செவ்வாய் தோஷம் இத்தியாதி... இத்தியாதி...

இனி மேலோட்டமாக விடயங்களை ஆராயப் புகுந்தால், முதலில் என்னைக் கவர்ந்த கட்டுரை 'கலைஞர்களுக்கான சுற்றுலா மையம் –நல்லூர்' என்பதாகும் என தே.தேவானந் எழுதியுள்ளார். ஈழத்துக் கலைகள் புதிய எழுச்சியை அவாவி நிற்கின்றன என்று ஆரம்பிக்கும் விடயம், அதற்கான முயற்சிகளுக்காக ஒன்றிணைவோம் என்ற அழைப்புடன் கூடிய முடிப்பு வரை எம்மை கலை, கலாசார வழிகளிலும் பிற சக்திகள் சுரண்டிக்கொண்டிருக்கின்றமையை அவர் கட்டுரையில் வெளிச்சம் போட்டுக்காட்டுகையில் மண், கலைகள் என்பவற்றில் உண்மைப் பற்றுக் கொண்டவர்களின் இரத்தம் சூடேறுவதைத் தடுக்க முடியாது.

'நமக்கென்றோர் நலியாக் கலையுடையோம்' என்பதனை எங்களில் எத்தனை பேர்கள் அறிந்திருக்கின்றனர்;அறியவும்முற்பட்டிருக்கின்றனர்? அப்படி என்றால் தானே எமது கலைகளை வளர்க்கவும் கட்டிக் காக்கவும் முற்படுவர்.

மில்லியன் கணக்கில் பணம் செலவழித்து அந்நியக் கலைஞர்களை அழைத்து வந்து வாழ வைக்கும் நம்மவர், எந்தக் காலத்தில் விழித்துச் செயற்படப் போகிறார்கள்? அதற்கான வழிவகை, உத்தி, திட்டங்களும் கட்டுரை ஆசிரியரால் முன்வைக்கப்பட்டுள்ளன. மிக நீண்ட இடைவெளிக்குப் பின்பாக நல்லதொரு ஆக்கத்தைப் படிக்கச் செலவிட்ட நேரங்கள் பொன்னானவை.

எழுத்தாளர் தெணியானின்'வாழ்வும்வழிபாடும்' பற்றிப் பேசும் கட்டுரை, பொங்கல் தமிழ் மக்களுக்கு மட்டுமான கலாசாரமா? விவசாயம் செய்யும் குழுவினருக்கு உரித்தான திருநாளா என்றும் கேள்விகளை முன்வைத்துச் செல்கிறது.

உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்யும்கூட்டத்தினருக்குரியதுஎன்றும்சொல்லிஉள்ளார். சோற்றை ஆகாரமாகக் கொள்ளும் உலக மாந்தர் அனைவரும் பொங்கிச் சாப்பிடுபவர்கள்; ஆனாலும் தமிழன் மட்டுமே பொங்கலை விழாவாகக் கொண்டாடி வருகிறானென்பதும் குறிப்பிடத்தக்கது அல்லவா? நாச்சியார் செல்வநாயகம் 'நன்றி உணர்வுப் பெருநாள்' பற்றிக் கூறுகையில் வழிபாடு நன்றி உணர்வொன்றாலே ஏற்படுவதாகவும் நன்றி உணர்வானது அறிவின் முதிர்ச்சியால் ஏற்படுவதாகவும் சுட்டுவது சிந்திக்க வைத்துள்ளது.

சமையம் சமைக்கப் பட்டது; முறையாக ஆக்கப்பட்டதென்பது பொருள். மனிதன் சமய வாழ்வை மேற்கொள்ளின் விலங்கு நிலை விலகி மனிதனாகவும், மனிதத்தில் இருந்து தெய்வமாகவும் உயருகிறானென வழிப்படுத்தி உள்ளதும் புதிய பார்வை அல்லவா? நெல்லியடி சி.நற்குணலிங்கம் பெயருக்கேற்ற பொருளையே 'விழிப்பு நிலை' என்னும் சிறுகட்டுரையில் ஆராய்ந்துள்ளார். குழந்தை வளர்ப்புத் தனிக்கலை. சிலையை எவ்விதம் சிற்பி பார்த்துப் பார்த்துச் சிறுகச் சிறுகச் செதுக்குகிறானோ அவ்விதம் சிறுபராயத்திலிருந்தே குழந்தைகளை வளர்த்து வரவேண்டும் என்கிறார்.

பெற்றோர் தம் எண்ணங்களைப் பிள்ளைகளில் சுமத்தி மருத்துவ்ராக, பொறியியலாளராக, கணக்காளராக ஆக்குவதற்கு முயற்சிக்கின்றார்களே அன்றி சராசரி நல்ல மனிதனாக்க முயல்வதில்லை என்று அவர் சாடுவது நியாயமாக உள்ளது.

'பாலஸ்தீனம்' பற்றிய கட்டுரை உலகளாவிய மட்டத்தில் இனங்களுக்கூடே வளர்ந்து கொண்டிருக்கும் உணர்வைச் சுட்டுவது. நமது இனப் பிரச்சினையையும் அதனால் தமிழ் மக்கள் கொடுத்த அதிக விலையையும் நினைவூட்டுகிறது. இஸ்ரேல்,பாலஸ்தீனம் என்றில்லாமல்மனிதரிடையேதன்நிலைஉணரும் வரையில் மனித அழிவுகளும், மக்கள் அந்தரித்த வாழ்வைத் தொடர்வதும் நீடிக்கும். மொழிகளின் வளர்ச்சி தோற்றம் பற்றி விவரிக்கும் ஐ.தவச்செல்வனின் 'இனிக்கற்கத் தலைப்படும் மொழி ஆங்கிலம் என்று கட்டுரையை நிறைவு செய்கிறார். அறிவைக் கொண்டு உருவாக்கப்பட்ட மொழிக்கு அறிவு இல்லை. மொழி வழியாக எவரும் சிந்திப்பதில்லை என்னும் கருத்துக்களைக் கட்டுரை உரைத்துள்ளது.

சு.குணேஸ்வரனின் 'வரலாற்று சுவடுகளில் இருந்து தொண்டமானாறு' கட்டுரை வல்லியாறு எவ்விதம் தொண்டமானாறானது என்னும் ஆய்வில் பல்வேறு மன்னராட்சி, ஆங்கிலேயர் வருகை என்பனவும் சித்திரிக்கப்பட்டுள்ளன. வரலாற்றுப் புதினங்களை அறிவதில்இருக்கும்ஆர்வம்வரலாறுகளைக்கூறும் கட்டுரைகளை வாசிப்பதிலும் ஏற்படுகிறது.

(தொடரும்)

# சுட்டிகளின் பதற்றத்தை எப்படிப் போக்கலாம்?

ரஜி



இன்றைய குழந்தைகள் அதிகமாகவே பேசுகின்றனர். அது சில நேரங்களில் வயதுக்கு மீறிய பேச்சாகவும் கூட இருக்கிறது. விடயங்களைத் தெரிந்து கொள்வது, தகவல் தொழில்நுட்ப சாதனங்களில் புகுந்து விளையாடுவது என எல்லாவற்றிலும் அதிவேகம் காட்டுகின்றனர். ஓரிடத்தில் 10 நிமிடம் கூட சேர்ந்தாற்போல் அவர்களால் அமர முடிவதில்லை. விளையாடுவதற்கு நேரம் கொடுத்தால் அரை மணி நேரத்துக்குள் 30 விளையாட்டுகள் வரை முயற்சித்துப் பார்க்கின்றனர். ஒரு விடயத்தில் அவர்களால் அதிக நேரம் நிலைத்திருக்க முடிவதில்லை. அதேபோல் தான் எதிர்பாத்த ஒரு விடயம் நடக்காமல் போனால் என்பதைப் பற்றி அவர்கள் யோசிப்பது கூட இல்லை. சின்னச் சின்ன விடயத்துக்கும் பதற்றம். எகிறி அழுது, ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். இவர்களை எப்படிச் சமாளிப்பது என்று தெரியாமல் விழிபிதுங்கும் பெற்றோர் இந்த விடயத்தை யதார்த்தமாக எதிர்கொண்டு சமாளிக்கலாம் என்கின்றனர் உளவியல் நிபுணர்கள். மிதுமி மிகவும் சுறுசுறுப்பானவள். அவள் தனது பாட்டியின் மீது பற்றுக் கொண்டவள்.



பாட்டி தனது பேர்த்திக்கு மிதுமி என்று பெயர் சூட்டினாள். மழலை பேசத் தொடங்கிய போதே, தனக்கு பாட்டியிடம் கிடைத்த கதைகளை மிதுமி தனது கற்பனைக்கு மாற்றி புதுக் கதைகளாக வலம் வரச்செய்தாள். எட்டு வைத்து நடக்கத் தொடங்கிய வயதில் நடனத்திலும் வெளுத்துக் கட்டினாள். கிறுக்கக் கிறுக்க ஓவியங்கள் கால் முளைத்து கதைக் காடுகளுக்குள் இடம் பெயர்ந்தன. கடும்வேலைப்பளுவுடைய பெற்றோரின் மகளான மிதுமி பாட்டியின் அரவணைப்பில் வளரத் தொடங்கினாள். இரவு தூங்குவதற்கு முன் தாய் பார்வதி கதைகள் படித்துக் காட்டுவாள்.

மழையில் நனைந்து, வெயிலில் நடந்து அவளது தந்தை சிவா உலகின் யதார்த்த அழகுகளை அறிமுகம் செய்தார். தன்னைச் சுற்றி இவ்வளவு நேர்மறையான விடயங்கள் இருந்தும் மிதுமிக்கு போதவில்லை. அவள் இன்னும் இன்னும் என்று எதிர்பார்த்தாள். விழித்திருக்கும் நேரம் எல்லாம் விளையாட்டு. பாடசாலை சென்ற பின்னரும் வகுப்பறையில் மட்டும் தான் படிப்பு. வீட்டுக்கு வந்து விட்டால் விளையாட்டு. அவள் நினைத்தது நடக்காவிட்டால் அவ்வளவு தான் வீட்டில் ஒரு போர்க்களமே நிகழும். யாருக்கும் அடங்காத காட்டு மரம் போல வளரத் தொடங்கினாள். மற்றவர்களிடம் காட்ட வேண்டிய பணிவு அவளுக்கு துளியும் வரவில்லை.

எந்த ஒரு விடயத்திலும் தொடர்ச்சியாக அவளால் நிலைத்திருக்கமுடியவில்லை. அதிக திறமைகள் இருந்தும் போட்டிகளில் கலந்து கொள்வதைத் தவிர்த்தாள். தோல்வியின் மீதான பயம் அவளை போட்டி களில் இருந்து துரத்தியது. வளர வளர மிது மியை வதைத்தது. பெற்றோர் அவளுக்கு அறி வுரை கூறி மாற்றுவதற்கு பதிலாக அவளது சூழலை மாற்றினார்கள். நிறைய குழந்தைகளுடன் கலந்து பயிற்சிப் பட்டறைகளில் இடம் பெறச் செய்தார்கள். வெற்றி தோல்வியைத் தாண்டி நட்பு அவளை மகிழ்ச்சிப்படுத்தியது. மற்றவரை அணுகுதல் மற்றும் வெற்றியை எட்டுவதற் கான வழிகளையும் அவளே கண்டடைந்தாள். தோல்வியை வெற்றிக்கான தோள் தட்டல் என்று புரிந்து கொண்டாள். வேகம் வேகம் என்று அனைத்திலும் ஊன்ற அவள் மனம் ஒவ்வொரு விடயத்தையும் ஆழமாகத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டியது. அதிகம் பேசியவள் தெரிந்து பேசத் தொடங்கினாள். தான் யார் என்ற தேடலுக்கான வாய்ப்பை அளிக்கும் சூழலே குழந்தைகள் மனநிலையில் மாற்றத்தை உருவாக்குகிறது. இப்பொழுது மிதுமி அனைவராலும் பாராட்டப்படும் பெண்ணாக மாறினாள். இது போல் தங்களது குழந் தைகளிடம் உள்ள பதற்றத்தை விரட்ட நினைக்கும் பெற்றோர் அவர்களது சூழலை மாற்றினால் போதும்.

## வட இலங்கை சங்கீத சபையால் நடத்தப்பட்ட தியாகராஜசுவாமிகளின் 168 ஆவது ஆராதனை



இலங்கைக்கான இந்திய துணைத்தூதரகத்தின் ஆதரவுடன் வட இலங்கை சங்கீத சபையின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை பகல் மருதனார்மடத்தில் அமைந்துள்ள வட இலங்கை சங்கீத சபையின் தற்பரானந்தன் அரங்கில் சற்குரு ஸ்ரீ தியாகராஜசுவாமிகளின் 168 ஆவது ஆராதனை விழா நடைபெற்றது.

வட இலங்கை சங்கீத சபையின் தலைவரும், யாழ்ப்பாணம் கல்வி வலய கல்விப் பணிப்பாளருமான செ.உதயகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வரவேற்புரையை சங்கீத சபையின் உப தலைவர் கலாபூசணம் சு.கணபதிப்பிள்ளையும், ஆசியுரையை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் வழங்கினார்கள்.

இசை ஆராதனையை யாழ்ப்பாணத்தின் முன்னணி சங்கீத கலைஞர்கள் கலந்து கொண்டு நிகழ்த்தினார்கள்.

(வ-86)









அ. உமாமகேஸ்வரி

# சமூக நாட்டியம் படைத்திடுவோம்



சமூகம் என்பது பல அடுக்குகளைக் கொண்டது. அங்கு உயர்வு, தாழ்வு, கற்றோர், பாமரர், பணக்காரர், ஏழை என்ற வர்க்கபேதங்கள் காணப்படுகின்றன. இவ்வாறான ஏற்றத்தாழ்வுகளே ஒவ்வொரு தனி மனிதனது முயற்சிக்குத் தூண்டுதலாகவும், அவனது வாழ்க்கையைப் போராடி வெல்வதற்கும் காரணமாக அமைகிறது. பல்வேறுபட்ட குணங்கள் படைத்த மனிதர்களால் உருவாக்கப்பட்ட சமூகத்தில், எத்தனையோ பிரச்சினைகள், சிக்கல்கள், தவறுகள் ஏற்படுவதுண்டு. அதன் முடிவுகள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தீமையையே ஏற்படுத்துவதாக அமைகின்றன. இவ்வாறான தவறுகளால் சமூகம் பாதிக்கப்படாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு சமூகத்தில் உள்ள ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உரியது. அந்தப் பொறுப்பை உணர்ந்தவர்களாக நாம் நடந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

யாழ்ப்பாண மாவட்டம் தமிழர்களின் பண்பாட்டை உலகறியச் செய்த ஒரு மாவட்டமாகும். ஆனால் கடந்த காலங்களில் அப்படியே தமிழரின் பண்பாட்டைத் தலைகீழாக புரட்டிப் போட்டாற்போன்று செயற்பாடுகளும் தவறுகளும் நடந்தேறிவிட்டன. நடந்து கொண்டேயிருக்கின்றன. இதற்கு மறைமுகமான காரணிகள் பல இருந்தாலும் வெளிப்படையான காரணிகள் என்று பார்த்தால், அதிகரித்த போதைப்பொருள் பாவனை, தாராளமாகக்கிடைக்கும் இணயப் பாவனை, குடும்பத்தில் ஏற்பட்ட சில இழப்புக்கள், அதிகரித்த சுதந்திரம், கட்டுப்பாடற்ற திரைப்பட நடிப்புரை, குடும்பத்தில் பெற்றோரின் வேலைப்பளு போன்றவற்றைக் கூறலாம். இத்தகைய சந்தர்ப்பங்களால் பாதிப்படைவது பெரும்பாலும் இளம் சந்ததியினராக இருப்பதால் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியால் நிறைந்திருக்கிறது அண்மையில் யாழ்ப்பாணம் மருத்துவ சங்கத்தினரால் விடுக்கப்பட்ட எய்ட்ஸ் பற்றிய எச்சரிக்கை மிகவும் அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது. எனவே இவ்வாறான சமூகப் பிறழ்வுகளைச் சரி செய்ய வேண்டிய பொறுப்பு எம் ஒவ்வொருவருக்கும் உரியது.

நாம் சிறுவர்களாக இருந்த காலத்தில் எமது பிரதேசத்தில் ஏதேனும் பிரச்சினையில் மக்கள் சிக்கியிருப்பார்களானால், அவற்றைத் தீர்ப்பதற்கும், அவை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குமாக பாடசாலையில் ஒரு 15 நிமிடம் ஒதுக்கப்படும். தினமும் இடம் விட்டு இடம் அவ்விடயம் சார்பாக வீதி நாடகங்கள் போடப்படும், கட்டாய சிரமதானம் மேற்கொள்ளப்படும். குறிப்பாக கொலரா, மலேரியா போன்ற தொற்றுநோய் விழிப்புணர்வுகள் பற்றி நாம் சிறு வயதிலேயே தெரு நாடகங்கள் ஊடாக அறிந்திருக்கிறோம். இவ்வாறு சமூகத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக விழிப்புணர்வை ஒவ்வொருவரும் தம்முள்ளும் தம் சகாக்களுள்ளும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமை இருக்கிறது.

பொதுவாகவே ஆற்றுகை அல்லது நிகழ்த்துகைக் கலைகளான நாடகம், நடனம் என்பவற்றை சமூகத்துக்கான ஊடகம் என்று குறிப்பிடுவதுண்டு. சமூகத்திடம் பல கருத்துக்களைக் கொண்டு செல்லும் மொழி என்று கூடக் குறிப்பிடுவதுண்டு. இதன் மூலம் சமூகத்திடம் நாம் கூற நினைக்கும் நன்மையான கருத்துக்களை இலகுவாக கொண்டு செல்ல முடியும். எனவே நான் இங்கு நாட்டியத்துறையை எடுத்துக் கொள்கிறேன். நாங்கள் சிறு வயதிலிருந்தே எமது இந்து சமயக் கதைகள் பலவற்றையும் புத்தகங்களுக்கு அடுத்தபடியாக நாட்டிய நிகழ்விலிருந்தேஅறிந்துகொண்டிருந்தோம். அவ்வாறு ஒவ்வொரு விடயங்களையும் சிறுவர்களிடத்திலும் பெரியோர்களிடத்திலும் இலகுவில் எடுத்துச் செல்லத்தக்க துணிவும், வல்லமையும், திறமையும் நாட்டியத்துறைக்கு உண்டு. அந்த வகையில் ஒரு நாட்டில் ஏற்படுகின்ற சமூக, சமய, அரசியல், பொருளாதார மாற்றங்களை வெளிப்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்களை, உத்திகளைக் கையாள நாட்டியம் போன்ற ஆற்றுகைக் கலைகளாலேயே முடியும். ஒரு சமூகத்தில் மாற்றத்தின் விசைகளை நாட்டியத்தால் தட்டிவிட முடியும். அண்மையில் கூட உதயன் பத்திரிகையில் The Interview என்ற ஆங்கிலத் திரைப்படம் அமெரிக்கா– ரஷ்யா இடையிலான அரசியலில் ஏற்படுத்திய பிரச்சினை மற்றும் மாற்றங்கள் பற்றி வாசித்திருந்தேன். இதிலி ருந்து விளங்கிக் கொள்ள முடிவது என்னவெனில் ஆற்றுகைக் கலைகள் சமூகத்தில் சில முன்னேற்றமான மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதாகும்.



பரத நாட்டியத்திலே நாட்டிய நாடகம் என்பது ஒரு தனித்துவமான படைப்பாக விளங்குகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களால் (பாத்திரங்கள்) ஒரு கதையை நிகழ்த்திக் காட்டுவதற்கு ஏற்ற அமைப்பை உடையது. நாட்டிய நாடகமாகும். தற்காலத்தில் இந்த நாட்டிய நாடகங்களில் எப்போதுமே 'மரபு மாறாத' என்ற சொற் பிரயோகத்தைப் பயன்படுத்தி பழைய பல்லவியையே பெரும்பாலும் பயன்படுத்தி வருகின்றோம். அதாவது சமயம் சார் கதைகளையே நிகழ்த்துகிறோம். அல்லது பாரதியார், ஆறுமுகநாவலர், திருவள்ளுவர் போன்ற மற்றும் பலரின் வாழ்க்கை வரலாறுகள் குறித்துப் பாடி ஆடி வருகின்றோம். திரும்பத் திரும்ப எம்மவரால் இவையே பயன்படுத்தப்படுகின்றன. இது தவறல்ல. ஆனால் அவை மாத்திரமே நாட்டிய நாடகங்களுக்குரிய கதைக்கருவாகாது. சாதாரண எண்ணுக் கணக்கில் யோசிக்கையில் இலங்கையில் ஒருவருடத்தில் நூறு நாட்டிய நாடகங்கள் மேடையேற்றப்படுமாயின் சமூகம்சார் பிரச்சினைகளைக் க்ருவாகக் கொண்ட ஐந்து நாட்டிய நாடகங்கள் தான் மேடையேற்றப்பட்டிருக்கும். இன்று எமக்கு சமயக் கதைகளைக் காட்டிலும், சமூக சீர்திருத்தக் கதைகளே தேவைப்படுகின்றன. அல்லது சம யத்தின் வழிகாட்டலில் செம்மைப்படும் சமூகம் பற்றிய கதைகளே அதிகம் வேண்டப்படுகின்றன. அதாவது சிவனையும் அவரது குடும்பத்தையும் பற்றி எங்களுக்குத் தெரியும். ஆனால் சிவ வழிபாட்டால் சிறந்து விளங்கும் அல்லது நன்மைகளைப் பெற்று சாதனைகளைத் தமதாக்கும் எத்தனையோ மனிதர்களை இன்றும் காண்கிறோம். அந்த வகையில் இன்றைய இளம்சமூகத்தில் போதைப் பொருள் பாவனை கைத்தொலைபேசிப் பாவனை, தாய் தகப்பனை மதியாத பிள்ளைகள், தேவையற்ற பிறழ்வானநடத்தைகளில் ஈடுபடும் பிள்ளைகள் போன்றவர்களது பிரச்சினைகள் ஒவ்வொரு வீடுகளிலும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றன. எனவே அத்தகைய பிரச்சினைகளை இறை வழிபாட்டால், ஆன்மிக சிந்தனையால், தியானத்தால், மன ஒழுக்கத்தால் வெல்ல முடியும் என்ற தொனியில் நாட்டிய நாடகங்களை அமைக்கலாம். அல்லது பிறழ்வான நடத்தையால் இழக்கப்படும் நன்மைகள் தொடர் பான கருத்துக்கள் அடங்கியதாக கதைகளை அமைக்கலாம். இல்லையேல் பாரதியின் கனவு இன்று எவ்வாறு பலித்திருக்கின்றது, ஆறுமுக நாவலரது சமய சிந்தனைகள் இன்று எவ்வகையில் அணுகப்படுகின்றன என்றும் கதைக் கருவை அமைக்கலாம். இவ்வாறான கருத்துக்களை முன்வைக்கும் சமூக சிந்தனைகளை மேலோங்கச் செய்யும் நாட்டிய நாடகங்களே இன்று சமூகத்துக்குத் தேவையானவை. எனவே துறைசார்ந்த ஒவ்வொருவரும் இவ்வாறான நன்மை பயக்கும் விடயங்களைக் கருத்திற்கொண்டு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.





சாதாரணமாக எல்லாவிதமான சமூக நிகழ்வுகளிலும் பெரியோர் நிறைந்த சபைகளிலும், பல்கலைக்கழகம், தனியார் கலைக்கூடங்கள் போன்ற உயர் நிலைக் கல்வி பயிலும் மாணவர்களைக் கொண்ட நிறுவனங்கள் கூட பெரும்பாலும் புஸ்பாஞ் சலி, தில்லானா, கிராமிய நடனம் போன்றவற்றுக்கே முக்கியத்துவம் தந்து மேடையேற்றுகின்றன. இவை வெறும் அழகுக்காக செய் யப்படு பவையே. சமூகத்துக்குத் தேவைப்படுவது அதுவல்ல. இயன்ற வரையிலும் இவற்றைக் குறைத்து அல்லது இவற்றுடன் மேலதிகமாக ஆக்கபூர்வமான நிகழ்வுகளை, சமூகத்துக்குத் தேவையான கருத்துக் களை உடையதாய் மேடையேற்ற முயற்சிக்க வேண்டும். இதுவே பலரது எதிர்பார்ப்பும் கூட. அதா வது சமூகத்தில் அந்தஸ்து நிலையில் உயர்வாக மதிக்கப்படுகின்ற ஒரு வரால் அல்லது கழகத்தால் வெளிக் கொண்டுவரப்படும் உண்மையான கருத்துக்கள் மக்கள் மத்தியில் விருப்புடன் ஏற்றுக் கொள்ளப்படும். எனவே அந்தஸ்தும் ஆளணியும் (மனிதவலு) உள்ள துறைசார்ந்த வர்கள் தங்களால் உருவாக்கப் படும் படைப்புக்களில் ஐம்பது சதவீத மானவற்றை யேனும் சமூகத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துப் படைக்க வேண்டும்.

இதனால் வளர்ந்து வரும் ஆசிரியர்கள் தங்களைப் பின்பற்றவும், சமூகம் பற்றிச் சிந்திக்கவும், செயற்படவும் முன்மாதிரியாக விளங்குவீர்கள் என நம்புகிறேன்.

---

## விதைத்ததில் விளைந்தது - நூலாய்வு. தேடலுக்கு விருந்தாகும் நல்ல நூல்

செ.மகேஷ்

பேச்சின் வழியாகச் சொற்கள், ஏனையோரின் காதுகளினூடே புகுந்து கவனத்தை ஈர்க்கும் கேட்டலாகி இனிக்கின்றன. அவையே சிந்தனையையும் உணர்வையும் தூண்டி மனதில் எழுச்சி தந்து சில பொழுதில் அமைதியடைந்தும் விடுகின்றன. ஆனால் எழுத்துக்களின் வழி பிறக்கும் சொற்கள், ஒரு செய்தியின், ஓர் உண்மையின், ஒரு வரலாற்றின், ஓர் இலக்கியத்தின் பதிவாகி என்றும் நிலைத்து நின்று எக்காலத்தும் அழியாத பொருளாகி விடுகின்றன. அவ்வாறு பதிவாகி அச்சேறி வெளிவந்திருக்கும் அருமையான நூலே விதைத்ததில் விளைந்தது என்ற கட்டுரைகளின் தொகுப்பாகும்.

இதனை அச்சுவேலி மாணிக்கம் ஞானலிங்கம் எழுதித் தமது அபிராமி பதிப்பகத்தால் வெளியிட்டுள்ளார்.

உதயன் நாளிதழில் அவ்வப்போது வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பு இது.

வலி கிழக்கு வலம் பாகம்–1 என்ற இந்தத் தொகுதியில் வலிகாமம் பிரதேசம் தன்னகத்தே கொண்டொளிரும் கிராமங்களையும், அவற்றில் அமைந்துள்ள கோயில்களையும் பாடசாலைகளையும் கூட்டுறவுச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், சுகாதார மருத்துவ நிலையங்கள் எனப் பலவற்றையும் தேர்ந்து ஆய்ந்து எழுதியுள்ள 82 பெறுமதி மிக்க எழுத்துப் பதிவுகள் இடம்பெற்றுள்ளன. நூலாகி நிலைத்த இப்பதிவுகள் காலத்தால் அழியாதவை.

அச்சுவேலி, நவக்கிரி, நீர்வேலி, ஆவரங்கால், கோப்பாய், புத்தூர், உரும்பிராய், இடைக்காடு, சிறுப்பிட்டி, வாதரவத்தை, கதிரிப்பாய், பத்தமேனி, புத்தகலட்டி, இருபாலை, அச்செழு, நிலாவரை, மாசிவன், வளலாய், கல்வியங்காடு ஆதியாம் நிலங்களில் வளர்ந்தும் சிறந்தும் விளங்குகின்ற கல்வி, கலை, பக்தி, தொழில், நிர்வாகம் சார்ந்தவை தொடர்புறும் கட்டுரைகள் நிறையவே இந்தத் தொகுப்பில் காணப்படுகின்றன.

வாசிப்பின் அவசியத்தைத் தூண்டும் வகையில் நூலின் உள்ளடக்கம் அமைந்துள்ளது. அவை எமது கிராமங்களில் விளைந்த விசேடங்களை விளக்கி நிற்கின்றன.

அதற்கென எழுத்தாளர் கையாண்டுள்ள மொழிநடை விருப்பினைத் தூண்டும் தொனி தந்து எளிமையும் இனிமையும் கலந்தே விரிகின்றன.

வலிகாம மண்ணின் வாசமும், வளமும் சொற்களால் சுவைபட உணர்த்தப்படுகின்றன.

வாசிப்புப் பழக்கம் இன்று அருகிப் போய்விட்ட நிலையில் தமது மண் தந்துள்ள செழிப்புக்களை வாசிக்கத் தூண்டும் தரமான நூலாக ஆக்கித் தந்துள்ள நூலாசிரியரைப் பாராட்டுவோம். இதில் பிரகாசிக் கின்ற கட்டுரைகள் அனைத்துமே உதயன் நாளிதழின் செழுமைக்குள் விளைந்தவை என்பதை உதயன் பிரதம ஆசிரியர் பெருமையுடன் கருத்துரைத்துள்ளார். கோப்பாய் பிரதேச செயலரின் வாழ்த்துச் செய் தியும் நூலுக்கு அணி செய்கிறது. நூலாசிரியர், ஓர் ஊடகவியலாளர் என்பதால் அவரது தேடலும் தெரிவும் தமிழுக்கும், தாய் மண்ணுக்கும் வளம் தரும் என நம்புவோம். சிறந்த நல்ல பதிவுகள் கொண்ட அருமையான இந்த நூல் மாணவர்களின் தேடலுக்கும் விருந்தாகும் என்பது நம்பிக்கையாகும்.



## 'துளிராய் சருகாய் உயிர்ப்பாய்' கிறிஸ்தவ பாடல்கள் இறுவட்டு வெளியீடு

கலாபூஷணம் இசைத் தென்றல் ம.யேசுதாசனின் ஆக்கத்தில் உருவான 'துளிராய் சருகாய் உயிர்ப்பாய்' கிறிஸ்தவ பாடல்கள் இறுவட்டு வெளியீட்டு விழா ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு பிரதான வீதியில் அமைத்துள்ள திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கலையருவியின் இயக்குநரும், மன்னார் மறை மாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையத்தினதும், மன்னார் தமிழ்ச் சங்கத்தினதும் தலைவருமான அருள்நேசன் அடிகளார் இறுவட்டை வெளியிட்டு வைக்க முதற் பிரதியை திருமதி மரியா யோகநாதன் (கனடா), திருமதி மரியராணி ஆரோக்கியநாதர்(லண்டன்) ஆகியோரின் சார்பாக அவர்களின் உறவினர்கள் பெற்றுக் கொண்டனர். இறுவட்டுக்கான வெளியீட்டு உரையை கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.அற்புதனும், மதிப்பீட்டு உரையை அச்சுவேலி பங்குத் தந்தை அருள்திரு சி.யே.அன்ரனிபாலாவும் வழங்கினர். (வ–23)






# மனிதகுலத்தின் எதிர்காலம் விண்வெளியில்தான்

செவ்வாய்க் கிரகத்துக்கான ஒருவழிப் பயணத்துக்கு மூன்று இந்தியர்கள் உள்ளிட்ட 100 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ள செய்தியைப் படித்துவிட்டு விண் வெளியில் குடியேறுவது எல்லாம் சாத்தியமா, தேவையா என்றெல்லாம் யோசித்துக் கொண்டிருந்தால் இதைக் கவனியுங்கள். பிரபலவிஞ்ஞானியான ஸ்டீபன் ஹொகிங், விண்வெளி பயணத்திலும், வேற்றுக் கிரகங்களில் குடியேறுவதிலும்தான் மனித குலத்தின் எதிர்காலம் இருக்கிறது என்று கூறியுள்ளார்.

எமது காலத்தின் மிகச்சிறந்த அறிவியல் சிந்தனையாளர்களில் ஒருவராகக் கருதப்படும்விஞ்ஞானியானஸ்டீபன்ஹொகிங், லண்டனில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டபோது விண்வெளிப் பயணத்தின் முக்கியத்துவம் பற்றிக் கூறினார். கெஸ்ட் ஒப் ஹொனர் என்ற சர்வதேச ரீதியில் நடத்தப்பட்ட பரிசுப்போட்டியில் வெற்றி பெற்றவருடன், லண்டன் அறிவியல் அருங்காட்சியகத்தை சுற்றிபார்த்தபடி, அவர் கேட்ட கேள்விகளுக்குஹொகிங் பதில் அளித்தார்.

அப்போது மனிதகுலத்தின் எந்தக் குணம் மாறவேண்டும், எந்தக் குணத்தை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அந்த பேட்டியாளர் கேட்டார்.




அதற்குப் பதில் அளித்த ஹொகிங், மனித குலத்திடம் மாற வேண்டும் என நான் நினைக்கும் குணம் அடுத்தவரைத் தாக்கும் மூர்க்கமான குணம். குகைகளில் வாழ்ந்த காலத்தில், அதிக உணவைப் பெறவும், துணையைத் தெரிவு செய்யவும் இது தேவைப்பட்டிருக்கலாம். ஆனால், இந்தக் குணம் இப்போது மனித குலத்துக்கே தீங்கு விளைவிப்பதாக மாறியிருக்கிறது. பெரிய அளவிலான அணு ஆயுதப் போர், மனித குலத்துக்கே அழிவை ஏற்படுத்தி விடலாம். எனவே, மனிதர்களிடம் பரிவு மேலும் மேம்பட வேண்டும் என்றார்.

விண்வெளிப் பயணம் பற்றிக் குறிப்பிட்ட ஹொகிங், நிலவுக்கு மனிதனை அனுப்பியது நாம் இன்னும் புரிந்து கொள்ளாத வகையில், மனிதகுலத்தின் எதிர் காலத்தை மாற்றி அமைத்துள்ளது. இது பூமியின் உடனடிப் பிரச்சினையை தீர்த்துவிடவில்லையென்றாலும், இவை குறித்த புதிய புரிதலை ஏற்படுத்தி, எமக்குஉள்ளேயும் வெளியேயும் பார்க்கவைத் திருக்கிறது.

நீண்டகால நோக்கில் மனித குலத்தின் எதிர்காலம் விண்வெளியில்தான் இருக்கிறது என்று நம்புகிறேன். எதிர்கால வாழ்க்கைக்கான ஆயுள் காப்பீடாக இது இருக்கிறது. மற்றக் கிரகங்களில் குடியேறுவதன் மூலம் மனித குலம் அழிவதைத் தடுக்கலாம் என்றார். சமீபத்தில்பேட்டி ஒன்றில், இயந்திர மனிதர்கள் உள்ளிட்ட செயற்கை அறிவு சார்ந்த விடயங்களால் மனித குலத்துக்கு ஆபத்து என ஹொகிங் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# ஆசைப்பட்டதை விட வேண்டாம்



இணையவன்

ஆசை இருக்கு தாசில் பண்ண, அதிர்ஷ்டம் இருக்கு கழுதை மேய்க்க என்று ஒரு பழமொழி இருக்கிறது தெரியுமா? (தாசில் என்றால் அதிகாரம் செய்தல் என்பது அர்த்தம்.) ஒரு விடயத்தின்மீது ஆசைப் பட்டால் மட்டும் போதாது, அது கைகூட வேறு பல விடயங்களிலும் கூடுதலாக வேண்டும் என்பதை கேலியாகச் சொல்லும் பழமொழி இது.

**இரு புள்ளிகள்**

கழுதை மேய்ப்பது உட்பட எந்தத் தொழிலும் இழிவானதல்ல. ஆசைக்கும், கைகூடும் வாய்ப்புக்கும் இடையே உள்ள இடைவெளியைச் சொல்வதுதான் இந்தப் பழமொழியின் நோக்கம். அதிர்ஷ்டம்தான் எல்லாமே என்றால் எமது முயற்சிகளுக்கு அர்த்தம் இல்லாமல்போகும். எனவே அதிர்ஷ்டம் என்பதைக் கைகூடுதல் என்று எடுத்துக்கொள்ளலாம்.

ஏன் ஆசைப்பட்டது கிடைக்காமல் போக வேண்டும்? அத்தகைய சூழல் உருவாவது ஏன்?

ஆசை என்பது ஒரு புள்ளி. சாதனை என்பது இன்னொரு புள்ளி. இந்த இரண்டு புள்ளிகளையும் இணைக்கும் பாலம் ஒன்று இருக்கிறது. அது பல அம்சங்களால் ஆனது. அந்த அம்சங்கள் என்னென்ன?

**அம்சங்கள்**

திறமை, வாய்ப்பு ஆகியவை அந்தப் பாலத்தின் முக்கியமான பகுதிகள். திறமை என்பது இயல்பான திறமை, முயற்சியால் மெருகேற்றப்படும் திறமை என இரு பகுதிகளால் ஆனது.

வாய்ப்பு என்பது ஏற்கனவே இருப்பது, உருவாக்கப்படுவது என்று இரு வகைப்படும். ஏற்கனவே இருக்கும் வாய்ப்புகளையும் புதிதாக உருவாகிவரும் வாய்ப்புக்களையும் அறிந்து கொள்ள விழிப்புணர்வு இருக்க வேண்டும். இல்லாத வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்ளவும் தெரியவேண்டும். உரிய வாய்ப்பு கிடைப்பது, வாய்ப்புக்களை அடையாளம் காண்பது, வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்வது, வாய்ப்புக்களை உருவாக்கிக்கொள்வது ஆகியவை நமது தொழில் வாழ்க்கையைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிப்பவை.

**வாய்ப்பு என்பது ஏற்கனவே இருப்பது, உருவாக்கப்படுவது என்று இரு வகைப் படும். ஏற்கனவே இருக்கும் வாய்ப்பு களையும் புதிதாக உருவாகிவரும் வாய்ப்பு களையும் அறிந்து கொள்ள விழிப்புணர்வு இருக்க வேண்டும்.**

**திறமைகளே எமது அடையாளம்**

திறமையை வளர்த்துக்கொள்வது பெரும்பாலும் மாணவப் பருவத்தில்தான் தீவிரமாக நடைபெறுகிறது. வாய்ப்புப் பற்றிய கவலை அதற்கு அடுத்த கட்டத்தில் வருவது.

சிலருக்குச் சில விடயங்களில் இயல்பான திறமை இருக்கும். இசை, ஓவியம், பேச்சுத் திறன், நிர்வாகம், விளையாட்டு, கற்பித்தல், உடல் திறன், தொண்டு மனப்பான்மை எனப் பலவிதமான திறமைகளாக இவற்றை அடையாளம் காணலாம்.

இந்த இயல்பான திறமைகளைக் கவனமாக வளர்த்தெடுத்தால் இந்தத் திறமைகளே எமது அடையாளமாக மாறி, எமது தொழில் வாழ்வுக்கும் அடிப்படையாக அமையும். உதாரணமாக, இசையில் திறமை பெற்ற ஒருவர் இசைக் கலைஞராகவே தனது வாழ்வை அமைத்துக்கொள்வது. விளையாட்டு, உடல் திறன், வடிவமைப்பு எனப் பல விதங்களிலும் இந்த உதாரணத்தை விரிவுபடுத்திக் கொண்டேபோகலாம்.

**பயிற்சியும், முயற்சியும்**

ஆசைக்கு ஏற்ற திறமை இயல்பாக அமைந்து விட்டால் பிரச்சினை இல்லை. அப்படி இல்லா விட்டால் அதை வளர்த்துக்கொள்ள முனைய வேண்டும். பயிற்சி, முயற்சி என்று நேரத்தைச் செலவு செய்துதிறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

ஓவியம், இசை, விளையாட்டு, எழுத்து என்று என ஏதோ ஒரு துறையில் உங்களுக்கு அடங்காத ஆர்வம் உள்ளது. ஈடுபாடு உள்ளது. ஆனால் அதில் அவ்வளவாகத் திறமை இல்லை. அப்படியானால் நீங்கள் அதிகமாக உழைத்து அதை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஆவல் எதில் இருக்கிறதோ அதில் சிறிதளவேனும் திறன் இருக்கத்தான் செய்யும். அதை மெருகேற்றுவதே உங்கள் முனைப்பாக இருக்க வேண்டும்.

ஆனால் சிலசமயம் ஆவல் இருக்கும் விடயத்தில் எவ்வளவு முயன்றாலும் திறமை வளராது. உதாரணமாக, பாட்டு. ஒருவர் எவ்வளவுதான் முயன்றாலும் தன் குரலை ஒரு அளவுக்கு மேல் மேம்படுத்தவே முடியாது. குரல் என்பது பெரும்பாலும் இயற்கையின் கொடை. அந்தக் கொடையை மெருகேற்றவே கடுமையாக உழைக்க வேண்டும். இயல்பாக நல்ல குரல் இல்லை என்றால் எப்படி உழைத்தாலும் ஒரு அளவுக்கு மேல் அதை மெருகேற்ற முடியாது. அப்படிப்பட்டவர்கள் என்ன செய்யலாம்? ஆசையை விட்டுவிடலாமா?

**கிளைகளில் கவனம்**

அவசியம் இல்லை. எதில் அடங்காத ஆர்வம், இயல்பான ஆர்வம் இருக்கிறதோ அதையே தனது தொழிலாக, தனக்கேற்ற துறையாக அமைத்துக்கொண்டால் வாழ்வில் மகிழ்ச்சி நிலவும். எனவே ஆவல் அதிகமுள்ள துறையையே தேர்ந்தெடுக்கலாம். அந்தத் துறையின் அடிப்படை ஆதாரமான அம்சத்தில் திறமையை வளர்த்துக்கொள்ள முடியா விட்டால் அந்தத் துறையின் கிளைகளில் கவனம் செலுத்தலாம்.

உதாரணமாக, பாட்டுப் பாடக் குரல்வளம் இல்லாவிட்டால் வாத்திய இசையைக் கற்றுக்கொள்ளலாம். இசைக் கலைஞர்களை ஒன்று சேர்த்து இசைக் குழுவை அமைக்கலாம். இசையில் ஞானத்தை வளர்த்துக்கொண்டு இசையமைப்பாளராகலாம். இசையை ரசிக்கும், அதுகுறித்து விவாதிக்கும் திறனை வளர்த்துக்கொண்டு இசை பற்றி எழுதலாம்.

இதேபோல இதர ஆவல்களையும் அணுகலாம். குறிப்பிட்ட ஆவல் தொடர்பான ஒரு துறையின் அடிப்படையான அம்சத்தில் பெரிதாகத் திறமையை வளர்த்துக்கொள்ள முடியா விட்டால் அதே துறையில் எம்மால் வேறு என்ன செய்ய முடியும் என்று பார்க்கலாம்.

சினிமாத்துறை உங்களுக்குப் பிடிக்கும் என்றால் அதில் நடிப்பு, இயக்கம், எழுத்து, இசை, எடிட்டிங், ஒலிப்பதிவு, ஒப்பனை, நடனம் எனத் திரைக்கு முன்னும் பின்னும் பல தொழில்கள் இருக்கின்றன. இதில் ஏதாவது ஒன்றில் திறமையை வளர்த்துக்கொண்டு உங்களுக்குப் பிடித்த துறையில் இருக்கலாம். கணினித்துறை, வடிவமைப்பு, கல்வித்துறை, எழுத்துத் துறை, விற்பனைத் துறை என்று எதை எடுத்துக்கொண்டாலும் இதே அணுகுமுறையைக் கடைப்பிடிக்கலாம்.

ஆர்வத்துக்கும் சாதனைக்கும் இடையே இருக்கும் இடைவெளியை இப்படியும் நிரப்பலாம். ஏதோ ஒன்று வரவில்லையே என ஏங்குவதற்குப் பதில், சற்றே வித்தியாசமாக யோசித்தால் தனக்குப் பிடித்த துறையிலேயே ஒருவர் சந்தோஷமாகச் சாதிக்கலாம்.

# கணினியில் சேமிக்கப்பட்டவை முற்றாக அழிந்துபோகலாம்

கணினிகளின் கருவிகள் மற்றும் மென்பொருள்கள் வழக்கற்றுப் போவதால், அதில் சேமிக்கப்பட்டிருக்கும் பெரும் எண்ணிக்கையிலான படங்கள், காணொலிகள் மற்றும் ஆவணங்கள் ஒட்டு மொத்தமாக இல்லாமற்போகும் ஆபத்து இருப்பதாக இணையத்தின் நிறுவுநர்களில் ஒருவர் தெரிவித்துள்ளார்.

டிஜிற்றல் யுகத்தில் வாழப்போகும் எதிர்கால சந்ததிக்கு, ஒரு இருண்ட யுகமாக இருக்கும் என்று இவரால் வர்ணிக்கப்படும் 21ஆம் நூற்றாண்டின், பதிவுகள் முற்றாகவோ, பெருமளவிலோ கிடைக்காமற் போகலாம் என்று கூகுள் நிறுவனத்தின் தற்போதைய துணைத் தலைவரான விண்ட் சேர்ப் கூறியுள்ளார்.

கணினி கருவிகள் மற்றும் மென்பொருள்களை என்றும் அழியாமல் இருக்கும் வகையில் டிஜிற்றலுக்கு



மாற்றி, பாதுகாப்பதற்கான ஒரு திட்டம் குறித்து கலிபோர்னியாவில் நடந்த ஒரு அமெரிக்காவின் மிகப்பெரிய விஞ்ஞான மாநாட்டில் அவர் பரிந்துரைத்துள்ளார்.